காலநிலை
மேகமூட்டம்/ மழை
மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழைக்கான சாத்தியங்கள் உண்டு

48

யாழ். - 30/=
வன்னி - 20/=

# உதயன்

சுடர்: 29 கதிர்: 348 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 23, ஞாயிறு 09.11.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily



மரம் நடுவோம்

## நுவரெலியாவில் மண்சரிவு அபாயம்

*8 பிரதேசங்கள் இனங்காணல்*

கொழும்பு, நவ.9
நுவரெலியா மாவட்டத்தில் மண் சரிவு அபாயம் நிலவுகின்ற 8 பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. எலமுல்ல, தியனில்ல, முல் ஹல் கலே, டன்சினன், சீன் தோட்டம், கியூ தோட்டம், யுனிட் கியூ மற்றும் ருவன் எலிய ஆகிய பிரதேசங்களில் மண் சரிவு அபாயம் நிலவுகின்றமை அடையாளம் காணப்பட்டுள்ளது என்று நுவரெலியா மாவட்ட செயலாளர் டி.பி.ஜி.குமாரசிறி தெரிவித்தார்.
இந்தப் பிரதேசங்களில் நிலவுகின்ற மண்சரிவு அபாயம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள 347 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 800 இற்கும் அதிகமானவர்கள் 22 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட செயலாளர் கூறினார்.
குறிப்பிட்ட பிரதேசங்களில் தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தினால் ஆய்வுகள் மேற்கொள் ளப்பட்டு உறுதிப்பட்டுள்ள நிலையில், 347 குடும்பங்களும் மீண்டும் அவர்களின் சொந்த இடங்

❖21 ஆம் பக்கம் பார்க்க

# சர்வதேசத்தின் அழுத்தம் இலங்கைக்கு போதாது

## ஐ.நாவின் அறிக்கைகளால் மட்டும் மாற்றம் வராது என்கிறது நீதி மற்றும் சமாதானத்துக்கான அமைப்பு

கொழும்பு, நவம்பர் 09
இலங்கை விடயத்தில், சர்வதேச நாடுகளின் அழுத்தம் போதாது. அவர்களினால் அல்லது ஐ.நாவினால் வெளியிடப்படும் அறிக்கைகளினால் இலங்கை அரசின் போக்கில் மாற்றங்களைக் கொண்டு வர முடியாது என்று நீதி மற்றும் சமாதானத்துக்கான அமைப்பின் தலைவர் அருட்தந்தை எஸ்.வி.பி. மங்களராஜா தெரிவித்துள்ளார்.
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன், ஐ.நா. விசாரணையை தடுக்கும் நோக்கில் இலங்கை அரசு செயற்படுகின்றது என்றும், ஐ.நா விசாரணைக்கு சாட்சியம் வழங்காமல் இருக்க பயமான சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்ததுடன் இலங்கை அரசின் செயற்பாட்டைக் கடுமையாக விமர்சித்தும் அறிக்கை வெளியிட்டிருந்தார்.
இது தொடர்பில் பி.பி.சி செய்திச் சேவைக்குக் கருத்து வழங்கியபோதே அருட்தந்தை மங்களராஜா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
ஐ.நா. விசாரணைக்கு சாட்சியமளிக்க முடியாதவாறு பொதுமக்கள் கண்காணிக்கப்படுகின்றனர். அவ்வாறு சாட்சியமளிப்பவர்களைக் கண்டறிவதற்காகக் கிராமங்

❖21 ஆம் பக்கம் பார்க்க

## புனர்வாழ்வு பெற்றவர் ரி.ஐ.டியால் கைது

யாழ்ப்பாணம், நவ 9
புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளி ஒருவரைப் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் முள்ளியவளையில் வைத்துக் கைது செய்துள்ளனர்.
அவர் 4 ஆம் மாடிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அவர் எதற்காகக் கைது செய்யப்பட்டார் என்று இதுவரை கூறப்படவில்லை. கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமத்தைச் சேர்ந்த காளிமுத்து மகேந்திரன் (வயது-33) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். இரண்டு பிள்ளை

❖21 ஆம் பக்கம் பார்க்க

# ஐ.நா. ஆணையாளர் மீது சீறிப் பாய்கிறது இலங்கை

## பொறுமையிழந்து நிந்திக்கிறார் என்றும் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 9
ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் ஐக்கிய நாடுகளின் இறைமையுள்ள தேசமொன்றை நிந்தித்துள்ளார் எனக் குற்றஞ்சாட்டியுள்ள இலங்கை அரசு, அவர் பொறுமையிழந்து வார்த்தைப் பிரயோகங்களைப் பிரயோகிக்கிறார் எனவும் குற்றஞ்சாட்டியுள்ளது.
இலங்கை குறித்த அவரது கடும் அறிக்கைக்குப் பின்னர் அவருக்கு ஜெனிவாவுக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க அனுப்பி வைத்துள்ள கடிதத்

❖21 ஆம் பக்கம் பார்க்க



## அமெரிக்காவின் கருத்துக்கு சொல்ஹெய்ம் வரவேற்பு



கொழும்பு, நவ. 09
ஐக்கிய நாடுகள் சபைக்கு ஒத்துழைப்பு வழங்குவோரை மௌனமாக்க இலங்கை அரசு முற்படுவதற்கு எதிராக அமெரிக்கா வெளியிட்ட கருத்தை நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் வரவேற்றுள்ளார்.
ஐ.நாவுக்கு ஒத்துழைப்பு வழங்குவோரை மௌனமாக்க இலங்கை முற்படுவதாகவும்,

❖21 ஆம் பக்கம் பார்க்க

## சீன நீர்மூழ்கிக் கப்பல்களால் அமெ., இந்தியா கடும் சினம்

### கொழும்பு வரும் அவற்றை கண்காணிப்பதற்கு முடிவு



கொழும்பு, நவ. 09
சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு அடிக்கடி வரத் தொடங்கியுள்ளதை இந்திய மற்றும் அமெரிக்கக் கடற்படைகள் எச்சரிக்கையுடன் கண்காணித்து வருவதுடன், இலங்கைக்குப் பதிலடி கொடுக்கும் நடவடிக்கைகளையும் அவை முன்னெடுத்துள்ளன என்று ரைம்ஸ் ஒவ் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது.
இந்தியப் பெருங்கடலில், சீனக் கடற்படையின் நீர்மூழ்கிகளின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதையடுத்து, இந்திய மற்றும் அமெரிக்கக் கடற்படையினர் இணைந்து நடத்தும் கூட்டுப் பயிற்சியை மேலும் விரிவாக்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.
இதற்கமைய, இருநாட்டுக் கடற்படைகளும், இணைந்து மேற்கொள்ளும் மலபார் போர்ப் பயிற்சியில், அணுசக்தி நீர்மூழ்கிகள் மற்றும் விமானந் தாங்கிப் போர்க் கப்பல்களையும் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், மேலும் பல நாடுகளையும் இந்தப் பயிற்சியில் இணைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இந்தியப் பெருங்கடலில் சீன நீர்மூழ்கிகளின் நடமாட்டங்

❖21 ஆம் பக்கம் பார்க்க

# குடாநாட்டில் வயிற்றோட்டம்

## நாளாந்தம் 30 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ 9
யாழ்.மாவட்டத்தில் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தற்போது நாளாந்தம் 30 பேர் வரை வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சை பெறுகின்றனர் என்று யாழ்.பிராந்திய சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.
கடந்த இரண்டு மாதங்களில் சுமார் 600 தொடக்கம் 800 பேர் வரை வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை தற்போது அதிகரித்து நாளாந்தம் சுமார் 30 பேராக உயர்ந்துள்ளது.
அனைத்து வயதினரும் வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களில் 5 வயதுக்கு உட்பட்ட சிறார்கள் பாதிக்கப்படுவது அதிகமாகவுள்ளது.இந்த விடயத்தில் மிக அவதானமாக இருக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.
சண்டிலிப்பாய், பருத்தித்துறை, உடுவில், கோப்பாய், ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவு கள் உட்பட பல பகுதிகளில் இவ்வாறான தொற்று காணப்படுகின்றது.

❖21 ஆம் பக்கம் பார்க்க

## குடிதண்ணீரை சுத்தப்படுத்துக

யாழ்ப்பாணம், நவ 9
அநேகமான நோய்களுக்குக் காரணம் குடிதண்ணீரே என்பது தெரியவந்துள்ளதால் அதனைச் சுத்தப்படுத்திப் பயன்படுத்துவது தொடர்பிலான விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று யாழ்.பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தெரிவித்தனர்.

❖21 ஆம் பக்கம் பார்க்க

## 29 ஐஸ்கிறீம் கடைகளில் சுகாதாரமான உற்பத்திகள்

### ஏனையவற்றுக்கும் விரைவில் அனுமதி

யாழ்ப்பாணம்.நவ.9
குடாநாட்டில் சுகாதாரமான முறையில் இயங்கும் 29 ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களுக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அனுமதி வழங்கியுள்ளது. ஏனைய ஐஸ்கிறீம் நிலையங்களுக்கும் இன்னும் இரு வாரங்களில் அனுமதி வழங்கப்படவுள்ளன. பொதுமக்கள் அச்சமின்றி இனிச் சுகாதாரமான ஐஸ்கிறீமைப் பருக



❖21 ஆம் பக்கம் பார்க்க

## இரண்டாவது இரவு ரயில் கொழும்பிலிருந்து யாழுக்கு

கொழும்பு, நவ. 09
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் மேலதிக தபால் ரயில் ஒன்று சேவையில் ஈடுபடுத் தப்படும் என்று தெரிவிக்கப் படுகிறது.
ரயில்வே திணைக் களத்தின் பொது முகாமையாளர் விஜய அமரதுங்க இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.
மேலதிக தபால் இரவு ரயில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து இரவு 10 மணிக்கு புறப்படும் என்றும், முதலாவது ரயில் அங்கிருந்து இரவு 7.45 மணிக்கு பயணத்தை தொடங்கும் என்றும் பொது முகாமையாளர் தெரிவித்தார்.
மேலதிக இரவு ரயிலில் மூன்றாம் வகுப்புப் பெட்டிகள் ஐந்தும், இரண்டாம் வகுப்புப் பெட்டிகள் மூன்றும் பொருத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

"சாகுமுன் உன் பாட்டன் நாட்டிய பழமரங்களைக் கேட்டுப்பார், உனது பரம்பரையின் கனவுகளை இன்னமும் அது வைத்திருக்கக் கூடும்"

- கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன்

## கரு ஜெயசூரியவுக்கு ஜனாதிபதி வாழ்த்து

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரியவைத் தொலைபேசியூடாகநேற்றுச் சனிக்கிழமை தொடர்பு கொண்டுதனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் கரு ஜெயசூரியவைப் பொது வேட்பாளராகக் களமிறக்குவதற்குப் பொது எதிரணி தீர்மானித்துள்ளதாக வெளியான செய்திகளை அடுத்தே ஜனாதிபதி, அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

பொது வேட்பாளர் தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானம் எட்டவில்லை என்று ஜனாதிபதியிடம் தெரிவித்த கரு ஜெயசூரிய, இன்னும் பல நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் இதன்போது தெரிவித்துள்ளார். (த)

# தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களை ஒன்றிணைப்பார் பொது வேட்பாளர்

## மனோ கணேசன் கூறுகிறார்

கொழும்பு, நவ. 9

வடக்கு, கிழக்கு, மலையகம், மேற்கு,தெற்கு ஆகிய அனைத்து பிராந்தியங்களிலும் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களைச் சிங்கள மக்களுடன் ஒன்று சேர்க்கும் வேட்பாளராகவே பொது வேட்பாளர் அமைவார் என முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஜனநாயக இளைஞர் இணையக் கலந்துரையாடலின்போது ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொது மேடையை உருவாக்கி, பொது வேட்பாளரை முன்னிறுத்தும் நடவடிக்கைகள் இப்போது இறுதிக் கட்டத்தை அடைந்து கொண்டிருக்கின்றன. பொது எதிரணியில் ஆரம்ப கட்டத்தில் இடம்பெறும் கட்சிகள், முன்னிறுத்தப்படப்போகும் வேட்பாளர் ஆகிய இரண்டு முக்கிய விடயங்களும் தற்போது அதிகாரபூர்வமற்ற முறையில் முடிவாகியுள்ளன.

இந்த நாட்டில் வாழும் அனைத்து இன, மதத்தவர்களை ஒரு முகப்படுத்தும் குறைந்தபட்ச வேலைத்திட்டத்தின் அடிப்படையிலேயே பொது எதிரணிக் கூட்டமைப்பு அமையும்.

தேசிய இனப் பிரச்சினை தொடர்பாகத் தீர்வுத் திட்டம் எதுவும் பொது எதிரணித் தேர்தல் அறிக்கையில் முன்வைக்கப்படாது. இத்தகைய திட்டம் முன்வைக்கப்படவேண்டும் என்றும், அதை வைத்துக் கொண்டு சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத் தீயைக் கிளறிவிட்டு அதில் குளிர்காய்ந்து வெற்றி பெற அரசு தரப்பு எதிர்பார்த்து இருப்பது எமக்கு தெரியும். எனவே அரசின் அந்த எதிர்பார்ப்பை நாம் ஈடேற்ற போவதில்லை. ஜனாதிபதி தேர்தலில் சிங்கள மக்களிடம் இனவாதத்தைக் கிளறி வெற்றிபெற எவருக்கும் எதிரணி, தமிழ், முஸ்லிம் கட்சிகள் இடந்தராது என நம்புகிறேன்.

எனினும் இந்த நாட்டில் தேசிய இனப் பிரச்சினை ஒன்று தீர்க்கப்படாமல் இருக்கின்றது என்பதையும், அதைத் தீர்க்கக் கடந்த காலங்களில் இன்றைய



ஜனாதிபதி உட்பட இந்த நாட்டின் பல்வேறு சிங்கள தலைவர்கள், தமிழ் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தினார்கள் என்ற குறைந்தபட்ச அடிப்படையைப் பொது எதிரணி ஏற்றுகொள்ளும் - என்றார். (த)

# பாதுகாப்பான காணிகள்,வீடுகள் மலையக மக்களுக்கு வேண்டும்

## தோட்டத் தொழிலாளர் சங்கங்கள் அரசிடம் கோரிக்கை

கொழும்பு, நவ. 9

தோட்டத் தொழிலாளர்களுக்கு உயிராபத்து ஏற்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ள தோட்டத் தொழிலாளர்கள் சங்கங்கள், அனைத்துத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் காணி, வீடு ஆகியவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரியுள்ளன.

2005ஆம் ஆண்டு மஹிந்த சிந்தனையில் வழங்கப்பட்ட வாக்குறுதியில் உறுதியளிக்கப்பட்டுள்ளவாறு தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் காணியொன்றும் வீடொன்றையும் அமைத்துக்கொள்வதற்கு சலுகைகளுடனான கடனொன்றை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் அந்தச் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

ஏறத்தாழ 180 ஆண்டுகளாகவே மலையகத்தில் வாழ்ந்து வரும் இந்த மக்கள் இந்த நாட்டின் தேசிய வருமானத்துக்குப் பெரும் பங்களிப்பை வழங்கி வருவதால் அவர்கள் வாழ்வதற்கு உகந்த வீடொன்றை அமைத்துக் கொடுப்பது அரசின் பொறுப்பும் கடமையும் எனவும் அவை மேலும் கூறியுள்ளன.

இதேவேளை, வசிப்பதற்கு உகந்த வீடு, அன்றாட வேதனத்துக்குப் பதிலாக மாதாந்தச் சம்பளம் பெறுவது தொடர்பான மலையக மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசு திறனற்றுப் போயுள்ளதாக அகில இலங்கை தோட்டத் தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவர் ராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

கொஸ்லந்தை மண்சரிவு சம்பவமானது மலையக மக்கள்முகம் கொடுத்திருக்கும் சிரமங்களின் ஆரம்ப சந்தர்ப்பமேயெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொஸ்லந்தை இடரின் பின்னராவது அதிகார வர்க்கங்களின் கண்கள் மலையக மக்களின் பக்கம் திரும்பவேண்டியுள்ளது எனவும் சந்திரசேகரன் குறிப்பிட்டுள்ளார். (த-22)

# பெருந்தோட்டத் தரிசு நிலங்களை அந்த மக்களுக்குப் பகிர்ந்தளிக்குக

## வேலாயுதம் எம்.பி கோரிக்கை

கொழும்பு.நவ.9

பெருந்தோட்டத்தில் 34 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் காணப்படுவதாகக் கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையில் அரசு தெரிவித்துள்ளது. அவ்வாறு இனங் காணப்பட்டுள்ள தரிசு நிலங்களைப் பெருந்தோட்டத் துறை தொழிலாளர்களுக்குப் பகிர்ந்தளித்து அந்த நிலங்களில் தேயிலை அபிவிருத்தியை மேற்கொள்ள அவர்களுக்கு தேவையான வளங்களை அரசு வழங்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கே. வேலாயுதம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குறிப்பிட்ட நிலங்களில் வீடமைப்பை மேற்கொள்வதற்கான பாதுகாப்பான பகுதிகளில் தனித்தனி வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க அரசு தேசிய வீடமைப்புக் கொள்கைத் திட்டம் ஒன்றை உருவாக்கிச் செயல்படுத்தவேண்டும்.

அத்துடன் பெருந்தோட்ட தொழிலாளர்களின் தேசிய வீடமைப்புக் கொள்கையை மாகாண சபைகள், மத்திய அரசு, எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து பரந்த எண்ணத்தோடு ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு அமைக்கப்படும் வீடுகளிலிருந்து தங்களுக்கு விருப்பமான தொழில்களை, விரும்பிய இடத்தில் மேற்கொள்வதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

பெருந்தோட்டத் துறையில் காணப்படுகின்ற வேலையில்லாப் பிரச்சினை, குறைந்த வருமானம் போன்ற நிலைகளிலிருந்து இந்தச் சமூகத்தை விடுதலை செய்யத் தேவையான- பொருத்தமான வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள கூடிய தொழில் பயிற்சியைப் பெருந்தோட்டத்துறை இளைஞர்களுக்கு வழங்கவேண் டும்.

மேலும் தேசிய வருமானத்தின் முதுகெலும்பாகச் செயற்படும் தோட்ட தொழிலாளர்களின் எதிர்காலச் சந்ததியினர் தொழில்நுட்பத் துறையில் முன்னேற்றம் காணும் வகையில் தொழிற்பயிற்சி நிலையங்களை உருவாக்குவதன் மூலம் மலையகத்தில் நிலவும் வேலைவாய்பு பிரச்சினையை நிவர்த்தி செய்ய முடியும் - என்றார். (த-14)

## ஓடிய ரயிலிலிருந்து இறங்கியவர் தவறி விழுந்து தலையில் காயம்

தென்மராட்சி, நவ.9

ரயில் புறப்பட்ட பின்னர் இறங்கிய நபர் மேடைக்கு வெளியே வீழ்ந்ததில் தலையில் பலத்த காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு மீசாலையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து தபால் ரயிலில் சென்ற இந்த நபர் மீசாலை ரயில் நிலையத்தில் இருந்து ரயில் புறப்பட்ட பின்னரே தான் இறங்க வேண்டிய இடம் வந்து விட்டதை உணர்ந்தார். உடனே ரயிலிருந்து இறங்கியபோது ரயில் மேடையை விட்டு தாண்டிச் சென்றது. இதனால் அவர் நிலத்தில் வீழ்ந்து படுகாயமடைந்தார்.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த தம்பிள்ளை கிருபானந்தன் (வயது-40) என்பவரே காயமடைந்தவராவார். இவர் சாவகச்சேரி மருத்துவமையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (த-9)

## உருக்குலைந்த சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், நவ 9

பொன்னாலைக் கடற்கரையை அண்மித்த காட்டுப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று இனங்காணப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுப் பிற்பகல் அதனை இனங்கண்ட பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். அது யாருடையது என்று இனங்காணப்படவில்லை. (த-101)

# தொப்பி தனக்கு அளவென்பதால் போட்டுக்கொண்டார் அனந்தராஜ்

## சி.வி.கே.சிவஞானம் இப்படிப் பதிலடி

யாழ்ப்பாணம், நவ. 9

தொப்பி அளவென்பதால் ஊழல் முறைகேடு விடயத்தில் தனது நாக்கையும் மூக்கையும் நுழைக்கிறார் அனந்தராஜ் என்று தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம்.

உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளை வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் குழப்புகின்றார் என வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் அனந்தராஜ் முன்வைத்த குற்றச் சாட்டுக்குப் பதிலடியாகவே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

முதலில் நான் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் துணைப் பொதுச் செயலாளரும் உள்ளூராட்சி மற்றும் கூட்டுறவுத்துறைக்குப் பொறுப்பான துணைப் பொதுச் செயலாளரும் கூட என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அத்துடன் மாகாணப் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

வல்வெட்டித்துறை நகர சபையின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டு ஓய்வு நிலை நீதிப தி ஒருவரின் விசாரணை முடிவுற்று உள்ளூராட்சி அமைச்சின் இறுதி முடிவு எடுக்கப்படவுள்ள நிலையில் அந்த விடயம் தொடர்பாக நான் எதையும் கூற விரும்பவில்லை.

எனினும் கடந்த ஐந்தாம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நெல்சிப் திட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் முறைகேடுகள் பற்றி பிரஸ்தாபித்து வல்வெட்டித்துறை நகர சபை மற்றும் பருத்தித்துறை பிரதேச சபையில் நெல்சிப் கொடுப்பனவு சம்பந்தமான கணியச் சிட்டையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களைக் காண்பித்தே கருத்துக்களைத் தெரிவித்திருந்தேன்.

வல்வெட்டித்துறை நகர சபையின் ஆற்றங்கரை வீதிவேலை தொடர்பான கேள்விப் பத்திரத்தின் இணைப் பிரதியில் ஐந்தாவது விடயத்தில் 948.50 மீற்றர் கிரவல் பரவுதல் விடயத்துக்கு 900 ரூபா வீதம் மொத்தம் 8,53,650 ரூபா குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த ஆவணம் சீல் செய்யப்பட்ட உறையில் வைக்கப்படுவது. எனினும் செயற்பாடுகளுக்கு பாவிக்கப்படும் மூலப் பிரதியில் ரூபா 900 இற்கு முன்பு ஒரு தானத்தையிட்டு ரூபா 1900 என்று மொதத்தத்தில் ஒரு தானத்தை முன்பிட்டு 18, 53,650 என்று இருந்தமை காணப்பட்டது. எனினும் 948.5X1900 க்கு ரூபா 18,02,150 ஆகும். அவ்வாறான ஒரு திருத்தம் ரூபா 18, 53,650 க்கு மேல் எழுதப்பட்டிருந்தமையும் காணப்பட்டது.

இந்த முறைகேட்டேயே நான் கூறியிருந்தேன். இந்த ஊடகவியலாளர் சந்திப்பின் முழுமையான ஒலிப்பதிவு மேற்கொள்ளப்பட்டது.

அதில் இந்தக் கொடுப்பனவை ஆரம்பத்திலிருந்து பரீசீலித்து சிபார்சு செய்தவர்கள், அங்கீகரித்து, கொடுப்பனவு செய்யும் உத்தியோகத்தர்கள் அதிகாரிகள் கட்டாயம் இதற்குப் பொறுப்பு என்றே கூறியிருந்தேன். இந்தக் கொடுப்பனவு வல்வெட்டித்துறை நகர சபையிலேயே மேற்கொள்ளப்பட்டது.

மேலும் இதற்கான விசாரணைகள் நடைபெறும் எனவும்தெரிவித்தேன். திரு. அனந்தராஜ் பற்றி எதுவும் கூறவில்லை.

தொப்பி அளவென்பதால் இந்த விடயத்தில் நாக்கையும், மூக்கையும் அறிக்கை விடுவதில் விற்பன்னராக இவர் நுழைக்கின்றார் என, நினைக்கின்றேன். எல்லா விடமும் முழு விசாரணையில் தெரிய வரும் போது பொறுப்புக்கள் தீர்மானிக்கப்படும் - என்றார். (த-9)

# ஆசிரியர் இடமாற்றம் நீதிமன்றினால் நிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ. 9

முள்ளந்தண்டு பாதித்த ஆசிரியருக்கு வெளிமாவட்டப் பாடசாலைக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை நிறுத்துவதாக அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்ததையடுத்து அதிகாரிகளுக்கு எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு திரும்பப் பெறப்பட்டது.

யாழ்.மேல் நீதிமன்றில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் வழக்குப் பரிசீலிக்கப்பட்டது. குறித்த ஆசிரியர் யாழ்.வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் பணிபுரிந்து வருகிறார். அவருக்கு முள்ளந்தண்டுப் பாதிப்பு உள்ளது. அதனால் தான் வெளிமாவட்டப் பாடசாலைக்குச் சென்று வருவது சாத்தியமில்லை என்று மருத்துவ அறிக்கையும் சமர்ப்பித்துச் சட்டத்தரணி பி.மோகனதாஸ் ஊடாக யாழ்.மேல் நீதிமன்றில் எழுத்தாணை ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

அதனை மேல்நீதிமன்று பரிசீலித்திருந்தது. கடந்த வெள்ளிக்கிழமை தவணையின்போது மேல்நீதிமன்றில் முன்னிலையாகியிருந்த கல்வி அதிகாரிகள் அவருக்கு வெளிமாவட்டத்துக்கு இடமாற்றம் செய்வதை நிறுத்துவதாகத் தெரிவித்தனர்.

இதனையடுத்து அவரது வீட்டுக்கு அருகாமையில் உள்ள பாடசாலைக்கு இடமாற்றம் வழங்குமாறு கல்வி அதிகாரிகளுக்கு நீதிமன்று உத்தரவிட்டது. (த-4)

## வியாபார உரிமம் பெறாத கடைகள் மீது நடவடிக்கை

சாவகச்சேரிநகரசபைஎல்லைக் குட்பட்ட பகுதிகளில் இதுவரை வியாபார உரிமக் கட்டணம் செலுத்தாத வர்த்தக நிலையங் கள் மீது சட்ட நடவடிக்கை எடுக் கப்படவுள்ளது.

வருட ஆரம்பத்தில் வியாபார நிலையம் நடத்துவதற்கான உரிமம் மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர்பெற்றுக்கொள்ளவேண் டுமென அறிவித்தல்கள் வழங் கப்பட்டும் இதுவரை உரிமக் கட்டணம் செலுத்தி உரிமச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாத வர்த்தக நிலையங்கள் மீதே நடவடிக்கை எடுக்கப்படவுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னோடியாக சபை உத்தியோகத்தர்கள் வர்த்தக நிலையங்களுக்குச் சென்று சிவப்பு அறிவித்தல்கள் வழங்கி உரிமக் கட்டணம் செலுத்த இறுதிச் சந்தர்ப்பம் வழங்கி வருகின்றனர். (த-9)

## தீவகப் பிரதேசங்களில் போதிய மழை இல்லை

### குடிதண்ணீருக்காக அலையும் மக்கள்

யாழ்ப்பாணம், நவ. 9

தீவுப் பகுதியில் போதிய மழை பெய்யாததினால் நீர் நிலை கள் வறண்டு வருவதாக வும், அத்துடன் குடிதண்ணீ ருக்குத் தொடர்ந்தும் அங்கு பற்றாக்குறை நிலவி வருவ தாகவும் தெரிவிக்கப்படுகின் றது.

ஊர்காவற்றுறை தம்பாட்டி பிரதேசத்துக்குத் தொடர்ந்தும் பவுசர் மூலம் குடிதண்ணீரை எடுத்துச் சென்று விநியோகிப் பதில் வடமாகாண விவசாய அமைச்சுஈடுபட்டுவருகின்றது. கல்வியங்காட்டில் இருந்து இரண்டு தடவைகள் ப்வுசர் மூலம் குடிதண்ணீர் அங்கு எடுத்துச்செல்லப்பட்டுஅங்குள்ள மக்களுக்கு விநியோகிக்கப் பட்டு வருகின்றது. இதனை விட மண்டைதீவு, வேலணை போன்றஇடங்களிலும்தொடர்ந் தும்குடிதண்ணீருக்குப் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் உள்ள சில மக்கள் யாழ். நகரில் இருந் தும் குடிதண்ணீரை எடுத்துச் செல்கின்றனர்.

தீவுப் பகுதியில் மழை வீழ்ச் சியும் மிக மிகக் குறைவாக உள்ளமையே இந்தத் தண் ணீர்தட்டுப்பாட்டுக்குக்காரணம் என்று கூறப்படுகின்றது. (த-17)

## சிறுபான்மை இன மக்கள் மீதான ஆதிக்கத்தை விரும்பாதவர் ஜீ.ஜீ

### நினைவு நிகழ்வில் விநாயகமூர்த்தி எம்.பி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.9

ஒரு பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனம் மீது ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்பதே அமரர் ஜி.ஜி.பொன் னம்பலத்தின் கருத்தாகும் என யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் அ.விநாய கமூர்த்தி தெரிவித்தார்.



அமரர் ஜி.ஜி.பொன்னம்பலத் தின் 113ஆவது பிறந்ததின நிகழ்வையொட்டி நேற்றுக் குருநகரில் உள்ள அன்னரது உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ் சலி செலுத்தும் நிகழ்வு நடை பெற்றது.

முன்னாள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில் தலைமை யில் நடைபெற்ற இந்த நிகழ் வில் நாடாளுமன்ற உறுப் பினர் அ.விநாயமூர்த்தி மேலும் கூறியதாவது:-

சேர். பொன் இராமநாதன், சேர். பொன் அருணசலம் ஆகிய தலைவர்களின் பின் இருந்த வெற்றிடத்தை நிரப் பியவர் ஜீ.ஜீ. அதாவது தமிழர்களுக்கு ஒரு தன் நிகரில்லா தலைவராகத் திகழ்ந்த அவர் 1939 இல் அரச சபையில் சமநிலைப் பிரதிநிதித்துவம் பற்றிக் குறிப் பிடும்போது, இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளாக நாம் இங்கு வாழ்ந்து வந்திருக் கிறோம். தமிழ் சமூகத்தின் ஒரு கிளையினர் சிங்களவர் களை விட நீண்ட காலம் இங்கு வாழ்ந்து இருக்கின்ற னர். எனவே எமது தாயகம், அரசியல் ரீதியாகவும் வேறு வகையிலும் நிரந்தர உரித் துக்களைக் கோருவதற்குச் சிங்கள மக்களுக்கு உள்ள அதே உரிமை எமக்கும் உண்டு. நாம் வேண்டப்படாத அந்நியர்களாக நடத்தப்படு வதை ஏற்றுக்கொள்ள முடி யாது எனத் தெரிவித்ததுடன் சேர்.வில்லியம் மனிங் அரசி யல் சீர்திருத்தத்துக்கு அமை யவேசமபிரதிநிதித்துவக் கோட் பாட்டை முன்வைத்திருந்தார்.

ஜி.ஜி.பொன்னம்பலத்தின் விவாதத் திறமையினாலேயே பிரிவு-29 போன்ற சில பாது காப்புக்களைச் சிறுபான்மை யினரின் நன்மை கருதி அர சியல் சாசனத்தில் உட்புகுத்த வேண்டும் எனச் சிபார்சு செய் யப்பட்டது. தமிழ் மக்களின் உரிமைக்காகவும் நலன் களுக்காகவும் தனது இறுதி வரை அரசியல் ரீதியாகப் போராடிய தலைவர் அவர்- என்றார். (த-7-23)

## குருநகரில் மின்னல் தாக்காதிருக்க இடி தாங்கிகள் அமைக்கவேண்டும்

### அரச அதிபரிடம் கோரிக்கை

குருநகர், நவ.9

குருநகர்ப் பகுதியில் வசிக்கும் மக்களை இடி, மின்னல் தாக் கத்திலிருந்து பாதுகாப்பதற் காக குருநகர் பகுதியில் இடி தாங்கிகளை அமைக்க நட வடிக்கை எடுக்குமாறு யாழ். அரச அதிபரைக் கோரி மனு ஒன்று குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப் பால் அனுப்பி வைக்கப்பட் டுள்ளதாக இந்த அமைப்பின் செயலாளர் அ.க.ஏனஸ்ற் தெரி வித்தார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது:-

2010 ஆம் ஆண்டு தொடக் கம் குருநகர்ப் பகுதியில் பல இடங்களில் இடிதாங்கிகள் அமைக்கப்படவேண்டும் என்று தங்களிடமும் பிரதேச செயலாளரிடமும் மனு சமர்ப் பித்திருந்தோம். ஆனால் இது வரை குறிப்பிட்ட இடங்களில் இடிதாங்கிகள் அமைக்கப்பட வில்லை.

எமது கிராமமானது ஜே.68, 69,70 71, 72 ஆகிய ஐந்து கிராம சேவையாளர்கள் பிரிவுகளைக் கொண்டதா கும். ஆகவேதான் குறிப்பிட்ட இடங்களில் இடிதாங்கிகள் அமைக் குமாறு கேட்டிருந் தோம்.

ஆனால் இவைகளை அமைக்கும் நோக்கம் இருப் பதாகத் தெரிய வில்லை. தற்போது இயற்கை இடர் ஏற்ப டுகின்ற காலமாகை யால் அதற்கான நட வடிக்கையை மேற் கொண்டு எமது மக் களை இடி, மின்னல் தாக்கத்திலிருந்து காப் பாற்றுமாறும் இடி, மின் னல் தாக்கத்தினால் பல இடங்களில் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டுள்ள தாகப் பத்திரிகைகள் வாயிலாக அறியக் கூடியதாகவும் உள்ள துடன் இந்த நிலைமை எமது பகுதியிலும் ஏற் படாது ஆவன செய்யு மாறும் கேட்டுக்கொள் கிறேன்.

எமது பகுதி யில் முன்பு இடி.மின்னல் தாக்கம் ஏற்பட்டுக் கட்டடச் சேதம் ஏற்பட்டமை யால் இப்படியான தாக்கம் எதிர்காலத் திலும் ஏற்படாமலிருக்க இதனை விரைவாக அமைக்க வேண்டும்- என்றுள்ளது. (த-51)




## வயல்களுக்குள் உட்புகும் கடல் நீர்

### கிழக்கு அரியாலை விவசாயிகளின் நெற்செய்கை பாதிப்பு கடல் நீர் தடுப்பு அணைகள் அகற்றப்பட்டமையே காரணம்

கொழும்புத்துறை, நவ.9

கிழக்கு அரியாலைப் பகுதி யில் கடற்கரையோரமாக உள்ள நெற்செய்கை மேற் கொள்ளப்படும் வயல்நிலங் களில் கடல் நீர் உட்புகும் அபாயம் காணப்படுவதாக அந்தப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

பிள்ளையார் கோவிலடியில் இருந்து முனைப்பகுதி வரை உள்ள வயல்களே இவ்வாறு பாதிப்பை எதிர்நோக்குவ தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பகுதியில் இடப்பெயர் வுக்கு முன்னர் வரை இருந்து வந்த கடல்நீர் தடுப்பு அணை மக்கள் இடம்பெயர்ந்திருந்த காலத்தில் அகற்றப்பட்டமையே இதற்குக் காரணமென விவ சாயி ஒருவர் தெரிவித்தார்.

பல வருடங்களாக இந்தப் பகுதியில் நெற்செய்கை மேற் கொள்ளப்பட்டு வரும் நிலை யில் கடல்நீர் தடுப்பு அணை யின்மையால் மாரி காலத்தில் கடல்நீர் வயல்நிலங்களுக் குள் உட்புகுந்து பயிர்களை அழித்து வருகின்றது. இதனால் வயல் உவர்த்தன்மையடை வதால் போதிய விளைச்சலைப் பெறமுடியாதுள்ளதாக விவசாயிகள் கவலை தெரி விக்கின்றனர்.

எனவே நல்லூர் பிரதேச சபை, கமநல சேவைகள் நிலையம் என்பன இந்த விடயத்தில் கவனமெடுத்து கடல்நீர் தடுப்பு அணை அமைத்து விவசா யத்தை ஊக்குவிக்க வேண்டு மென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-135)

## கால்நடை வைத்திய நிலையம் ஜனவரி முதல் மூடப்படுகிறது

வலி.தென்மேற்கு, நவ.8

வலி.தென்மேற்கு பிரதேச சபை வளாகத்தில் கடந்த இரு வருடங்களுக்கு மேலாக இயங்கி வரும் உப கால்நடை வைத்திய நிலையம் பிரதேச சபையின் பாதுகாப்புக் கருதி யும் அங்குள்ள முன்பள்ளி மாணவர்களின் நலன் கருதி யும் ஜனவ்ரி மாதத்திலிருந்து மூடப்படவுள்ளது.

இந்த கால்நடை வைத்திய நிலையத்தைச் சொந்தக் கட்டடத்தில் இயங்க வைப்பதற் காக மானிப்பாயைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் மானிப் பாயிலிருந்து இடிகுண்டுக்குச் செல்லும் வீதியில் ஐந்து பரப் புக் காணியை இலவசமாக வழங்கியதைத் தொடர்ந்து கட்டடம் அமைப்பதற்கான ஒழுங்குகள் மேற் கொள்ளப் பட்டன.

இந்த நிலையில் இதனை மானிப்பாயில் அமைப்பதற் குப் பண்டத் தரிப்பு பிரதேசத் தைச் சேர்ந்த மக்கள் கடும் எதிர்ப்புத் தெரி வித்ததைத் தொடர்ந்து சில அதிகாரிகளின் ஆதரவுடன் வைத்திய நிலை யம் பண்டத் தரிப்பில் அமைக் கப்பட்டு இயங்கி வருகிறது.

வலி.தென்மேற்கு பிரதேசத் தில் மானிப்பாய்,சுதுமலை, நவாலி, ஆனைக்கோட்டை ஆகிய கிராமங்களில் கோழிப் பண்ணையாளர்களும் கால் நடை வளர்ப்போரும் அதிகம் உள்ளதால் மானிப்பாயில் ஒரு உப கால்நடை வைத்திய நிலையத்தை அமைத்துத் தருமாறு கோரப்பட்டது.

இதனையடுத்து வலி.தென் மேற்குப் பிரதேசசபை வளாகத்தில் ஒதுக்குப்புறமா வுள்ள ஒரு சிறிய கட்டடத்தை வாடகைக்கு எடுத்து கால் நடை வைத்திய நிலையத்தை திறந்துவைத்தனர்.

இந்த நிலையில் காலையிலி ருந்து மாலை வரை இந்த வைத்திய நிலையம் திறந்தி ருப்பதால் பிரதேச சபையின் பாது காப்பு கேள்விக்குறியாக இருப்பதுடன் வளாகத்துக் குள் கால் நடை வைத்திய நிலையத் துக்கு அருகாமையி லுள்ள முன்பள்ளி மாணவர் களின் சுகாதாரத்துக்கும் பங் கம் ஏற்படுவதாகத் தெரிவித் துள்ள பிரதேசசபை, வைத்திய நிலையத்தை ஜனவரி மாதத்தி லிருந்துமூடுவதற்கானநடவடிக் கையை மேற்கொண்டுள் ளது. இது சம்பந்தமாக பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத் தில் ஆராயப்பட்டு தீர்மானிக் கப்படவுள்ளது. (த-115)

# ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்புக்கு முன்னரே தலைநகரில் பிரசாரம்

கொழும்பு, நவ. 9
ஜனாதிபதித் தேர்தல் குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்னரே தேர்தல் பிரசாரப் பணிகளை அரசு தலைநகரில் ஆரம்பித்துள்ளது.
தேர்தல் பிரசாரப் பணிகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கொழும்பின் பல பாகங்களிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.
வீடு வீடாகச் சென்று துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து தேர்தல் பிரசாரங்களை முடுக்கிவிட்டுள்ளனர்.
சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் பல குழுக்களாகப் பிரிந்து இந்தப் பிரசாரப் பணிகளை மேற்கொள்கின்றனர். சுமார் 10 ஆதரவாளர்கள் ஒரு குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.
இவர்கள் வழங்கும் துண்டுப் பிரசுரத்தில் 'புதுயுகம் படைத்த சரித்திர நாயகனே' எனத் தலைப்பிடப்பட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரின் புகைப்படங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.
'நீங்களே எமது ஜனாதிபதி', வெற்றி உங்களுக்கே' என்றும் அந்தத் துண்டுப்பிரசுரத்தின் முகப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழி களிலும் இந்தத் துண்டுப்பிரசுரங்கள் அச்சிடப்பட்டுள்ளன.
தமிழ் பேசும் உறவுகளே, உங்க ளுடன் சில நிமிடங்கள். 10 வருடங்களுக்குமுன்பு இருந்த கொழும்பு நகரம் அசுத்தம் நிறைந்த வீதிகள், மழைவெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த வீடுகள், குடிசை வீடுகள், புலிகளின் தீவிரவாத அச்சுறுத் தல்கள், மாசடைந்த சுற்றாடல்... ஆனால் இன்று நீங்கள்காண்பது, சகல மதங்களுக்குமான மதச் சுதந்திரம், வீதியோர வியாபாரிகளுக்கான வியாபார ஸ்தலங்கள், குடிசை வீடுகளில் வாழ்ந்தவர்களுக்கான மாடி வீடுகள், ஸ்திரமற்ற வியாபாரிகளுக்கு மிதக்கும் சந்தை, ஒழுங்குமுறையாக குப்பை களை அகற்றும் திட்டம், வெளிநாடு களுக்கு சமமான வீதி அமைப்புகள், புதிய வேலை வாய்ப்புகள் எனஅரசின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அந்தத் துண்டுப் பிரசுரத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது.
மேலும், ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ பாப்பரசரைச் சந்தித்து உரை யாடியபோது எடுக்கப்பட்ட புகைப்படம் உள்ளிட்ட சர்வமதத் தலைவர்களை அவர் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படங் களும் இந்தத் துண்டுப் பிரசுரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித்து அரசை வெற்றி பெறச் செய்யவேண்டும் என சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.
அரசமைப்பின் 18 ஆவது திருத்தச் சட்டத்துக்கமைய தனது இரண்டாவது பதவிக் காலத்தின் நான்கு வருடங்கள் நிறைவடைந்ததன் பின்னர் ஜனாதி பதித் தேர்தலொன்றுக்கு செல்லமுடியுமா என்றும், மூன்றாவது தடவை யாக ஜனாதிபதித் தேர்தலில் தனக்குப் போட்டியிடமுடியுமா என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உயர்நீதிமன்றத் திடம் சட்ட விளக்கம் கோரியுள்ளார். இது குறித்த உயர் நீதிமன்றத்தின் சட்ட விளக்கத்தை எதிர்வரும் 10 ஆம் திக திக்கு முன்னர் அறிவிக்குமாறும் ஜனா திபதி மஹிந்த கோரிக்கை விடுத்துள்ளார்.
ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி உத்தியோகபூரர்வமாக அறிவிக்கப்படா துள்ள நிலையில், அரசு தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.
இதேவேளை, அரசு தேர்தல் பிரசாரப் பணிகளை ஏற்கனவே ஆரம் பித்துள்ளது என எதிர்க்கட்சியினர் குற் றஞ்சாட்டி வருகின்றமையும் குறிப்பிடத் தக்கது. (து-சி)

## அரசு என்னதான் செய்தாலும் பாதை மாறமாட்டார்கள் தமிழர்

### சபையில் அரியம் எம்.பி. இடித்துரைப்பு

"பிரித்தானியர்கள் இலங்கையில் வீதிகளை நிர்மாணித்தவர்கள் என்பதற்காக அவர்களே எம்மை ஆட்சி செய்ய வேண்டும் என்று இலங்கையர்கள் கேட்கவில்லை. அதுபோல, அரசு வடக்குக்கு யாழ் தேவியை அனுப்பினால் இந்த அரசுதான் எம்மை ஆட்சி செய்யவேண்டும்என்றுவடக்கு மக்கள் கூறவில்லை" எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று சபையில் தெரிவித்தது.
"அரசுபாதைகளைப்போட்டாலும் எமது மக்கள் பாதை மாறமாட்டார்கள்" என்று கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத் திரன் தெரிவித்தார்.
நாடாளுமன்றில் நேற்று முன்தினம் வெள் ளிக்கிழமை காலை இடம்பெற்ற நெடுஞ் சாலைகள், துறைமு கங்கள், கப்பற் றுறை மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோது மேற் கண்டவாறு தெரி வித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-
"முல்லைத்தீவு, மல்லாவி பிரதான வீதி இருந்ததைவிட 5 அடி உயர்த்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இதனால் வீதியை அண்டியுள்ள கடை வியாபாரிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ள னர். மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு, கல்குடா, படுவான் கரை முதலான பகுதிகளிலுள்ள வீதிகள் சேதமடைந்து காணப் படுகின்றன. இவற்றை புனர் நிர்மாணம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.
இலங்கையைஆட்சிசெய்தபிரித் தானியர்கள் இங்கு வீதிகளை அமைத்தனர்; புகையிரத வீதிகளை அமைத்தனர். அதனால் பிரித்தானியர்கள்தான் எம்மை ஆட்சிசெய்ய வேண்டும் என்று இலங்கையர்கள் கேட்கவில்லை. அதுபோல, அரசு வடக்குக்கு யாழ்தேவியை அனுப்பியதனால் இந்த அரசுதான் எம்மை ஆட்சிசெய்ய வேண்டும் என்று வடக்கு மக்கள் கூறவில்லை.
அபிவிருத்தி வேறு, அபிலாஷைகள் வேறு. அபிவிருத்தி என்பது மனிதர்களை மையப் படுத்தி அமைய வேண்டும். மக்களின் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்த அரசு செயற் பட வேண்டும். என்றார். (த-சி)

## இலங்கை - இந்திய உறவில் சீன ஆதிக்கத்தால் முறுகல்

### ரவி எம்.பி. சபையில் தெரிவிப்பு -

இலங்கைத் துறைமுகத்தில் சீனா ஆதிக்கம் செலுத்திவருவதால் இலங்கை - இந்தியாவுக்கிடையில் முறுகல் ஏற்பட்டுள்ளது - என நேற்று சபையில் தெரிவித்த ஐ.தே.கவின் உப தலைவர் ரவி கருணாநாயக்க ஐ.தே.க. ஆட்சியில் இந் தியாவுடனான உறவை மீளக் கட்டியெழுப்புவோம் என்றும் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில்நேற்றுமுன் தினம்வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற நெடுஞ் சாலைகள், துறைமுகங்கள், கப்பற் றுறை மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோது மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவைவருமாறு:-
"அரச தரப்பிலுள்ளவர்களுள் வானம் எமக்கு என ஒரு தரப்பினரும், கடல் எமக்கு என்று ஒரு தரப்பினரும் கூறுகின்றனர். நிலம் சீனாவுக்குச் சொந்தம் என மக்கள் கூறுகின்றனர். இந்நிலையில், எமக்குஎன்னசொந்தம் என்று கேட்கவேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. சீனர்கள் இங்கு வந்து எதையும் செய்யலாம் என்ற நிலை உருவாகியுள்ளது.
கொழும்பில் 500 ஏக்கர் நிலம் சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத னூடாக சீனத் தலைநகரை உருவாக்க அரசு முயற்சிக்கிறதா?
இலங்கைத் துறைமுகத்தில் சீனா ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. இத னால், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவில் முறுகல் ஏற்பட் டுள்ளது. சீனாவுக்குச் சொந்தமான துறைமுகத்தில் இந்தியா எவ்வாறு தனது துறைமுக நடவடிக் கைகளை மேற்கொள்ளும்? இதனூடாக அரசு இருப்பதையும் இல்லாது செய்துள்ளது. - என்றார்.

## மனுக்களை ஏற்பதற்கு உயர்நீதிமன்று மறுப்பு

### சட்டத்தரணிகள் சங்கம் குற்றச்சாட்டு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் தேர்தலில் போட்டியிட முடியாது எனத்தெரிவிக்கும் மனுக்களை தாக்கல் செய்வதற்கு உயர்நீதி மன்றப் பதிவாளர் அனு மதிக் கவில்லை என்று இலங்கை சட்டத் தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.
தாம் இதுகுறித்து விளக்கம் கோரிய வேளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமர்ப் பித்த கேள்விகள் மீதான விசாரணை 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணியுடன் முடிவ டைந்து விட்டது என உயர் நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்தார் என்று இலங்கை சட்டத்தர ணிகள் சங்கத் தின் தலைவர் உபுல் ஜயசூ ரிய தெரிவித்துள் ளார்.
கடந்த 5ஆம் திகதியே ஜனாதிபதி விளக்கம் கோரியிருந்தார். 6ஆம் திகதி பொது விடுமுறை தினம். 7ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்குள் பதிலளிக்க வேண்டுமென உத்தரவிடப்பட்டிருந்தது. எனவே, பதிலளிப்பதற்கு உரிய காலஅவகாசம்வழங்கப்படாமை சந் தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்று சட்டத்தரணிகள் சங்கத் தின் தலைவர் கூறியுள்ளார்.
ஜனாதிபதி சட்ட விளக்கம் கோரிய தைத் தொடர்ந்து குறைந்தபட்சம் இரண்டு வார கால அவகாசம் வழங்கப் பட்டிருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இந்தச் சட்டவிளக்கம் தொடர்பில் வாய்மொழி மூல சமர்ப் பிப்புக்களை முன்வைக்க அனுமதியளிக்கப்பட வேண்டுமென சட்டத்தரணிகள் சங்கம் நீதி மன்றில் இரு தடவைகள் கோரிய போதிலும் உரிய பதில் கிடைக்க வில்லை என அவர் தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே சட்ட விளக்கம் கோரிய தன் மூலம், அவரும் சந்தேகத்துடன் இருக் கின்றார் என்பது அம்பலமாகி யுள் ளது எனவும் சட்டத்தரணிகள் சங்கத் தின் தலைவர் உபுல் ஜயசூரிய சுட்டிக் காட்டியுள்ளார்.

**வீடு வாடகைக்கு**
கோண்டாவில் மேற்கில் 3 அறைகள் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- 071 631 5365 (53916)

DHL
விரைவு! பாதுகாப்பு!! நம்பகத்தன்மை!!!
THIRUMURUGEN COM NET (Pvt) Ltd.
DHL இன் நேரடி அங்கீகாரம் பெற்ற ஒரே முகவராக விளங்கும்
**திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd.**
தற்பொழுது உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவையினை மூன்று வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.
Delivery 3 working days
இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(ஆல்சிலோன் புத்தகக்கடைக்கு முன்பாக)
T.P: 0212227835 / 0777554528
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது.)

**நொதேர்ன் சென்றல் வைத்தியசாலை**
342, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
விசேட பல்வைத்திய நிபுணர்களின் வருகை
- பல்முகச்சீராக்கல் (Consultant Orthodentist)
- முகச்சத்திரசிகிச்சை (Consultant Maxillo Facial)
- ஒழுங்கற்றபற்களை சீராக்குதல்(கிளிப்மூலம்)
- மிதப்பு பற்களை சீராக்கல்
- அண்ணப்பிளவு உதட்டுப்பிளவு ஒழுங்கான சிகிச்சை
- தாடை மிதப்புக்களை சத்திர சிகிச்சை மூலம் சீராக்கல்
- அத்துடன் தினமும் நவீனமுறையில் பல் அடைத்தல்
- நிரந்தர பல்கட்டுதல்
- பல் கிளீனிங் வைற்றினிங் (வெண்நிறமாக்கல்)
- பல்வேர் சிகிச்சை
- பல் வாய் சம்பந்தமான சகல சிகிச்சைகளும் வழங்கப்படுகின்றன. (C/17582)(10.6)



## மரண அறிவித்தல்

### விநாயகமூர்த்தி சிவசாமி

(ஓய்வுநிலை சமஸ்கிருதப் பேராசிரியர்)




புங்குதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பலாலி வீதி, கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி சிவசாமி (பேராசிரியர்) நேற்று (08.11.2014) சனிக் கிழமை காலமாகிவிட்டார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

31, 6ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, யாழ்ப்பாணம். (C/17584) (10.6)

தகவல்:
குடும்பத்தினர்.
0777 030 661

## 31[ஆம்] நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 18.10.1954 உதிர்வு 10.10.2014

### அமரர் மார்க்கண்டு இரவீந்திரன்

(ரவி மாஸ்ரர், யாழ். பல்கலைக்கழக போதனாசிரியர்)

எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்து, அஞ்சலி ஆறுதல் தெரிவித்தோர் மற்றும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (09.11.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய ஆத்ம சாந்திப்பிரார்த் தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

61 6, பாரதிவீதி, அரியாலை, யாழ்ப்பாணம். குடும்பத்தினர். (53915)(10.6)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**நாளை**

ஐப்பசி-24 திங்கட்கிழமை 10.11.2014
திதி: சதுர்த்தி பி.இ.04.02 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் மா.05.40 வரை
சுபநேரம்: 12.05 - 01.35 வரை
இராகுகாலம்: 07.35-09.05 வரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்

**மேடம்**: நண்பர்கள், உறவினர்களுடன் விரிசல்கள் வந்து விலகும். விமர்சனங்களைக் கண்டு அஞ்சாதீர்கள். அடுத்தவர்களை குறை கூறிக்கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப் பாருங்கள். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும்.

**இடபம்**: வெளிவட்டாரத்தில் விமர்சனங்களைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் விட்டுக்கொடுத்துப் போங்கள். மாணவர்கள் கல்வியில் நல்ல சித்திகள் பெறுவார்கள்.

**மிதுனம்**: நீண்ட நாள்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வருவார். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். வெளியூர் பயணங்களை மேற்கொள்வீர்கள்.

**கடகம்**: எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உங்களை ஏமாற்றிக் கொண்டிருந்தவர்களை இனங்கண்டறிந்து ஒதுக்குவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

**சிங்கம்**: குழம்பிக் கொண்டிருந்த நீங்கள் தெளிவான முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பர். குடும்பத்தில் சந்தோசம் நீடிக்கும்.

**கன்னி**: ஒரே முயற்சியில் முடிக்க வேண்டிய விடயங்களை பல முறை அலைந்து முடிப்பீர்கள். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் பிறரது குறைகளை சுட்டிக்காட்ட வேண்டாம்.

**துலாம்**: சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். வியாபாரத்தில் சூட்சுமங்களை உணருவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**விருச்சிகம்**: கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பழைய உறவினர்கள், நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**தனுசு**: புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். நட்பால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களைச் சொல்லித் தருவார். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டவும்.

**மகரம்**: எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் இழந்த உரிமையைப் பெறுவீர்கள்.

**கும்பம்**: தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சொத்துப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் மனம் விட்டுப் பேசுவார்கள். குடும்பத்தில் சிற்சிலருடன் சண்டை போட்டு பிறகு சமாதானமாகப் போவீர்கள்.

**மீனம்**: குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். வெளிவட்டாரத்தில் புதிய அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். வெளியிடங்களுக்குச் செல்பவர்கள் மிக அவதானமாகச் செல்லவும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | 1 | | 5 | | 2 | 8 |
| | | 1 | | | 9 | 7 | | |
| | | | 4 | 8 | | | | |
| | 3 | 4 | 5 | | | | 7 | |
| 7 | 9 | | 3 | 6 | 1 | | 4 | 5 |
| | 5 | | | | 4 | 1 | 3 | |
| | | | | 4 | 3 | | | |
| | | 5 | 7 | | | 9 | | |
| 6 | 7 | | 9 | | 2 | | 1 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 8 | 7 | 9 | 1 | 2 | 6 | 3 |
| 3 | 9 | 7 | 2 | 5 | 6 | 1 | 4 | 8 |
| 1 | 2 | 6 | 8 | 3 | 4 | 5 | 7 | 9 |
| 8 | 3 | 4 | 1 | 6 | 5 | 7 | 9 | 2 |
| 9 | 1 | 5 | 4 | 2 | 7 | 8 | 3 | 6 |
| 7 | 6 | 2 | 9 | 8 | 3 | 4 | 5 | 1 |
| 4 | 7 | 9 | 3 | 1 | 2 | 6 | 8 | 5 |
| 2 | 5 | 3 | 6 | 4 | 8 | 9 | 1 | 7 |
| 6 | 8 | 1 | 5 | 7 | 9 | 3 | 2 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்



## திருமதி இரத்தினபூபதி (பூபதி) துரைராஜா

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நுணாவில் கிழக்கு சாவகச்சேரியை வாழ்விடமாகவும், தமிழ்நாட்டிலும், தற்போது கனடா Westonஇல் வசித்துவந்தவருமான திருமதி இரத்தினபூபதி (பூபதி) துரைராஜா 06.11.2014 சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற டிக்கோயா நாகலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்ற சுப்பையா - நாகமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும், துரைராஜா (அங்கிள்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிறீதரன் மற்றும் சுபாஜினி, கிரிதரன், அனுசா, சுதாகரன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற யமுனா மற்றும் திசைவீரசிங்கம் (திசை), மனோகரி, சுரேந்திரன், குமுதினி ஆகியோரின் அன்பு மாமியும், செந்தூரன், ஆர்த்திகா (இந்தியா), சுனீந்திரன், காருண்யா, நிலாந்தி, நிஷாந்தி, நிவாஷ், நர்மதன், அபிநந், லக்சன், கார்த்திகா, விஜீதரன், ஜஹானன், அக்சயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா (கோண்டாவில்) இரத்தினம் (தலையாழி), சற்குணம் (புங்குடுதீவு 3ஆம் வட்டாரம்), கனகரெட்ணம் (டிக்கோயா), புவனம் (யாழ்ப்பாணம்), சிவஞானம் (மட்டுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, அருணோதயம், கனகரெத்தினம், இளையதம்பி, அன்னபூரணம், சிவபாக்கியம், தங்கரெத்தினம், நமசிவாயம், சோமசுந்தரம், கந்தசாமி மற்றும் தங்கவேல் (கனடா), தங்கேஸ்வரி (இலங்கை) ஆகியோரின் மைத்துனியும், சிவசம்பு, நாகரெத்தினம், சிவபாக்கியம், மகேஸ்வரி, பாலசிங்கம், பசுபதிப்பிள்ளை ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 8.11.2014 சனிக்கிழமை 1810 Albion Road (Albion 4, Hwy27), Etobicoke, On M9W 5TI என்ற முகவரியில் அமைந்துள்ள Glendale Funeral Hall, மண்டபத்தில் மாலை 4.00 மணி தொடக்கம் 9.00 மணி வரையும், மீண்டும் இன்று (09.11.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணி முதல் 11.00 மணி வரையும் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று, அதே இடத்தில் பிற்பகல் ஒருமணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: கணவர் (அங்கிள்) துரைராஜா - Cell: 6478891027 Home:- 4168298063
பிள்ளைகள் - திசை, சுபாஜினி : 647 782 6749 பாபா: 6472890253
சூட்டி: 4162683085 அப்பு (சுதா): 4168948283 குட்டி (ஜேர்மனி): 492281803961
Funeral Home: Glendale, 1810 Albion Road, Etobicoke, ON M9W 5TI.

(சி17458)
(12.3.6)

# விற்பனைக்கு

### வீடு, காணி விற்பனைக்கு
7 பரப்பு + வீடு தெல்லிப்பழை,
கொல்லங்கலட்டி
077 100 1390 (சி/17451)(4.6.3)

### விற்பனைக்கு
ஒருகை பாவனையில் நல்ல நிலையில் உள்ள CC49 ரக சாம்ப் மோட்டார் சைக்கிள் விற்பைனக் குண்டு.
தொடர்பு: (53822)(12.3) 077 978 9752/021 221 3255

### கார் விற்பனைக்கு
நல்ல நிலையிலுள்ள Toyota Corilla (PEJOH) 18 - xxxx - Vagan Model கார் விற்பனைக்குண்டு.
(53861)(12.3) தொடர்பு: 077 259 1579

### காணி விற்பனைக்கு
வட்டுக்கோட்டையில் யாழ்ப் பாணக் கல்லூரிக்கு அருகில் 8 பரப்பு நிலம் கிணற்றுடன் உடன் விற்பனைக்கு உண்டு. வட்டு.சித்தன்கேணி, வட்டு-காரைநகர் வீதிக்கு அருகில் அமைந்துள்ளது. (சி/17454)(7.6.3)
தொடர்பு : 077 726 8668, 011 236 6175

### வீடு விற்பனைக்கு
பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக 1½ பரப்புக் காணியுடன் அதிநவீன வசதிகளுடன் கூடிய புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் மேல்மாடி வீடு (6 அறைகள், 2 ஹோல், சமையலறை) முழுவதும் மாபிள் பதித்தது, வாகனத் தரிப்பிடத்துடன்) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு :077 819 8223 (53904)(6.6.3)

### கடை மற்றும் வீட்டுடன் காணி விற்பனைக்கு
தெல்லிப்பழை சந்தியில் சகல வசதிகளையும் கொண்ட வீட்டுடன் 7¼ பரப்புக் காணியும், நான்கு கடைகளும், தெல்லிப்பழை ஆஸ்பத்திரி வீதியில் ஒரு பரப்பும் 16 குழியும் விற்பனைக்குள்ளன.
(53892)(12.3) தொடர்பு:077 807 9258/077 039 3192

### காணி விற்பனைக்கு உண்டு
கோண்டாவிலில் இருந்து இருபாலைக்கு செல்லும் வழியில் இராசவீதி சந்தியில் ஐந்து பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். தரகர் தேவை இல்லை.
தொடர்பு : 077 491 2596 (53880)(7.6.3)

### வீடு விற்பனைக்கு
வேலணை மேற்கில் வீடு விற்பனைக்கு உண்டு. மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
(53818)(12.3) தொடர்பு: 077 620 7141

### காணிகள் விற்பனைக்கு
கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம் கணக்கர் சந்திக்கு அருகில் பிரபல ஆண்கள், பெண்கள் பாடசாலை, புகையிரத நிலையத்திற்கு சமீபமாக இரண்டு காணிகள் விற்பனைக்குள்ளன.
1) பரப்பு ஐந்து குழி 10.52
2) பரப்பு ஐந்து குழி 6.52
காணி முழுதாகவோ அல்லது பாதைவிட்டு ஒவ்வொரு காணியும் இரண்டு துண்டுகளாகப் பிரித்துக் கொடுக்கப்படும். தொடர்பு:
(53797)(12.3) 077 742 0240/071 222 8005

### உடன் வாடகைக்கு/விற்பனைக்கு
TATA 1615 லொறி Full body வாடகைக்கு or விற்பனைக்கு உண்டு. (கென்டைனர் பெட்டிவகை) உடன் தொடர்பு கொள்ளலாம்.
077 223 3308 (539...)(4.6.3)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

### ஆடுகள் விற்பனைக்கு
நல்லின மறி, கடா ஆடுகள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.
078 610 3174 (53901)(4.6.3)

### விற்பனைக்கு
பாவித்த Wheel Chair Gas Cooker, சவாரி மோட்டார் சைக்கிளின் உதிரிப்பாகங்கள் என்பன விற்பனைக்குள்ளன.
(53725)(12.3) தொடர்பு: 075 743 2461

### வான் விற்பனைக்கு
252-xxxx தொடர் இலக்கமுடைய Dolphin Van விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 576 3932 (53896)(4.6.3)

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
45 நாள்கள் நிரம்பிய உயர்ந்தரக ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தடுப்பூசி போடப்பட்டுள்ளது
(53046)(12.3.6) தொடர்பு: 077 755 6244

### விற்பனைக்கு
நல்லின புறாக்கள் (பான்டில், சைனா, சொக்கப்பேன், கீழடிக் கருணம்) என்பன விற்பனைக்கு உள்ளன தொடர்பு: 021 222 9393 (53887)(4.6.3)
70, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

### வீட்டுடன் காணி விற்பனைக்கு
பூநகரி மட்டுவில் நாடு. சங்குப்பிட்டி பிரதான வீதியில் வாடியடி சந்திக்கு மிக அண்மையில் புதிதாக கட்டப் பட்டுள்ள அரசினர் வைத்திய சாலைக்கு நேர் எதிராக வீடு, கிணற்றுடன் அமைந்துள்ள 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 124 7425, 077 677 1048, 021 227 0410 (47328) (45.3)

### கணினி விற்பனை
Intel Core i 7 Board, Dual Core Processor, 2 GB Ram, 500 GB Hard Disk, DVD Writer, LCD Monitor (used), Keyboard, Mouse, 3D Speaker.
1 Year warrenty Rs.39 000/= Only
077 433 6247 (53893)(4.6.3)

### காணி விற்பனைக்கு
பிரதான வீதி, சங்கானையில் (துபால் கந்தோருக்கும் சேச் றோட்டுக்கும் இடையில்) 5 பரப்புக் காணி விற்பனைக் குண்டு.
தொடர்பு: (53383)(12.3)
077 625 7905/075 039 3007

### விற்பனைக்கு
B.S.Lane, மானிப்பாய் வீதியில் 22 Perch இல் அமைந்துள்ள வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
077 766 7375/077 918 4617 (சி/17451)(4.6.3)

# வாடகைக்கு

### வீடு வாடகைக்கு
யாழ்ப்பாணம், சுண்டுக்குளி சோமசுந்தரம் ஒழுங்கையில் 37ஆம் இலக்க வீடு வாடகைக்கு உண்டு. 5 அறைகள், 4 குளியலறையுடன் கூடியது. காரியாலயங்களுக்கு முன்னுரிமை உண்டு.
தொடர்பு : 075 033 8060 (சி/17453)(7.6.3)

### கடை வாடகைக்கு
கே.கே.எஸ். வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள 600 ச.அடி விஸ்தீரணமுடைய கடை, Car Park, Room Bath Room, Store வசதிகளுடன் வாடகைக் உண்டு. (சி/17458)(4.6.3) தொடர்பு:077 776 3248

### வீடு வாடகைக்கு
நான்கு அறைகள், 4 குளியலறை கள், 2 படுக்கை அறைகள் (இணைந்த குளியலறை களுடன்) குளிரூட்டி வசதி, சோலர் வசதி, குளியலறைகளில் சுடுநீர் வசதி போன்றவற்றுடன் வீடு வ்ாடகைக்கு உண்டு.
பலாலி வீதி, திருநெல்வேலி.
தொடர்பு : 071 491 6844 (சி/17452)(7.6.3)

### வீடு வாடகைக்குண்டு
K.K.S.வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் உப்புமடச் சந்திக்கு அருகில் 6 அறைகள், 4 குளியலறைகள், 2 ஹோல் மற்றும் சகல வசதிகளுடனும் வாகனத் தரிப்பிட வசதியும் கொண்ட இரண்டு மாடி வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் மட்டும் விரும்பத்தக்கது. (53900)(7.6.3)
தொடர்பு : 077 361 1178
077 552 9969

### வீடு வாடகைக்கு
மூளாய் றோட், மாவடியில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
(53879)(4.6.3) தொடர்பு: 077 895 6773

### வீடு வாடகைக்கு உண்டு
கஸ்தூரியார் வீதியில் மூன்று அறைகள், ஒரு ஹோல் சமையலறையுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 077 271 9433 (53811)(7.6.3)

### அறைகள் வாடகைக்கு
யாழ் புகையிரதம் தரித்து நிற்கும் வெள்ளவத்தை புகையிரத நிலையத்திற்கு முன்னால், இல. 8 புகையிரத வீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் மற்றும் தனி அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0112 504 281, 0712 991 256

### கடை வாடகைக்கு
இல.607, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.
விக்னா ஹோட்டலுக்கு முன்பாக உள்ளன.
தொடர்பு: 077 661 5973 (சி/17577)(4.6.3)

### உணவகம் வாடகைக்கு
கிளிநொச்சி, கரடிப்போக்கு, A9வீதியில் உணவகம் வாடகைக்கு உண்டு.
(47915)(12.3) தொடர்பு: 077 789 9807

### வீடு வாடகைக்குண்டு
யாழ்ப்பாணம், பழையபூங்கா வீதியில் ஐந்து அறைகளுடன் கூடிய மாடி வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு:
(53736)(12.3) 077 938 4635/077 623 9878

# வேலைவாய்ப்பு

### வவுனியாவில் CLERK தேவை
வவுனியாவில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனத்துக்கு அலுவலக எழுதுநர் தேவை. (53822)(12.3) தொடர்பு:076 660 2970

### வேலையாள் தேவை
சுதுமலையில் இயங்கும் தொலைத்தொடர்பு நிலையத்துடன் இணைந்த கடையில் வேலை செய்வதற்கு கணினி அறிவுள்ள பெண்பிள்ளை தேவை. சுதுமலையை அண்டிய பகுதியிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
(53857)(12.3.6) தொடர்பு: 077 340 5951
engchelvam@gmail.com

### தேவை
யாழ்.நகரில் உள்ள பலசரக்கு வியாபாரக் கடைக்கு பலசரக்கு வியாபாரத்தில் முன் அனுபவமுள்ள சிட்டை எழுதுநர் தேவை.
தொடர்பு : 077 544 4014 (53890)(7.6.3)

### விற்பனைத்துறையில் வேலைவாய்ப்பு
IDEAL VISION
* இளைஞர் யுவதிகளே இதோ அரிய சந்தர்ப்பம்!
* சந்தைப்படுத்தல் பணியாளர் தேவை.
* கல்வித்தகைமை O/L போதுமானது
* வயது எல்லை:18-35 (யாழ்ப்பாணம், கிளிநொச்சி)

சுயவிபரத்துடன் நேரடியாக அலுவலக நேரத்தில் சமுகம் தரவும்.
நேரம்: 9.00am-4.30pm(53733)(4.6.3)
T.P: 077 042 7947/021 222 9206
Address No: 174 2nd Cross Road, Jaffna.
பணிப்பாளர். IDEAL VISION Company

### தேவை
கொக்குவிலில் அமைந்துள்ள கடை ஒன்றுக்கு அதனை நிர்வகிப்பதற்கு ஆள்கள் தேவை.
தொடர்பு : 077 776 3248 (சி/17455)(7.6.3)

### பணியாளர் தேவை
* திருக்கோயில் உதவி முகாமைத்துவ உதவியாளர்
* திருக்கோயில் உள்பிரகாரம் பராமரிப்பாளர்
* திருக்கோயில் வெளிவீதி பராமரிப்பாளர்/ இரவுகாவலர்

45 - 60 வயதுக்குட்பட்டவர்கள் ஆண்கள். சைவ சமய பற்றுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: நிர்வாகம்.
அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோயில்,கோயில்குளம், வவுனியா.
(52187)(12.3) 077 615 7905

### வரவேற்பாளர் தேவை
யாழ்.நகரிலுள்ள தனியார் வைத்திய சாலைக்கு 18 வயதிற்கு மேற்பட்ட பெண் வரவேற்பாளர்கள் தேவை. விரும்புபவர்கள் 12.11.2014 புதன் கிழமை 514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு சுயவிவரக் கோவையுடன் காலை 09.00 மணிக்கு வருகை தரவும்.
(53799)(12.3) பணிப்பாளர்.

# ஏனையவை

### தேவை
யாழ்ப்பாணம், திருநெல்வேலி பிரதேசங்களுக்கு அண்மையில் இருவர் தங்கக்கூடிய வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 6534411 (53897)(10.6.3)

### இடமாற்றம்
டயானா பிளாஸ்ரிக்
108, பலாலி வீதி (இலுப்பையடிச் சந்தி)
* உடைந்த வாகன பிளாஸ்ரிக் ஒட்டுதல்.
* பழைய பிளாஸ்ரிக் வாங்குதல்.
* புதிய பிளாஸ்ரிக் தயாரித்தல் (C/17542)(7.6.3)

தொடர்பு : 077 592 5088/021 222 8680

### இலவச சேவிஸ்
புதிய பஜாஜ் மோட்டார் சைக்கிள், ஓட்டோ கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு எம்மிடத்தில் இலவச சேவிஸ் செய்து கொடுக்கப்படும்.
இடம் : சந்நிதி முருகன் வேக்ஸொப் அன் சேவிஸ்
241, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8076 (சி/17518)(5)

### கணினி திருத்தம்
கணினி திருத்தம் நடமாடும் சேவை
30% Special offer
தொடர்பு: 077 793 3338 (53894)(4.6.3)

### ஒத்து மாறல்
வலிகாமம் கல்வி வலயத்தில் கணித ஆசிரியராகக் கடமையாற்றுபவர் யாழ். வலயத்துக்கு ஒத்துமாற விரும்புகிறார்.
(53863)(12.3) தொடர்பு: 076 6960711

### தவறிவிட்டது
சுன்னாகம் தெற்கைச் சேர்ந்த திருமதி யோகாம்பிகை சிவலிங்கம் என்பவருடைய யாழ். போதனா வைத்தியசாலை கிளினிக் புத்தகம், மருத்துவ அறிக்கைகள் அடங்கிய பொதி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0776669566 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (53888)(12.3)

# கல்வி

### டொச் மொழி வகுப்பு
German, Swiss மொழி வகுப்பு வெளிநாடு செல்வோருக்காகவும் மற்றும் பாடசாலை மாணவர்களுக்காகவும் மிகக்குறைந்த கட்டணத்தில் International School Teacher கற்பிக்கின்றார்.
மானிப்பாய் அந்தோனியார் சேர்ச் அருகில்
(53884)(12.3) 077 270 7121

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

### தையல்
இந்தியாவில் 8 வருட அனுபவம் வாய்ந்த பெண் ரெய்லரால் சாறி பிளவுஸ், சுடிதார் ஆகியவை நவீன முறையில் தைத்துக் கொடுக்கப்படும். இல. 39, நாவலர் வீதி.
(யாழ் [illegible] அருகில்)
(53887)(5.6.3) தொடர்பு: 0766 399 277

# மணமக்கள்

### மணமகள் தேவை
1981இல் பிறந்த NRC யாழ். கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகம் புரியும் மணமகனுக்கு அதே மதத்தைச் சேர்ந்த அரச உத்தியோகம் புரியும் மணமகள் தேவை.
தொடர்பு : 076 737 6735 (52189)(7.6.3)

### மணமகன் தேவை
சுவிஸ் நாட்டு குடியுரிமை பெற்ற 73ஆம் ஆண்டு பிறந்த மணமகளுக்கு இந்துசமய மணமகன் தேவை. (வெளிநாட்டில் விரும்பத்தக்கது)
(47327)(12.3.6) தொடர்பு:0041 7799 09102

### மணமகன் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 80இல் பிறந்த, கார்த்திகை 4ஆம் பாதம், கிரக பாவம் 21 உடைய மணமகளுக்கு அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன் தேவை.
(53331)(12.3) தொடர்பு: 077 634 9486

## வாடகைக்கு உண்டு

286, பலாலி றோட், கந்தர்மடத்தில் இரண்டு படுக்கை யறைகள், இரண்டு குளியல் அறைகளுடன், குசினி, ஹோலுடன் கூடிய மேல் மாடி வீடு வாடகைக்கு உண்டு

தொடர்பு :- 077 301 3236

## உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com
0215671111

## வீடு வாடகைக்குண்டு

ஈச்சமோட்டை, கிருஸ்ணபிள்ளை வீதியில் வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 302 7567 (53908) (4.6.3)

## நேரடி விநியோகஸ்தர்கள் தேவை

இந்தியாவில் 100 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த

**ஆர்.எஸ். பதி மருந்து**

மீண்டும் இலங்கையில் விற்பனை செய்வதற்கு விநியோகஸ்தர்கள் தேவை



**NATURO**

Pain Relief Oil


மூலிகை அடங்கிய வலி போக்கும் நிவாரணி

GOODWIN

தொடர்புகளுக்கு

**NSY DISTRIBUTORS (PVT)LTD.,**
No:36/1, Moore Road, Colombo - 06
075 4105230 Email : rspathy.nsy@gmail.com

## இனி இல்லை நெஞ்சுவலி !!!




தினமும் இலவச ஆலோசனை
செலிங்கோ ஹவுஸ்
வார நாட்கள் மு.ப 9.00 - மாலை 5.00
சனிக்கிழமை மு.ப 9.00 - பி.ப 2.00
மாதாந்த கிளினிக் நாடு முழுவதும்

FAIR PHARMA (PVT) LTD
(Kerala Ayurvedic Medicine)
011 4 388 200, 4 388 100
4 388 101, 4 388 102

செலிங்கோ ஹவுஸ், 11ஆம் மாடி, இல.60, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 11.
Website : www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com

Hotline: 0777 555 600 / 0777 708 310 / 0777 708 330

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY

## பெண் ஊழியர்கள் தேவை

சிறுவர் பூங்கா (பழைய பூங்கா) உள்ளே இருக்கும் குளிர்பான நிலையத்திற்கு பெண் ஊழியர்கள் தேவை. சிற்றுண்டிகள் செய்யத் தெரிந்தவர்களுக்கும் A/L முடித்தவர்களுக்கும் முன் உரிமைஉண்டு.

தொடர்பு: 077 078 0240 (47330) (4.6.3)

## மணமகன் தேவை

வலிகாமத்தைச் சேர்ந்த 1985 அவிட்ட நட்சத்திரத்தையும், 8இல் செவ்வாய், 74கிரகபாவத்தையுடைய A/L படித்த பெண்ணுக்கு மணமகன் உள்ளூரிலோ, வெளியூரிலோ தேவை.

தொடர்புகட்கு: விளம்பர இல.5025,
C/O, உதயன்.
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(53905) (12.3.6)

## மணமகன் தேவை

வலிகாமத்தைச் சேர்ந்த 1987திருவாதிரை, லக்கினத்தில் செவ்வாயும், 26½ கிரகபாவமும் உடைய வெளிவாரிப் பட்டப்படிப்பையும், நூலக விஞ்ஞான படிப்பையும் மேற்கொள்ளும் பெண்ணுக்கு உள்ளூரிலோ, வெளியூரிலோ மணமகன் தேவை.

தொடர்புகட்கு: விளம்பர இல.5025,
C/O, உதயன்.
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(53906) (12.3.6)

## மணமகள் தேவை

யாழ் இந்து 86 இல் பிறந்த அரச தொழில் செய்யும் மணமகனுக்கு உத்தியோகம் பார்க்கும் மணமகளைத் தேடுகின்றோம்.

தொடர்புகளுக்கு:- 077 636 5949

## முழுநேர செய்தியாளர் தேவை

தேசிய தமிழ் பத்திரிகை ஒன்றுக்கும், இணைய வானொலி ஒன்றுக்கும் வவுனியா மாவட்டத்தில் இருந்து நேரடியாக அறிக்கையிடுவதற்கு முழு நேர செய்தியாளர் ஒருவர் தேவை.

அனுபவம்,திறமைகளுக்கேற்ப சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

பயிற்சியாளர்களும் விண்ணப்பிக்கலாம். விரும்புவோர் உங்கள் விண்ணப்பங்களைத் தபால் பெட்டி இல. 2129, கொழும்பு என்ற முகவரிக்கு 20/11/2014க்கு முன்பு அனுப்பவும்.

மேலதிக தொடர்புகளுக்கு: 011 57 37 597

## விற்பனைக்கு

**TV**
LG LED TV
49 Inch
Model LB 5500
Made in Mexico 2014
Brand new
Price 250 000/=



**Audio Set**
JVC Brand
Wed
3 CD in one time
Good Quality Price 20 000/=



**DVD Player**
Include sound set and Display DVD
Good Quality Price 15 000/=



தொடர்புகளுக்கு: 077 950 7009 (53705)(4.6.3)

## மகளிர் இல்லத்திற்கான பெண் மேற்பார்வையாளர்கள் தேவை

திருநெல்வேலியில் இயங்கிவரும் மகளிர் இல்லத்திற்கு தங்கியிருந்து பணியாற்றக் கூடிய பெண் மேற்பார்வையாளர்கள் தேவைப்படுகிறார்கள். நற்குணம், நல்லொழுக்கம், சேவை மனப்பான்மை, சைவ உணவு பிரியமுள்ள A/L தராதரம் கொண்ட மகளிர் விரும்பப்ப்டுகின்றனர்.

**வயது**

**25 முதல் 45 வயது வரை**

**உணவு, தங்குமிட வசதி, நல்ல ஊதியம் வழங்கப்படும்.**

தொடர்புகளுக்கு :
தொலைபேசி எண் :
077 340 3027, 077 413 7763
(53899)(7.6.3)

## யாழ்மண்ணின் அபிவிருத்திக்கு

# பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி

தரும் பெறுமதிமிக்க நிதியியல் சேவைகள்

**மிகக்குறைந்த வட்டி வீதம்**



**மனம் நிறைந்த பாதுகாப்பு**



**இலகு தவணைக் கொடுப்பனவு**



**மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை**

தொடர்புகளுக்கு...

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | விதுமன் ~ 0779797436 |
| | யூலி கெய்சர் ~ 0755461880 |
| சாவகச்சேரி | சதீஸ் ~ 0775386232 |
| நெல்லியடி | மயூரன் ~ 0773681466 |
| பருத்தித்துறை | தர்சணவர் ~ 0771350074 |
| சங்கானை,மானிப்பாய் | கிரிஷாந் ~ 0771636284 |

PLC



பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ்.பிஎல்சி
இல.12 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 0212228031,0212219354
பக்ஸ் - 0212229627



plc.lk

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# சபாஷ் ஹுசைன்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைனை உண்மையில் பாராட்ட வேண்டும். யாரும் எதிர்பாராத விதத்தில் இலங்கை அரசை மிகக் கடுமையாக விமர்சித்திருக்கிறார். கொழும்பு அரசியல் வட்டாரத்தை அவரது அறிக்கை அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது என்பது வெளியிடப்பட்டுள்ள பதில் அறிக்கையில் இருந்தே தெரிகிறது.

இதற்கு முன்னால் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராகப் பதவி வகித்து வந்தவரான நவிப்பிள்ளையைவிடவும் கடுமையான சொற்களைக் கொண்டு இலங்கையை விமர்சித்திருக்கும் ஹுசைனின் துணிச்சல் எதிர்பாராதது. அதிலும் கொழும்பு அரசு எதிர்பாராதது. நவிப்பிள்ளை இனத்துவ அடிப்படையில் தமிழ் வேரைக் கொண்டவர் என்பதனால் இலங்கை விவகாரத்தில் அளவுக்கதிகமாகவே தலையீடு செய்கிறார், கருத்துச் சொல்கிறார் என்று சொல்லி வந்த கொழும்பு அரசுக்கு ஹுசைனின் இந்த நேர்மையான நேரடியான அணுகுமுறை நிச்சயம் வலிக்கவே செய்யும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை பக்கச்சார்பாகச் செயற்படுகிறது, தான் விரும்பும் முடிவு ஒன்றை எட்டுவதற்குத் தேவையான ஆதாரங்களை மட்டுமே திரட்டுகிறது என்ற சாரப்பட வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் விடுத்த அறிக்கைதான் இப்போது பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறது. அந்த அறிக்கையில் சொல்லப்பட்டவற்றைப் புரிந்துகொள்வதற்கான எந்த முயற்சிகளையும் எடுக்காமலேயே ஆணையாளரின் பதில் அறிக்கை விடுக்கப்பட்டதாக ஐ.நாவுக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க ஆணையாளருக்கு எழுதிய பதில் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையைச் சர்வதேச அரங்கில் தலைகுனிய வைக்கும் வகையில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் செயற்பட்டது இது முதற்றடவையல்ல. இதற்கு முன்னரும் பல தடவைகள் இவ்வாறு அவர் விடுத்த அறிக்கைகள் பல சர்வதேச அரங்கிலே கடும் விமர்சனங்களை எதிர்கொண்டிருந்தன. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தனது அறிக்கையில் மிகவும் கனதியான, தீவிரமான சொற்களைப் பயன்படுத்தி இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். இதனை, "அவர் பொறுமையிழந்து வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்" என்று ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்திருக்கிறார்.

ஆனால், மனித உரிமைகள் ஆணையாளரின் வார்த்தைகள் பொறுமையிழந்ததனால் வந்தவையல்ல. நேர்மையான, சுயாதீனமான விசாரணை ஒன்றைக் கொச்சைப்படுத்தும் இலங்கை அரசின் நோக்கத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக வந்தவை. அவை அந்த வகையிலேயே தெரிவிக்கப்பட வேண்டும். அதைவிட இன்னும் கனதியான சொற்களை ஆணையாளர் பயன்படுத்தினால்கூடத் தவறில்லை.

போர் நடந்துகொண்டிருந்தபோது அதில் தலையிட்டு அப்பாவி மனித உயிர்களின் இழப்புகளைத் தடுக்க ஐ.நா. தவறியிருந்தது. அதனை தனது உள்ளக மீளாய்வு மூலமாக அது ஏற்றுக்கொண்டும் இருந்தது. அத்தகைய தவறை மீண்டும் ஒரு தடவை ஐ.நா. செய்யக்கூடாது. அது ஐ.நா. மீது மொத்த மனித குலமும் வைத்திருக்கக்கூடிய நம்பிக்கையைச் சிதறடித்துவிடும். எனவே இலங்கை விடயத்தில் மிகத் தெளிவான காத்திரமான அணுகுமுறையை ஐ.நா. வைத்திருப்பது அவசியமானதே. மனித உரிமைகள் சபை மட்டுமல்ல, பாதுகாப்புச் சபை, பொதுச் சபை என்பனவும் அத்தகைய அணுகுமுறையைக் கையாளவேண்டிய தேவையுண்டு.

அதனையே ஆணையாளர் இப்போது மிகச் சொற்பமாகச் செய்துள்ளார். அவரது செயல் பாராட்டப்பட வேண்டும். அது விமர்சிக்கப்படக் கூடாது. இனிமேலாவது அவருடன் ஒத்துழைத்து நீதியான, சுயாதீனமான விசாரணையை நடத்த இலங்கை முன்வரவேண்டும். அதன் மூலமே தமிழர்களுக்கு ஐ.நாவும் கொழும்பும் ஓரளவுக்காவது நீதி செய்ய முடியும்.

# இன்னுமொரு ஜனநாயகப் புதைப்பு?

கந்தவனம் கோணேஸ்வரன்


2015ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை (பட்ஜெட்) ஜனாதிபதி யால் முன்வைக்கப்பட்டிருக்கிறது. பொருளாதார நிபுணர்கள் தலையைப் பிய்த்துக்கொண்டாலும் இந்த நிதிநிலை அறிக்கை பொதுமக்கள் மத்தியில் வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை. பொருளாதார வல்லுநர்கள் கணித சூத்திரங்களைப் போட்டுப் பார்க்கட்டும். நாங்கள் அடுத்த தடவையும் மஹிந்தவுக்கே வாக்குப்போடுவோம் என்று மக்கள் தீர்மானித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. மாணவர்கள் தொடக்கம் ஓய்வூதியர்வரை அனைவருக்கும் வரவு - செலவுத் திட்டத்தில் சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்த ஜனாதிபதி தன்னை நாட்டின் நிதி அமைச்சராகக் கருதாமல் அடுத்து வரும் தேர்தலில் ஆளுங்கட்சிக்கு வாக்குச்சேகரிக்கும் முகவராகவே செயற்பட்டிருக்கிறார் என எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன. துண்டுவிழுந்தொகையோ மிகப்பெரி யது. அதற்கான பொருளீட்டல் முறைமைகள் தெளிவாக இல்லை என்றும் பொருளியல் வல்லுநர்கள் தெரிவித்திருக்கி றார்கள். நிதிநிலை அறிக்கையை மஹிந்த தனது ஜனாதிபதித் தேர்தலுக்கு வாக்குச் சேகரிக்கும் உத்தியாகவே பயன்படுத்தி யிருக்கிறார் என்பது நன்கு தெரிகிறது. அதேபோல் இந்த உத்தியைத் தகர்த்தெறிந்து மஹிந்தவுக்கு எதிராக வாக்காளர்களைத் திருப்பிவிடும் சக்தி இலங்கையில் இன்று யாரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை.

அதேசமயம் எத்தனை சலுகைகளை அறிவித்தாலும், எத்தனை வாக்குறுதிகளைத் தந்தாலும் தங்கள் பிரச்சினை கள் தீரும்வரை வடக்கு, கிழக்கு வாழ் தமிழர்கள் நிச்சயம் ஜனாதிபதிக்கு வாக்களிக்கப் போவதில்லை. பள்ளிவாசல் உடைப்பு, பொதுபலசேனா வளர்ப்பு என்ற காரணங்களால் முஸ்லிம் தலைமைகளையும் உதாசீனம் செய்து ஜனாதிபதிக்கு எதி ரான அணியில் முஸ்லிம்களின் வாக்குகளும் சேர்ந்து கொள்ள வாய்ப்பிருக்கிறது. 'ஒவ்வொரு முஸ்லிமையும் நான் மக்காவுக்கு அனுப்பிவைக்கப் போகிறேன்' என்று ஜனாதிபதி அறிவித்திருப்பது முஸ்லிம்மக்கள் மத்தியில் எடுபடப்போகின்ற விடயமல்ல. அதேசமயம், ஜனாதிபதி மூன்றாவது தடவையும் போட்டியிட முடியாது என்ற நிலைப்பாடு அரசியல் சார்ந்தோரிடத்தே பலமாகக் காணப்படுகிறது. இதில் சிங்களவர், தமிழர் என்ற வேறுபாடு காணப்படவில்லை. சட்டங்களை வளைத்துப் போட்டுக்கொண்டு ஒரு குடும்பம் நாடு முழுவதையும் தன்னாளுகைக்குக்கீழ் கொண்டு வருவதைத் தடுக்கும் முயற்சியாக அது காணப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வமான அறிவிப்பு இன்னமும் வெளிவராத நிலையிலும் மஹிந்த குடும்பத்தினர் மீதான எதிர்ப்பு வலுவானதாகவே இருக் கிறது. மூன்றாவது தடவையும் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதி பதித் தேர்தலில் போட்டியிடுவது சட்டப்படி ஏற்கத்தக் கதல்ல என்ற நியாயமும், மூன்றாவது தடவையும் அவர் ஜனாதிபதியாக வருவாரேயானால் அது குடும்ப சர்வாதிகாரத்துக்கு வழி வகுத்துவிடும் என்ற அச்சமும் நாட்டு மக்களிடையே பரவலாகக் காணப்படுகிறது. ஜனாதிபதி மீண்டும் தேர்தலில் களமிறங்குவாரானால் தேர் தல் ஆணையாளருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்ற கருத்தைச் சிலர் முன்வைத்திருக்கிறார்கள். இலங்கை அரசமைப்பின்படி ஜனாதிபதியின் மேல் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதென்பதால் தேர்தல் ஆணையாளர் மேல் நடவடிக்கை எடுக்க முடியுமென இவர்கள் நம்புகிறார்கள்.

மூன்றாவது தடவையும் தான் போட்டியிடலாம் என்ற உறுதிப்பாடு ஜனாதிபதித் தரப்பிலும் மெதுவாகத் தளர்ந்து வருவதாகத் தெரிகிறது. ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டு, மஹிந்த போட்டியாளராக நிற்க முற்படுமிடத்து தேர்தல் ஆணையாளருக்கு எதிராக வழக்குத் தொடரப்படுமாயின் மஹிந்தவின் தம்பி கோத்தபாய வைக் களமிறக்குவதற்கான முயற்சியொன்று நடைபெறுவதாகவும் தகவல்கள் கசிய ஆரம்பித்துள்ளன. பொது பலசேனாவின் ஆதரவும், பிக்குகளின் ஆசியும் அவருக்கு நிறையவே இருப்பதால் அவர் தம் குடும்பத்தினரின் சார்பில் அடுத்த ஜனாதிபதியாக வரக்கூடும் என ராஜபக்ஷ குடும்பத்தினர் நம்புகிறார்கள். கோத்தபாய போட்டியில் இறங்குவாரானால் அது எதிரணியினருக்கே சாதகமாக அமைய வாய்ப்பிருக்கிறது. கோத்தபாய ஜனாதிபதியின் தம்பி என்கிற காரணத்தால் மட்டுமே ஆளுந்தரப் பால் மதிக்கப்படுபவர். அவர் மக்கள் செல்வாக்குப் பெற்ற ஒருவரல்லர்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலை மார்ச் மாதம் வரைக்கும் தள்ளிப்போடலாமா என்ற சிந்தனையும் அரச தரப்பாரிடம் இல்லாமலில்லை. ஜனவரி மாதத்தில் நிகழலாமென எதிர்பார்க்கப்படும் பாப்பரசரின் இலங்கை வருகை இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். ஜனவரியில் தேர்தல் இடம்பெறுமானால் பாப்பரசரின் வருகை தள்ளிப்போகலாம்.







எனினும், மார்ச் மாதத்தில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இறுக்கமான நெருக்கடிகளையும் எதிர்கொள்ளவேண்டிய நிலைமை ஜனாதிபதிக்கு இருக்கிறது. அத்துடன், நாள்கள் செல்லச் செல்ல ஜனாதிபதியின் வாக்குவங்கியில் சரிவுகள் ஏற்படவும் வாய்ப்பிருக்கிறது. இவற்றை வைத்துப் பார்க்கையில் ஜனவரி மாதமே மஹிந்தவுக்கு சாதகமான காலம் எனலாம்.

இதேவேளை, மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையும் ஜனாதிபதி யாகுமிடத்து நாடாளுமன்றத் தேர்தலை உரியகாலத்தில் நடத்தாமல் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றின்மூலம் நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தை மேலும் ஆறு வருடங்களுக்கு நீடிக்கமுயலலாம் என அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள். அவ்விதம் அமையுமானால் அது. இலங்கை ஜன நாயகத்தின் மிகப்பெரிய வீழ்ச்சியின் தொடக்கமாகவே அமையும்.

இத்தகைய கருத்துக்கணிப்பு நடைமுறைமூலம் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.நாடாளுமன்றத்தின் ஆயுள்காலத்தை நீடித்த வரலாறு இலங்கை அரசியலுக்குண்டு. 1982ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற ஜே.ஆர் அரசமைப்பில் நான்காவது திருத்தத்தை மேற்கொண்டு அவ்வாண்டு டிசெம்பர் 22ஆம் திகதியன்று சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தி அதில் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுக் கொண்டதன்மூலம் நாடாளுமன்றத்தின் ஆயுள் காலத்தை மேலும் ஆறு ஆண்டுகள்-1989 ஓகஸ்ட் 4ஆம் திகதிவரை நீடித்துக்கொண்டார்.

இந்தக் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு ஜே.ஆர்.ஜெயவர்த்தன நாடாளுமன்றத் தேர்தலின் மூலம் ஜனநாயகத் தீர்ப்பொன்றை எதிர்கொள்ளப் பயந்ததன் விளைவாகவே இடம்பெற்றது. ஆறில் ஐந்து பங்கு பெரும்பான்மையுடன் இருந்த அரசு தனது பெரும்பான் மைப் பலத்தைப் பொதுத்தேர்தலொன்றின் மூலம் இழந்துவிடக்கூடும் என ஜே.ஆர். அஞ்சியதாலேயே சர்வஜன வாக்கெடுப்பை விரும்பினார். எவ்வாறெனினும் அன்று பிரதான எதிர்க்கட்சியாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும், 1977 தேர்தலில் தமிழ்மக்கள் தமக்குத் தந்த ஆணையை மீறி ஒரு கணமேனும் பதவியின் ஆயுள் காலத்தை நீடித்துக் கொள்ள மாட்டோம் என அறிவித்து விட்டுத் தங்கள் பதவிகளைத் தூக்கியெறிந்து சிறந்த உதாரணர்களானார்கள். ஜே.ஆர். அன்றிருந்த நிலையில் தான் மஹிந்த இன்றிருக்கிறார்.

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 192

# நீரிழிவுக்கு வாய்மூலம் மருந்துகள் உள்ளெடுக்கும்போது கவனிக்க வேண்டிய முக்கிய விடயங்கள் யாவை?



1. நீரிழிவுக்கான உங்களது மருந்துகள் ஒரு வைத்தியர் மூலம் உறுதிப்படுத்தி பரிந்துரை செய்த மருந்துகளாக இருக்க வேண்டும்.
2. ஒரே அளவு மருந்து பலருக்குப் பல வித்தியாசமான விளைவுகளைக் கொடுக்கக் கூடியது. மருந்து உட்கொண்ட பின்பு உங்கள் உடலிலோ, நடத்தையிலோ ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியரை நாடவும்.
3. வைத்தியர் உங்களுக்கு மருந்தைப் பரிந்துரை செய்யும் போது உங்களது தற்போதைய உடல் நிலை, வாழ்க்கை முறை, உங்களது தனிப்பட்ட தேவைகள், உங்களுக்கு இருதய, சிறுநீரக கல்லிரல் சம்பந்தப்பட்ட நோய்கள் இருக்கின்றனவா? தனிமையில் இருப்பவரா? கர்ப்பம் தரித்தவரா? கர்ப்பம் தரிப்பதற்குத் தயார் நிலையில் உள்ளவரா? மது அருந்துபவரா? வயதானவரா போன்ற பல விடயங்களை கவனத்தில் கொண்டே மருந்தைப் பரிந்துரை செய்வார். எனவே இவை சம்பந்தமான தகவல்கள், ஆதாரங்கள் இருப்பின் அவற்றை வைத்தியருக்கு வழங்கி உதவலாம்.
4. உங்களுக்கு வழங்கப்பட்ட மருந்துகளைத் தனித்தனி சிறிய, காற்றுப் புகாத உலர்ந்த போத்தல்களில் போட்டு, அவற்றின் பெயர், மில்லி கிராம் அளவு, போடும் நேரங்கள், திகதி போன்றவற்றைக் குறித்து வைப்பதன் மூலம் பாவனைக்கு உதவியாகவும், பாதுகாப்பாகவும் இருக்கும்.
5. நீரிழிவுக்காக மருந்து போடும் நீங்கள் ஓர் ஆரோக்கியமான உணவுத் திட்டத்தை கைக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். அத்துடன் எதிர்பாராத வகையில் வரும் சிக்கல்களையும் குறைப்பதற்கான வழிகளிலும் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

உதாரணம்:-

குறைந்த குளுக்கோஸ் நிலை HYPOGLYCAEMIA

கூடிய குளுக்கோஸ் நிலை HYPEGLYCAEMIA

6. நீரிழிவுக்காக உங்களுக்கு வழங்கப்படும் மருந்துகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு தன்மையில் பணிபுரிகின்றன. சில மருந்துகள் சதையில் பீட்டா கலங்களைத் தூண்டி இன்சுலினை அதிகமாகச் சுரக்கச் செய்வதாலும் சில மருந்துகள் தசைகளில் இன்சுலின் எதிர்ப்பு நிலைகளைச் சரி செய்வதாலும், சில மருந்துகள் சிறுகுடலில் உணவு செரிமானம் அடைவதைத் தாமதப்படுத்துவதாலும், வேறு சில மருந்துகள் கல்லீரலில் குளுக் கோஸ் வெளியாகி குருதியில் கலப் பதைத் தாமதப்படுத்துவதாலும், குருதியின் வெல்ல மட்டத்தைக் கட்டுப்படுத்த முயல்கின்றன. எனவே உங்களுக்குப் பரிந்துரை செய்யும் மருந்தைப் பொறுத்து அவற்றை எவ்வாறு உள்ளெடுக்க வேண்டும் என்பதை வைத்தியர் அறிவுறுத்துவார்.
7. கிளிபென்கிளமைட் Glibenccamide போன்ற மருந்துகள் நீண்ட நேரத்துக்குக் குருதியில் கலந்து செயற்படும் திறன் உடையவையாதலால், இவை குருதியில் வெல்லமட்டத்தை அளவுக்கு அதிக மாகக் குறைக்க வாய்ப்பு இருக்கிறது. இந்த மருந்துகளை எடுக்கும் முதியவர்கள், மது அருந்துபவர்கள், உணவு உள்ளெடுப்பதில் ஒழுங்கு அற்றவர்களைக் கண்காணிப்பது அவசியம்.
8. (Glipizide) கிளிபிசைட் மருந்தை உள்ளெடுப்பவர்கள், உணவு உண் பதற்கு அரை மணி நேரத்துக்கு முன்பாக எடுப்பது நல்லது. இதன் மூலம் குருதி யில் வெல்லமட்ட அதிகரிப்பைத் தடுக்கலாம்.
9. கிளைற்றசோன் வகை மருந்துகள் (Glitazones) றொசி கிளித்தரசோன் (Rosiglitazone) பொயக்கிளிதரசோன் (Poigilitazone) ஆகிய மருந்துகளை உணவு உண்டபின்பு எடுப்பது நல்லது.
10. ACARBOSF அகர்போஸ் போன்ற மருந்துகள் மாப்பொருள் உணவுகள் உணவுக் கால்வாயில் முழுமையாகச் செரிமானம் அடைவதைத் தாமதப் படுத்துவதால் குருதியில் வெல்ல மட்டத்தைக் கட்டுப்படுத்த உதவுகின்றன. இவ்வகை மருந்துகளை உணவுக்கு முன்பு எடுக்க வேண்டும்.
11. நீரிழிவுக்கு வழங்கப்படும் மருந்துகளில் நீண்ட நேரத்துக்கு தொழிற்படும் மருந்துகளை SR, MR, XR எனக் குறிப்பிட்ட மருந்துகளை தூள்கள் ஆக்கவோ, பற்களால் கடிக்கவோ உமியவோ கூடாது. அத்துடன் இவ்வகை மருந்துகளை ஒரு கிளாஸ் நீருடன் உள்ளெடுப்பது சிறப்பானது.
12. ஒரு சில மருந்துகளைத் தவிர பொதுவாக நீரிழிவுக்கான மருந்துகளை உணவு உண்பதற்கு முன்பு எடுப்பது ஏற்புடையதாகும். பின்பு உணவு உண்பதைத் தாமதிக்காதீர்கள்.

*ச.சுதாகரன்,*
*தாதிய உத்தியோகத்தர்,*
*யாழ். போதனா வைத்தியசாலை.*

பகுதி-2

# எண்ணெய் தோய்ந்த சுன்னாகம் மண்ணை என்ன செய்யப் போகிறோம்?

பொன்கொழிக்கும் பூமியாக, பரந்த விவசாய நிலங்களையும் மக்கள் செறிந்துவாழும் குடியிருப்புப் பகுதிகளையும் தன்னகத்தே கொண்ட சுன்னாகம் மண்ணின் நிலத்தடி நீரை மாசுபடுத்திக் கொண்டிருக்கும் பல்லாயிரம் லீற்றர் கழிவு எண்ணெயை எவ்வாறு அகற்றப் போகிறோம்? நிலத்துக்கடியில் பரம்பிச் செல்லும் இதன் பரம்பலை எவ்வாறு கட்டுப்படுத்தப்போகிறோம்? இதனால் மனிதனில் ஏற்படக்கூடிய பெரிய சுகாதாரப் பிரச்சினைகளை எவ்வாறு தடுக்கமுடியும் அல்லது குறைக்க முடியும்? இந்தப் பகுதிகளில் விளையும் பயிர்களிலும் தாவரங்களிலும், இந்த எண்ணெய் என்னவிதமான மாற்றங்களை ஏற்படுத்தப்போகின்றது? இந்தப் பகுதியில் வளரும் தாவர உற்பத்திப் பொருள்களை மனிதன் உட்கொள்வது பாதுகாப்பானதா? இந்த மாசுபட்ட நீரை அருந்தும் ஆடு, மாடு, கோழி போன்ற உயிரினங்களிலே இந்த எண்ணெய் என்னவிதமான பாதிப்புகளை ஏற்படுத்தும்? இவற்றின் இறைச்சிகளையும் முட்டைகளையும் மனிதன் உணவாக உட்கொள்வது பாதுகாப்பானதா?

இவ்வாறான பல கேள்விகளுக்கு விடை காண்பதற்கு பல்துறை சார்ந்த வல்லுநர்களின் ஆலோசனைகளும் உதவிகளும் பெறப்பட வேண்டிய கட்டாயநிலை தோன்றி இருக்கிறது.

2012ஆம் ஆண்டளவிலே சுன்னாகத்து நிலத்தடி நீரிலே எண்ணெய் கலந்திருப்பது அவதானிக்கப்பட்டது. இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து புதிதாக எண்ணெய் மண்ணில் சேருவதைத் தடுப்பதற்குப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமான ஆய்வுகளும் நடத்தப்பட்டிருக்கின்றன. அத்துடன் பொதுமக்களுக்கு இது சம்பந்தமான தெளிவான அறிவூட்டல்களும் ஆலோசனைகளும் வழங்கப்பட வேண்டிய அவசர அவசிய தேவை எழுந்திருக்கிறது. இந்தப் பிரதேசத்தில் வாழும் பொது மக்களுக்கான அறிவூட்டல், ஆலோசனை நிகழ்வுகள் விரிவுபடுத்தப்படவேண்டும். இது எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பெரிய இடர்களைத் தவிர்ப்பதற்கு உதவியாக அமையும்.

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையம் 50 வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாண மக்களுக்குப் பெரும் சேவையாற்றி வருகிறது. இதில் பணியாற்றுபவர்களின் கடின உழைப்பு பாராட்டுதற்குரியது. இந்த நிலையத்தின் தொழிற்பாட்டின் போது வளிமண்டலத்துக்கு விடப்படும் எண்ணெய்த் துகள்கள், காபன்கள் மற்றும் காபன்சேர்வைகளின் தாக்கம் மக்களுக்கு ஏற்படாமல் தவிர்ப்பதற்குப் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பாதுகாப்பு பொறிமுறைகள் மூலம் அந்தப்பிரதேசத்து வளிமண்டலம் அசுத்தமடைவது முற்றாகத் தடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை மீண்டும் ஒருமுறை உறுதிசெய்து கொள்வது நல்லது. இது அங்கு தொழில்புரிபவர்களினதும் அந்தச் சுற்றுவட்டாரத்தில் வாழ்பவர்களினதும் சுகாதார நிலையைப் பாதுகாத்துக்கொள்வதற்குப் பெரிதும் உதவியாக இருக்கும். வளிமண்டலம் இவ்வாறு அசுத்தமடையுமாயின், அது நுரையீரல், சுவாசத் தொகுதி மற்றும் உடல் சம்பந்தமான பல சுகாதாரப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கக் கூடும்.

இந்தப் பிரதேசத்து மக்கள் மழை காலங்களில் நிலத்தடி நீரிலுள்ள எண்ணெயின் செறிவு குறைவாகவும், கோடை காலங்களில் இதன் செறிவு கூடுதலாகவும் இருப்பதை அவதானித்திருக்கிறார்கள். இந்த நிலத்தடி எண்ணெய் கலப்பு பிரச்சினைகள் காரணமாக அந்தப்பகுதி மக்கள் பல்வேறுபட்ட மன உளைச்சல்களுக்கும் ஆட்பட்டு இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் தாம் "தனித்துவிடப்பட்டு விட்டோமோ? எவரது உதவியை நாடுவது? இனி என்ன செய்வது? எமக்கு ஏற்படக் கூடிய சுகாதாரப் பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்வதற்கு என்ன செய்யவேண்டும்?" போன்ற பல விடைதெரியாத வினாக்களினால் மனக்குழப்பத்துக்கு உட்பட்டிருக்கிறார்கள். எனவே இந்தப் பிரச்சினையில் அனைத்துத் தரப்பினரதும் கூட்டுமுயற்சி அவசியமாகின்றது.

நிலத்தடி நீரில் கலந்திருக்கும் எண்ணெயின் துல்லியமான இரசாயனக் கட்டமைப்புகளும் அவற்றின் வீதாசாரமும் அறியப்பட வேண்டும். அத்துடன் அந்த எண்ணெயில் கரைந்திருக்கும் இரசாயனப் பொருள்களும் மூலகங்களும் எவை? அவற்றின் செறிவுகள் என்ன? என்பது சம்பந்தமாகவும் ஆராய்ச்சிகள் செய்து அறியப்படவேண்டும். இவை அறியப்படின் இவற்றால் ஏற்படக் கூடிய பாதிப்புகளைத் துல்லியமாக அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும். அத்துடன் பொருத்தமான தடுப்பு முறைகளையும் வினைத் திறனுடன் செய்வதற்கு இது உதவியாக அமையும்.

இது பல மக்களைப் பாதிக்கக்கூடிய பிரச்சினையாக இருப்பதாலும், பல்துறை வல்லுநர்களின் பங்களிப்புத் தேவையாக இருப்பதாலும், பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பெருந்தொகையான பணம் தேவைப்படுவதாலும் இதனை ஒரு தேசியப் பிரச்சினையாகப் பிரகடனப்படுத்தி நடவடிக்கைகளை விரைவுபடுத்துவது பயனுடையதாக அமையும்.

**சுன்னாகம் மின் உற்பத்தி நிலையம் 50 வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாண மக்களுக்குப் பெரும் சேவையாற்றி வருகிறது.**

தொடரும்

சி.சிவன்சுதன்,
வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை

# எயார்டெல் சேவை நிலையம் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில்



இருபதுக்கும் மேற்பட்ட ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளில் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வரும், முன்னணி சர்வதேச தொலைத்தொடர்பாடல் சேவைகளை வழங்கும் நிறுவனமான பார்தி எயார்டெல் நிறுவனம் தனது புதிய வாடிக்கையாளர் சேவை நிலையத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவியுள்ளதாக அறிவித்துள்ளது. யாழ்ப்பாணம் மற்றும் வட பிராந்தியத்தை சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு வசதியான முறையில் சிறந்த சேவைகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் இந்த சேவை நிலையம் நிறுவப்பட்டுள்ளது. எயார்டெல் லங்காவின் புதிய பிரான்ட் ஷொப் என்பது அதிகளவு இடவசதிகளை கொண்ட 180, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ளது.

இந்தப் புதிய வாடிக்கையாளர் சேவை நிலையத்தை, எயார்டெல் லங்கா நிறுவனத்தின் பிரதம வாடிக்கையாளர் சேவை அதிகாரி ரொமேஷ் டி மெல் அங்குரார்ப்பணம் செய்திருந்தார். இந்நிகழ்வில் ரொமேஷ் உரையாற்றுகையில், வட பிராந்தியம் என்பது நாம் அதிகளவு விரும்பும் சந்தையாக அமைந்துள்ளது. இந்தப் பிராந்தியத்தில் பலராலும் அதிகளவு விரும்பப்படும் சேவை வழங்குநராக எயார்டெல் காணப்படுகிறது. நாம் எமது சேவைகளை ஆரம்பித்தது முதல், எமது எதிர்பார்ப்புகளையும், நம்பிக்கையையும் இந்தப் பிராந்தியத்தின் மீது கொண்டிருந்தோம். அதிகளவு முதலீடுகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம். சிறந்த வலையமைப்பை கொண்டிருப்பது பற்றி மட்டும் நாம் சிந்திக்காமல், சமூக மற்றும் கலாசார நிகழ்வுகள் பலவற்றுக்கு நாம் அனுசரணைகளை வழங்கியுள்ளோம். இதன் மூலம் நாம் இந்தப் பிராந்தியத்துக்காக எம்மை அர்ப்பணித்துள்ளோம் என்பது உறுதியாகிறது. நாம் தொடர்ந்தும் எமது முதலீடுகளை மேற்கொள்வதற்கு எம்மை அர்ப்பணித்துள்ளோம்.

அதன் மூலம் சிறந்த வலையமைப்பையும், உலகத் தரம் வாய்ந்த வாடிக்கையாளர் சேவை மற்றும் சிறந்த கணக்கு முகாமைத்துவ செயற்பாடுகளை எமது யாழ்ப்பாண மற்றும் வட பிராந்திய வாடிக்கையாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்கவுள்ளோம் என்றார்.

இலங்கையின் தொலைத் தொடர்பாடல் துறையில் புரட்சியை ஏற்படுத்தியிருந்த நிறுவனம் எனும் வகையில் எயார்டெல்லங்கா பெருமையடைகிறது. யுத்தத்துக்கு முன்னரான மற்றும் தற்போதைய போருக்கு பின்னரான அபிவிருத்தியுடன் கூடிய நிலையில், வட பிராந்தியத்தை சேர்ந்த மக்கள் அதிகளவு நாடும் தொலைத்தொடர்பாடல் சேவை வழங்குநராக எயார்டெல் திகழ்கிறது. எனவே, இந்த விற்பனை நிலையம் வட பிராந்தியத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களின் சகல செயற்பாடுகளுக்கும் பிராந்திய அலுவலகமாக இயங்கும்.

இந்தப் புதிய வாடிக்கையாளர் சேவை நிலையம் வார நாள்களில் காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை திறந்திருக்கும். சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் 2.00 மணி வரை திறந்திருப்பதுடன், ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் மட்டும் மூடியிருக்கும். முற்கொடுப்பனவு, பிற்கொடுப்பனவு, புதிய இணைப்புகள், கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகள், ரீலோட்கள், சேவைக் கோரிக்கைகள், மாற்றங்கள் கோரிக்கைகள் மற்றும் சகல விதமான சேவைகளையும் இந்த சேவை நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். (த)



## நாமல் நிதி நிறுவனத்தின் முதலாம் ஆண்டு நிறைவு

கொழும்பு பங்கு பரிவர்தனை நிலையத்தின் கீழ் இயங்கி வரும் நாமல் நிதி நிறுவனத்தின் வடமாகாண கிளையின் முதலாம் ஆண்டு நிறைவுவிழா அண்மையில் நாமல் நிறுவனத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் கொழும்பு நாமல் நிதி நிறுவனத்தின் சிரேஷ்ட விற்பனை முகாமையாளர் தறக்க முதலிகே மற்றும் நாமல் நிதி நிறுவனத்தின் யாழ். பிராந்தியக் கிளையின் சிரேஷ்ட முதலீட்டு ஆலோசகர் கேரவிந்தராஜ் றெஸ்லின் ஆகியோர் கலந்துகொண்டு தேசிய சொத்து முகாமைத்துவ நிறுவனங்களுக்கான முதலீடுகளும் எதிர்கால சேமிப்பும் என்ற கருப்பொருளில் மக்களுக்கு ஆலோசனைகளை வழங்கினர்.

நிகழ்வில் அருட்தந்தையர்கள், யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் தலைவர் இ.ஜெயசேகரன், பொதுமக்கள், வாடிக்கையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த-ரி)



# சி: டி. பி. நிறுவனத்திற்கு வெண்கல விருது

சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பிஎல்சி நிறுவனம், அண்மையில் இடம்பெற்ற சிலிம் வர்த்தகநாம சிறப்பு விருது விழா 2014இல் வெண்கல விருதினைத் தனதாக்கிக் கொண்டது.

வங்கியியல், காப்புறுதி, தொலைத் தொடர்பாடல் மற்றும் ஏனைய சேவைத் துறைகளில் உள்ள செயற்திறன் மிக்க சேவை வர்த்தகநாமங்களை அடையாளப்படுத்தும் 'ஆண்டிற்கான சிறந்த சேவை வர்த்தகநாமம்' பிரிவில் போட்டியிட்டு சி.டி.பி நிறுவனம் இவ் விருதினை வென்றெடுத்தது.

'வருடத்திற்கான சிறந்த சேவை வர்த்தகநாமம் பிரிவில் விருதை வென்றமையைவிட தரமான சேவை நோக்கிய எமது பங்களிப்புக்கான உயரிய ஒப்புதலாக அமைந்துள்ளது' என சந்தைப்படுத்தல் பிரிவின் பிரதி பொது முகாமையாளர் கார்த்திக் இளங்கோவன் தெரிவித்தார்.

'உள்நாட்டு சேவை வர்த்தகநாமம் எனும் வகையில் எமது அந்தஸ்துக்கான அங்கீகாரமாக இந்த விருது கிடைத்தமை பெருமைக்குரிய விடயமாகும். இந்த வகையில் CDB அங்கீகரிக்கப்பட்டமையானது எமது வாடிக்கையாளருக்கு சிறப்பானதை வழங்குவதற்கான செயல்முறைகளை புதுப்பிக்கும் எமது உறுதிப்பாட்டினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. எமது வர்த்தகநாமத்தை கட்டியெழுப்புவதற்காக நிறுவனத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் பல மணிநேரம் கடினமாக உழைத்தோம். இந்த விருதானது CDB அணியினரின் உந்துசக்திக்கு கிடைத்த ஒப்புதலாகவும், வர்த்தக நாமத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல உதவுவதாகவும் அமையும்' என மேலும் அவர் தெரிவித்தார்.

போட்டிமிக்க சேவை பிரிவில் நிறுவனம் வெண்கல விருதை வென்றமையானது நிதிச் சேவைகள் துறை மற்றும் ஏனைய துறைகளிலும் முன்னணி வங்கியல்லாத நிதி நிறுவனமாக மாத்திரமன்றி உள்நாட்டு வர்த்தகநாமமாகவும் வேறுபடுத்திக் காட்டுகிறது.

'அனைத்துச் சேவைத் துறைகளிலும் உள்ள வர்த்தகநாமங்களுக்கு எதிராக போட்டியிடும் திறனுக்கு கிடைத்த அத்தாட்சியாக இவ்விருது அமைந்துள்ளது. சந்தை புத்துருவாக்கம் மற்றும் செயல்முறை நோக்கிய எமது வர்த்தகநாமத்தின் மூலோபாய கவனம் மற்றும் உடன்பாடு ஆகியன எமது போட்டியாளர்களை வெற்றிக்கொள்ள வழிவகுத்துள்ளது. தொடர்ந்து நாம் புத்துருவாக்கம் தொடர்பில் சேவையாற்றி வருவதுடன், எமது வாடிக்கையாளர்களுக்கு மேலதிக பெறுமதியை சேர்த்து வருகின்றோம்' என மேலும் இளங்கோவன் தெரிவித்தார். (த)

# ஹொண்டா மோட்டார் வாகனங்களின் தோற்றம்

21 ஆம் நூற்றாண்டில் காலடி வைத்திருக்கும் இந்த அதிநவீன உலகில் தனக்கென் ஒரு மகுடத்தைப் பெற்று பல தேசங்களில் தன படைப்புக்களை உருவாக்கிய ஒரே நிறுவனம்-ஹொண்டா ஆகும். புதிய பரம்பரையைத் திருப்திப்படுத்தும் நோக்கில் இன்று பல புதிய புதிய தொழினுட்பத்துடன் கூடிய பல படைப்புக்களை புதிய வடிவமைப்புடன் ஹொண்டா உருவாக்கி வருகின்றது. அவ்வகையான படைப்புக்கள் சுற்றாடலுக்கும் தனிநபர் பாதுகாப்புக்கும் ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

அடுத்த தலைமுறையின் எதிர்பார்ப்பையும் கேள்வியையும் கருத்திற்கொண்டு அதிநவீன தொழிநுட்பத்துடன் கூடிய மோட்டார் வாகனங்கள் ஹொண்டா நிறுவனத்தினால் இன்று உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. உலகிலேயே 2011தொடக்கம் 2012 வரையிலான காலப்பகுதியில் 16.3மில்லியன் விற்பனையாக்கப்பட்ட பெருமை ஹொண்டா நிறுவனத்தையே சாரும்.

ஹொண்டா நிறுவனமானது தனது படைப்புகளை 3 நோக்கங்களை கருத்தில்கொண்டு உருவாக்கியது. பொருளாதார நோக்கம், செயன்முறை நோக்கம் . விளையாட்டு நோக்கம் என்பனவாகும்.

பொருளாதார நோக்கத்தை கருத்திற்கொண்டு தயாரிக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் எல்லோராலும் வாங்கக்கூடிய விதத்தில் விலை குறைவாகவும் ஏல்லாவகையான போக்குவரத்து தேவைகளையும் நிறைவு செய்யக்கூடிய வகையிலும் உருவாக்கப்பட்டது. அத்துடன் பொருளாதார நோக்கமாக உருவாக்கப்பட்ட வாகனங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று சி.டி.70 ஆகும். இவ்வாகனமானது 70 சி.சி. என்ஜின் கொள்ளளவு கொண்டதும்சிக்கனமான பாவனை கொண்டதும்பொருள்களை கொண்டு செல்லகூடிய பின்பக்க கெரியரை கொண்டதுமாகக் காணப்படுகின்றது. மற்றையது ஏசிஈ. சிபி. 125 ஆகும். இது 125 சிசி என்ஜின் கொள்ளளவு கொண்டதும்இருவர் வசதியாக பயணிக்க கூடிய பெரிய ஆசனங்களை கொண்டதும்நிறை குறைவானதும் அதிக செயற்திறன் கொண்ட நீண்டகாலம் நிலைத்து உழைக்கும் என்ஜினையும் கொண்டது.

செயற்றிறன் நோக்கமாக கொண்டு உருவாக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் இன்று அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இது 3 வகைகளைக் கொண்டது. ட்றீம் மோட்டார் வாகனமானது 110 சிசி என்ஜின் கொள்ளளவு கொண்டதும் சிக்கனமான எரிபொருள் பாவனை கொண்டதும் டியூப் அற்ற டயர்களை கொண்டதும் ஆகும். அதாவது காற்று கசிவை குறைக்கக் கூடியதுமாகும். ஷைன் வாகனமானது 125 சிசி கொள்ளளவு கொண்ட ஒப்ரி மெக்ஸ் என்ஜினைக் கொண்டதும்முன்பக்கத்தில் டிஸ்க் ப்ரேக்கை கொண்டதும் டியூப் அற்ற டயர்களை கொண்டதுமாகும். சிபி யுனிகோர்ன் மோட்டார் 150 சிசி என்ஜின் கொள்ளளவுடன் 5 வேக கியர் கட்டமைப்பானது 5 செக்கன்களில் 0 இலிருந்து 60 வரை வேகத்தினை பெற்றுக்கொடுக்கும். அதோடு முன்பக்க டிஸ்க் ப்ரேக் மற்றும் பின்புற மோனோ சஸ்பென்சன் கொண்டதுமாய் காணப்படுகிறது. இவ்வகையான செயற்றிறன்மிக்க வாகனங்கள்அலுவலக மற்றும் வெளிக்கள தேவைகளுக்கு அதிகமாக பயன்படுத்தப்படுவதோடு அழகான வடிவமைப்பு சக்திமிக்க என்ஜினையும் கொண்டதாய் உள்ளது. இவ்வாகனத்தை இளைஞர்கள் மற்றும் மத்திய வயதுடையவர்கள் அதிகளவில் பயன்படுத்துவதுடன் இது அவர்களின் ஆளுமை தரத்தையும் உயர்த்தி காட்டுகின்றதாக அமைந்துள்ளது.

Advertorial

November 15 / 16

Spain, Austria

IELTS

Work Permit

Schengen Travel

O/L, A/L

பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் கவனத்திற்கு:

முன்பதிவு செய்யவும் 0777 111 988

AIBC

Since 2007

# 2528, Lakeshore Blvd west, Toronto. Canada


1717 FOLLOW US www.mobitel.lk
CASH BONANZA
ரூ.150 மில்லியனுக்கான
பிரம்மாண்டமான
150000000
ரூ.50 இற்கும் வெற்றி வாய்ப்புகள்!
நாளாந்தம்
மும் மாதந்தோறும்
அழையுங்கள் #151#
Sri Lanka Telecom
Mobitel
(C/17430)


யார் என்ன சொன்னாலும், அதிக தொகை தருவது நாங்களே!
24 கரட்டுக்கு ரூ. 42,000/-*
22 கரட்டுக்கு ரூ. 36,000/-*
ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுடனும் பெறுமதியான அன்பளிப்பு
எல் பீ பினான்ஸ், தங்க நகைகளுக்கு உயர் மதிப்பு
* முன்னறிவித்தல் இல்லாமல் நகைகளை மீட்கலாம். * வாரத்தின் 7 நாட்களும் பி.ப. 8.00 வரை திறந்திருக்கும். * தங்க நகைகளுக்குப் பூரண காப்புறுதி.
கெனிஸ்டன் 0777 716 986
சுரேஸ் குமார் 0773 384 981
மோகன்ராஜ் 0778 065 387
L B FINANCE
எல்.பீ.ஃபினான்ஸ் பி.எல்.சி
275 / 75, பேராசிரியர் ஸ்டான்லி, விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.
T. 0114 521 000 | www.lbfinance.com
L B FINANCE GOLD LOANS
எல்.பீ.ஃபினான்ஸ் 2013ஆம் ஆண்டில் இலங்கையின் தலைசிறந்த நடுத்தர அளவு நிதிச் சேவை உள்ளிட்ட நிதி நிறுவனத்திற்கான விருதை ஐக்கிய இராச்சியத்தின் குளோபல் பாங்கிங் அன்ட் ஃபினான்ஸ் ரிவியூ சஞ்சிகையிடமிருந்து பெற்றுக்கொண்டது.
(C/16934)


Atlas
எதிர்காலம் வண்ணமயமாகும்
Atlas pastels
The Pastel Expert!
12
Atlas
வர்ணம் தீட்டவும் மனதை மேம்படுத்தவும்
பெஸ்டல்
"உங்கள் குழந்தையின் மூளையில் செல் செயல்முறைகள் முழுமையாக செயல்பட்டு நிறைவான மனதை உருவாக்குவதற்கு உதவும் ஒரு வழிவகையாவது வர்ணங்களின் இயக்குமுறையாகும். அதனால் வர்ணங்களை இயக்குதல் போன்ற ஆக்கத்திறன்மிக்க செயல்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்தி குழந்தையின் எதிர்கால கனவை நனவாக்கிடுவதற்கு ஊக்குவியுங்கள்."
Dr. சுதர்ஷி செனவிரத்ன
குழந்தை மற்றும் இளம்வயது மனநல ,மருத்து நிபுணர்
சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனை - கொழும்பு
எதிர்காலத்தை வர்ணம் தீட்டுவோம்
சித்திரம் வரைவோம் பரிசுகளை வெல்வோம்
▪ அன்புள்ள பெற்றோர்களே, அட்லஸ் பெஸ்டல் சித்திரப் போட்டியில் உங்கள் மகன் / மகளை பங்கேற்கச் செய்யுங்கள்.
▪ கருப்பொருள்: "எதிர்கால கனவு", படைப்பின் அளவு A3 (42cm x 30cm), சித்திரத்தின் பின்புறத்தில் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், குழந்தையின் வயது மற்றும் பாடசாலையின் பெயரை குறிப்பிடவும்.
▪ 200 வெற்றியாளர்களுக்கு பெறுமதியான அட்லஸ் பரிசுப் பொதிகள். இறுதித் திகதி 2014 டிசம்பர் 31. முகவரி: 'எதிர்காலத்தை வர்ணம் தீட்டுவோம்' த.பெ. இல.05, களனி.
▪ எவ்வளவு படைப்புக்களையும் அனுப்பலாம். ஒவ்வொரு படைப்போடும் அட்லஸ் பெஸ்டல் மேலுறைகள் மூன்றை இணைத்து அனுப்ப மறந்துவிடாதீர்கள்.
C/17434

## ஐரோப்பிய ஆசிய தொழில் கூ. மாநாட்டில் தொழில் நடைமுறை சட்டங்கள் ஆராய்வு

யாழ்ப்பாணம், நவ.9

ஐரோப்பிய ஆசிய தொழில் கூட்டுறவு தொடர்பான மாநாட்டில் தொழிலாளர்களின் தொழில் தொடர்பான நடைமுறைச் சட்டங்கள் போன்றவை விரிவாக ஆராயப்படவுள்ளன.

இந்த மாநாட்டில் இலங்கையில் இருந்தும் தொழில் திணைக்களத்தைச் சேர்ந்த 6 பேர் பங்குபற்றவுள்ளனர். சினாவில் எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகும் இந்த மாநாடு டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் வட மாகாண பிரதிதொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் இது குறித்துக் கூறுகையில்: ஐரோப்பிய ஆசிய நாடுகளில் கூட்டுறவு தொழில் தொடர்பாக தொழிலாளர்களின் தொழில் சம்பந்தமான சட்டங்கள், நடைமுறைகள் என்பன குறித்து ஆராயப்படவுள்ளது.

இந்தமாநாட்டில் கலந்து கொள்வதன் மூலம் தொழிலாளர்களின் தொழில் சட்டங்கள், நடைமுறை விதிகள் போன்றவை குறித்துக் கருத்துக்கள் பகிர்ந்துகொள்ளப்படவுள்ளன.

குறிப்பாக இலங்கையில் தொழில் சட்டங்கள் மற்றும் தொழிலாளர்களின் தொழில் சம்பந்தமான நடைமுறைகள் போன்றவை மாநாட்டில் விவாதிக்கப்படும்.

இலங்கையை விட ஏனைய நாடுகளில் தொழிலாளர் களின் சட்டங்கள், நடைமுறைகள் சிறப்பாக பின்பற் றப்பட்டால் அதை இலங்கையும் இம் மாநாட்டின் மூலம் கற்றுக்கொள்ள வசதியாக இருக்கும். இந்தமாநாட்டில் வவுனியா மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் நிவோதிக பேரின்பநாயகம் மற்றும் நான்கு தொழில் திணைக்கள உயரதிகாரிகளும் பங்குபற்றவுள்ளனர். (வ-17)


## 40 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புக் காணாத வீதி

ஆவரங்கால் மேற்கு இளமாலை வீதி 40 வருடங்களுக்கு மேல் திருத்தி அமைக்கப்பட்டாமல் இருந்து வருவ தால் குன்றும் குழி யுமாகக் காணப்படுகின்றது. வீதியை திருத்தி அமைக்குமாறு பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

ஆவரங்கால் மேற்கில் அமைந் துள்ள இளமாலை மாணவர்கள், பொதுமக்கள், விவசாயிகள் பெருமளவில் பயன்படுத்தும் வீதியாகும். வீதியில் காணப்படும் பெரும் குழிகள் மழைவெள்ளம் தேங்கி நிற்பதால் பாடசாலை மாணவர்கள் மற்றும் பாதசாரிகள் பெரும் இடர்பாட்டுக்கும் அசௌகரியங்களுக் கும் உள்ளாகி வரு கின்றனர்.

40 வருடங்களுக்கு மேல் திருத்தி அமைக் கப்படாமல் இருக்கும் வீதியைத் திருத்தி அமைத்து பொதுமக்கள் மற் றும் மாணவர், விவசாயிகளுக்கு வசதி செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ-11)

சேமிப்புக்களுக்கு உயர்ந்த வட்டி
சாதாரண சேமிப்புக் கணக்கிற்கு
4% வ.வ.வீ
(வ.வி.வீதம் 4.07%)
COMMERCIAL BANK
011 2 353 353





உங்கள் வியாபாரத்திற்கான நிதித் தேவை பெரிதாகத் தோன்றுகிறதா?

அல் ஃபலாஹ் இஸ்லாமிய நிதிச் சேவைகள் வழங்கும் முராபஹா - வர்த்தக நிதி மற்றும் வகாலா - வியாபார, தொழிற்படு மூலதன வசதியை நாடுங்கள்.

எந்தவொரு வியாபார நிதித் தேவையும் உங்களுக்குப் பெரிதாகவே இருக்காது.

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்

011 5 880 786


الفلاح
AL-FALAAH
ISLAMIC FINANCIAL SERVICES

C/17429




உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111









Unilever

புதிய Fair & Lovely







## எமது அதி சிறந்த கலவை

டிரீட்மென்ட்டுக்கு சமமான பிரகாசமான தோற்றம்.

பிரகாசமான தோற்றத்தினைப் பெற்றுக்கொள்ள, நீங்களும் டிரை பண்ணுங்கள்.

விலை ரூ. 40/- இலிருந்து

*ஆக்கபூர்வமான காட்சியமைப்பு. அழகுத்துறை சிகிச்சையைக் குறிக்கின்றது. மருத்துவ/சருமத்தைத் துளைத்து மேற்கொள்ளும் சிகிச்சை போன்றதல்ல.

0112 629 629

---

2014 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இலங்கையின் "லக்தரு" பிள்ளைகளாகிய உங்களுக்கு

## எங்கள் வாழ்த்துக்கள்!



சனச அபிவிருத்தி வங்கியின் "லக்தரு" சிறுவர் கணக்கைப் பேணும் நீங்கள் இம்முறை தரம் 5 புலமைப்பரிசில் சித்தியடைந்திருந்தால், "லக்தரு" பரிசுகளை வெல்ல

உங்களுக்கும் வாய்ப்பு

உங்கள் தகவல்களை நவம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் உங்களுக்கு அருகிலுள்ள சனச அபிவிருத்தி வங்கிக்கு வழங்குங்கள்.

**"லக்தரு" சிறுவர் சேமிப்புக் கணக்கு**
அதிக அனுகூலங்களைப் பெற்றுத்தரும் ஒரே சிறுவர் கணக்கு

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
தொலை: 0112832577




சிறுவர் சேமிப்புக் கணக்கு

SDBL சனச அபிவிருத்தி வங்கி
தேசத்தின் முன்னோடி

Fitch Rating BB+(Stable)
Registered No: PB62PQ

C/ 17436









செலான் வங்கியின் சாவகச்சேரி கிளையில் நடத்தப்பட்ட சிறுவர் தின விழாவில் மாணவர்களுக் கிடையிலான வீதி நாடகங்களில் முதலிடம் பெற்ற சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலய மாணவர்களின் நாடகக் காட்சியும் ஏனைய கலை நிகழ்வுகளின் காட்சிகளும். (வ-9)





மீசாலை பொதுநூலகத்தில் இடம்பெற்ற தேசிய வாசிப்பு மாத நிகழ்வாக முன்பள்ளி மாணவர்களின் கதைகூறல் நிகழ்வும் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் ஆத்திசூடி மனனப் போட்டியும் இடம்பெற்றபோது.. (வ-9)





தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்துக்கு 306 பி 1 மாவட்ட வலயத் தலைவர் லயன் எஸ்.கரிகரன் பயணம் செய்தபோது பெற்றோரை இழந்த மாணவனுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்குகின்றனர். தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் தீபாவளி தினத்தன்று கைதடி முதியோர் இல்லத்துக்குச் சென்று அங்குள்ள முதியோர்களின் பாவனைக்கென சவர்க்கார வகைகளை வழங்கினர். அருகில் மாவட்ட உப அதிபர் லயன் டாக்டர் வீ.பீ.தியாகராசா காணப்படுகின்றார். (வ-9)





மூளாய் கலைவாணி சனசமூக நிலையத்தில் கலைவாணி கோல்ட் ஸ்டார் சிறுவர் கழகத்தினதும் முன்பள்ளியினதும் சிறுவர் தினம் மற்றும் ஆசிரி யர் தின நிகழ்வுகள் கோல்ட் ஸ்டார் சிறுவர் கழகத் தலைவர் செல்வன் தங்கராஜா நிலக்சன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக புளொட் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபை உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரு மான தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து சிறப்பித்திருந்தார். சிறப்பு விருந்தின ராக வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் மற்றும் வண. யோசுவா அடிகளார் கலந்து சிறப்பித்தனர். (வ-86)



வலி.மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரனால் புலம் பெயர் உறவுகளின் மூலம் முன்னெடுக்கப்பட்டு வரும் 'கல்விக்குக் கைகொடுப்போம்' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஜேர்மனி வாழ் செல்வத்துரை ஜெகன்நாதனின் வழிகாட்டலில் வழங்கப்பட்ட விளையாட்டு உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் விளையாட்டுப் பணிப்பாளர் பி.எல்.மோகனக்குமார் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினரான தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்துகொண்டு விளையாட்டு உபகரணங்களை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வழங்கினார். (வ)





புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் மாணவர்களுக்கான சாரணர் சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் சாரணர்களுக்கான சின்னங்கள் முல்லைத்தீவு மாவட்ட சாரணர் ஆணையாளர், சாரணர் தலைவி செல்வி செ.ஆன் சோபியா, திருமதி சசிகரன் விஜயா மற்றும் பாடசாலையின் பகுதித் தலைவர் திருமதி உ.தவராஜா ஆகியோரால் சூட்டப்பட்டன. (வ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**புவேந்திரா இராஜக்கோன்**

தோற்றம் : 01.09.1941

மறைவு: 09.11.2013

**எங்கள் உயிரில் கலந்த உறவே!**
**இம்மையில் உங்களை நேசித்தோம்**
**மறுமையில் உங்களை மறவோம்.**

குடும்பத்தினர்.
தபாற்கந்தோர் முன்பாக,
ஏழாலை வடக்கு, ஏழாலை.

(53792)(5.6.3)

## 26 ஆவது பிறந்தநாள் நினைவலைகள்

செல்வி றஜிவிதா ஸ்ரீரங்கநாதன் (திசானி)



மலர்வு 09.11.1988
உதிர்வு 24.01.2009

வந்த வழி மறந்து சென்றாயோ?
சிட்டுக்குருவியாய் சிறகடித்து
பூமிதனில்
வாழ்வு வாழ்ந்த உனை
பாதி வழியில் பறித்தானே!
உனதுயிரை காலனவன்
பறிகொடுத்து பதறுகிறோம்
உனது உறவுகள்.

(47923)(12.3.6)

செ.ஸ்ரீரங்கநாதன்
(ஓய்வுபெற்ற காணி அதிகாரி),

நிரந்தர முகவரி:
60, சந்தன மாதா லேன்,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தற்போதைய முகவரி:
96 குடிமத்தி D10,
உருத்திரபுரம், கிளிநொச்சி.

## இரத்ததான முகாமும் பஜனை நிகழ்வும்

யாழ்ப்பாணம், நவ.9

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் மற்றும் பஜனை நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷனில் நடைபெறவுள்ளது.

மாலை 4மணிக்கு இரத்ததானம் நிகழ்வு நடைபெற்று தொடர்ந்து 4.30 மணிக்கு சின்மய யுவகேந்திரா குழுவினர் வழங்கும் 'கண்ணா என் கண்மணியே' எனும் கிருஷ்ண பஜனை நடைபெறும். (ஓ-14)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்மா பூபாலசிங்கம்



அளவெட்டி வடக்கினைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மத்தியினை வசிப்பிடமாகவும் கொண்ட பூபாலசிங்கம் பொன்னம்மா 07.11.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பூபாலசிங்கத்தின் பாசமிகு மனைவியும், சின்னத்துரை, பராசக்தி, செல்லம்மா மற்றும் காலஞ்சென்ற முருகையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், நளாயினி, பூங்குயில் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற கிருபாமூர்த்தி மற்றும் ஜெகதீஸ்வரன் ஆகியோரின் மாமியாரும், தர்ஷிகா, சஞ்ஷிகா, கேதுக்கா, சர்பிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.11.2014) திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அளவெட்டி இலங்கை வங்கி முன்பாக,**
**கூட்டுறவாளர் வீதி,**
**அளவெட்டி மத்தி.**

(பி/17573)
(4.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## திருமதி சரஸ்வதி மார்க்கண்டு

யாழ்.இணுவில் மேற்கு கந்தசுவாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி மார்க்கண்டு கடந்த (05.11.2014) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி-இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான சுப்பர்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், நடராசா (இணுவில்), செல்லம்மா (கனடா), அன்னம்மா (கனடா), காலஞ்சென்ற இந்திராணி மற்றும் வன்னியசிங்கம் (பிரான்ஸ்), கமலாதேவி(மன்னார்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவஞானம்(வீதி அபிவிருத்தித் திணைக்களம்), சிவசூரியன்(கனடா), சிவப்பிரமம்(ஓய்வு பெற்ற ஆசிரியர்), சிவதாசன்(பிரான்ஸ்), சிவானந்தன் (பிரான்ஸ்), சிவமலர்(கனடா), சிவனேஸ்வரி (கனடா), சிவசரணம் (பிரான்ஸ்), சிவசோதி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு தாயாரும், இந்திராணி, வசந்தினி (கனடா), தவராணி (ஆசிரியை -சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயம்), உதயகுமாரி(பிரான்ஸ்), யசோதா (பிரான்ஸ்), புஸ்பலிங்கம் (கனடா), கிருபானந்தசிவம்(கனடா), சுதாயினி (பிரான்ஸ்), பரங்கிரிநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சுவாமியார் மற்றும் பூமாலட்சுமி (கனடா), காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், கந்தையா, இராசநாயகலிங்கம் மற்றும் ஜெயக்கிளி(பிரான்ஸ்), தனபாலசிங்கம் (மன்னார்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், வாகினி, விக்னேஸ்வரன் (தேசிய சேமிப்பு வங்கி), கரிகாலன், கரிகரன், பிரணவன், பவித்திரா, சஜீபன், சஜித்தா, கீர்த்திகா, சிந்துஷா, சாருசன், சாரங்கன், சகானா, தவநீதன், ஆரணி, கஜன், கிரிதரன், கஜீபன், கீர்த்தீபன், சாருஜி, சஜீன், சாருஸ், ஜெனிசா, பிரசா, ஜெனீசியன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், கம்சரூபன், கரிகேசன், அபிசன் ஆகியோரின் அன்புபூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.11.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**இணுவில் மேற்கு, இணுவில். T.P : 021 300 6737**

(53898)(4.3.6)

குடும்பத்தினர்.

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கும் Sun Rise நிறுவனத்துக்கு புதிய வெற்றிடங்கள் உண்டு. தகைமை O/L, A/L அனுபவம் தேவையில்லை.

தொடர்புகளுக்கு: (53914) (10.6)

076 6577 512, 077 3836 897

## கட்டட நிர்மாணப் பணிக்கு பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணம்
மேசன் - 1300/= , தொழிலாளி - 1000/=
கம்பிவளைப்பவர் -1600/=
கொழும்பு
மேசன் - 1500/=, பெயின்டர் -1350/=
தொழிலாளி - 1200/= + 100/=
தொடர்புக்கு:- ப.லசாந்தப்பிரதீப்
075 203 9589 (53217)

## மரண அறிவித்தல்



### திருமதி இரத்தினம் கந்தப்பு

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் கந்தப்பு நேற்று (08.11. 2014) சனிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்புவின் அன்பு மனைவியும், முருகேசு காலஞ்சென்றவர்களான இராசசிங்கம், சின்னத்துரை, பொன்னையா, குட்டிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அழகரஞ்சினி, குணவதி (றுவி), சந்திரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற அழகரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயும், நல்லராசா, சிவராசா, விதின், வசந்தராணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும், லொசி (கொலண்ட்), டெறின் (பிரான்ஸ்), கொன்சி (அப்செரா-பிரான்ஸ்), சாணுயா (பிரான்ஸ்), சசிகரன் ஆகியோரின் பேர்த்தியும், ஆதவன் (கொலண்ட்), றொகான் (பிரான்ஸ்), அனுஸ்கா, அகில் அக்ஷயா (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2014) ஞாயிற்றுக்கிழமை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(53913)(10.6) தகவல்: குடும்பத்தினர்.

## விஷ விதையை உண்ட சிறுவன் சாவு

தெல்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திகன, அளுத்வத்தையை சேர்ந்த ஆனந்த ருக்சான் (வயது-17) என்ற சிறுவன் ஒருவகையான விஷ விதையை உட்கொண்டதையடுத்து கண்டி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக தெல்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுவனின் தாயும் தந்தையும் வீட்டில் இல்லாத சந்தர்ப்பத்தில், மேற்படி சிறுவனுக்கும் அவனுடைய தமயனுக்கும் இடையே சண்டை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்தே குறித்த சிறுவன் வீட்டுக்கு அருகிலுள்ள மரத்திலேறி அந்த விதையை உட்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(து)



## விசா பெற்றுக் கொள்ள இருப்பவர்களுக்கு......




German, France, Italy, Denmark, Norway, Sweden, Switzerland, Finland, Poland, Netherlands, Austria, Spain, Latvia, Belgium, Portugal, Hungary, Slovakia, Greece, Malta, Luxembourg,(Schengen Country) Korea

### Visit Visa

- எவ்வித முற்பணமும் இல்லாமல் 2,3 வாரங்களில் செல்வதற்கு உண்டான வாய்ப்பு.
- தனியாக அல்லது குடும்பத்தாரோடு செல்வதற்கு உண்டான வாய்ப்பு.
- 100% நம்பிக்கையான முறையில் செய்து கொள்ளலாம்.



SKYWALK Visa Solutions

SKYWALK VISA SOLUTIONS
No.65,1/1,Galle Road, Dehiwala. (Food City - 1st Floor)
www.skywalk-vs.com
Hotline: 0777711905
(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).


## அசைவ உணவகம் வாடகைக்கு

ஆறுகால்மடம் மருத்துவமனையுடன் இணைந்த ''ரதி ஹொட்டல்'' சகல குளிர்சாதன, தளபாட வசதிகளுடையது. நடத்துபவர்கள் பொருளாதார பின்னடைவுடன் இருப்பதால் உடன் வாடகைக்கு விடப்படவுள்ளது. வளவாளர்களாகிய அவர்களுடன் இணைந்தும் நடத்தலாம். தொடர்பு நேரில்.

தொ.பே.எண்: 077 4833 303 (53912) (10.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இராசம்மா நடராஜா

மலர்வு 10.12.1933 — உதிர்வு 21.10.2013

உங்களது முதலாம் ஆண்டு நினைவு தினத்தில் உங்களை நினைந்து உருகும்
உங்கள் குடும்பத்தினர்.
நீலுப்பழந்தை, வதிரி, கரவெட்டி

## மரண அறிவித்தல்

### S.K.ஆறுமுகம் பஞ்சரத்தினம்




கைதடி, நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், புத்தூர் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட S.K.ஆறுமுகம் பஞ்சரத்தினம் 08.11.2014 சனிக் கிழமை காலை 9.15 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான S.K. ஆறுமுகம்-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பேரின்பநாயகியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான துரைரத்தினம், பொன்னையா, தங்கம்மா மற்றும் சாந்தநாயகி, சரஸ்வதி, பரமேஸ்வரி, மகேஸ்வரி காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், புவனேஸ்வரி காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, தணிகாசலம், விநாயகமூர்த்தி மற்றும் சுப்பிரமணியம், திருநீலகண்டன், பரந்தாமதி, மதனசற்குணராசா, சிவசந்திரராசா, பவளநாயகி, திரவியநாயகி ஆகியோரின் மைத்துனரும் மற்றும் சௌந்தரேஸ்வரி, சாந்தி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் புத்தூர் கிழக்கு (காளியானை) இல் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, அந்திராணை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புத்தூர் கிழக்கு (காளியானை), புத்தூர். (53907) (7.6.1) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### Dr. விஸ்வலிங்கம் சிறிஸ்காந்தன்

(றஞ்சிதா வைத்தியசாலை)

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் சுதுமலை மத்தி மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.விஸ்வலிங்கம் சிறீஸ்காந்தன் (றஞ்சிதா வைத்தியசாலை) நேற்று (08.11.2014) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம்-நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், Dr. பாலாம்பிகையின் பாசமிகு கணவரும், Dr. சிறிபாலறஞ்சிதன், சிறிபால றமணன் (Novartis), சிறிபாலரசாத் MHC ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீவைகுந்தன், சிவகுமாரி, சிறிரதி, காலஞ்சென்ற ஈசன் ஆகியோரின் சகோதரரும், Dr. சிறிநாகசெளரியின் மாமனும், காலஞ்சென்றவர்களான ரத்தினம், செல்வரத்தினம் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

றஞ்சிதா வைத்தியசாலை,
சுதுமலை மத்தி,
மானிப்பாய். (53916) (10.6)

றஞ்சிதா வைத்தியசாலை,
ஸ்ரீறஞ்சிதா வைத்தியசாலை,
கிறீன் மெட் வைத்தியசாலை.

# பணிப்பாளராக நியமனம்

யாழ்ப்பாணம்.நவ.9
வடக்கு மாகாண உள்ளகக் கணக்காய்வுப் பணிப்பாளராக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சில் கணக்காளராகக் கடமை புரிந்த திருமதி சுரேஜினி சந்திரசேகரம் கடந்த ஏழாம் திகதி தொடக்கம் வடக்கு மாகாண ஆளுநரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
வடக்கு மாகாண உள்ளகக் கணக்காய்வுப் பணிப்பாளராக இதுவரை காலமும் கடமையாற்றிய நா. இராச நாயகம் ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்தே இவர் தற்போது அப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ஓ-288)

# உரும்பிராயில் விசேட பஜனை

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மூத்த துறவியான சுவாமி இராஜேஸ்வரானந்தர் கலந்து சிறப்பிக்கவுள்ள விசேட பஜனை இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5மணிக்கு உரும்பிராய் இராமகிருஷ்ண மிஷனில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-ரி)

# தமிழ் விழா

அச்சுவேலி இராசமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தமிழ் விழா நடைபெறுகின்றது. விழாவில் வலி.கிழக்கு பிரதேச செயலர் எம். பிரதீபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.
விழாவில் தரம் 5 புலமைப்பரிசில் பெறுவதற்கு தகைமை பெற்ற மாணவர்களைப் பாராட்டி கௌரவித்தல் மற்றும் ஓய்வுநிலை ஆசிரியர்களை கௌரவித்தல் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் ஆகியன இடம்பெறும். (ஓ-11)


## அழகுக்கலை பயிற்சி



சுவீடன் நாட்டு நிறுவனத்தின் யாழ் சேவை நிலையத்தினால்
மிகக் குறைந்த கட்டணத்தில்...
இந்தியாவில் விசேட பயிற்சி பெற்று சிறப்புப் பெற்ற ஆசிரியையினால்...

- துரித ஒரு மாத கால அழகுக்கலை பயிற்சிகள்
- டிப்ளோமா அழகுக்கலை பயிற்சிகள்
- கேக் ஐசிங் பயிற்சிகள்

அனைத்தும் மிகக் குறைந்த கட்டணத்தில் ஆரம்பமாகவுள்ளன.
அனைத்து பயிற்சிகளும் இந்திய முறைப்படி கூடுதலான செய்முறை விளக்கத்துடன் இடம்பெற்று ஒவ்வொரு மாணவர் மீதும் தனித்தனியாக கவனம் செலுத்தப்பட்டு பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்.
பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு முகஒப்பனை, சிகை அலங்காரம் என்பன விசேட விலைக்கழிவில் செய்யப்படும்.
பதிவுகளையும் மேலதிக விவரங்களையும் பெற்றுக்கொள்ள 18.11.2014 இற்கு முன்னர் அலுவலக நேரத்தில் வருகை தரவும்.
நிறுவன அமைவிடத்தை அறிந்து கொள்வதற்கு தொடர்புகொள்ள - 021 454 6026
ஒறிபிளேம் 616, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (வேம்படி சந்தியில்)
(C/17572)(7.3)



## VACANCIES
### SALES EXECUTIVE (Male & Female)

We are a company dealing with Children educational programme and there is an exciting & excellent opportunity for Self - motivated, committed indivduals to take up the responsibility as
SALES EXECUTIVE

**Requirements**
- GCE (A/L) Qualified
- Below 35 years old (School leavers may apply for trainee position)
- Good communication skill in English & Tamil

**Benifits**
- An attractive salary
- Travelling allowances
- Commissions payments
- Telephone facilities
- Motorbike allowances
- Incentive & Overseas trips for target achievers
- Career development (Management position)

If you believe that you are the right cantidate,
Please e-mail or contact immediately
Branch Manager: G.Anthany
Phon No: 077 356 6835, 021 567 1130



Pioneer House (PVT) Ltd.
No.100, 2nd Floor, Manipay Road, Jaffna.
E-mail: jaffnapioneerhouse@gmail.com
(53880)(12.3.6)


## PEOPLE'S BANK

### REGISTRATION OF CONTRACTORS 2015

### JAFFNA, WANNI & TRINCOMALEE REGIONAL HEAD OFFICES & RELATED REGION BANK BUILDINGS.

Applications are hereby invited from contractors for the works connected with Construction of buildings, Repairs and alterations to buildings, (Including plumbing, drainage and sewerage work & painting works, etc.) Steel work, Aluminium work, Fabrication and installation of counters, furniture and partitions, Name boards, Carpeting, Blinding & Curtain works, etc.

Contractors will be registered according to their requests subject to have valid registration of Institute for Construction Training and Development (ICTAD) for the works connected with construction of buildings and other specialized works. **(All applicants should furnish satisfactory documentary evidence of the valid ICTAD registration along with their applications except for applicants who apply for Name boards, Carpeting, Blinding & Curtain works).**

Applications should be made only on prescribed application forms obtainable by furnishing a written request addressed to the respective Regional Manager, Regional Head Office - People's Bank from **17th November, 2014** until **12th December, 2014** during business hours on normal working days of the Bank on payment of **Rs. 1000/-** in cash. Applicants who wish to obtain application forms by post should make such requests before **30th November, 2014** along with a Bank Draft/Pay Order for a value of **Rs. 1000/-** drawn in favor of the People's Bank. Bank will not be responsible for postal delays and/or losses.

Contractors registered for year 2014 should re-apply for the registration for year 2015.

Duly perfected applications with all supporting documents enclosed in an envelope, marked **"Registration of Contractors – 2015"** clearly on the top left hand corner should be sent to reach the Regional Manager by registered post to address given below on or before **15th December, 2014.**

**Note: - The registrations should be done each regions separately (Not together).**

| For Jaffna Region | For Wanni Region | For Trincomalee Region |
|---|---|---|
| Regional Manager<br>People's Bank<br>Jaffna Regional Head Office<br>No.82, Kannathiddi Junction,<br>Jaffna.<br>Tel: 0212222601/3836 | Regional Manager<br>People's Bank<br>Wanni Regional Head Office<br>No.9 1/1, Station Road,<br>Vavuniya.<br>Tel: 0242222972/5054 | Regional Manager<br>People's Bank,<br>Trincomalee Regional Head Office,<br>No. 128, Kandy Road,<br>Trincomalee.<br>Tel: 0262222815/6815 |

(C/17560)(7.3)

## சேவைநலன் பாராட்டு



இலங்கை மின்சார சபையில்
34 வருடகாலம் கடமையாற்றி
மேல் அதிகாரிகளினதும்
பொதுமக்களினதும்
நன்மதிப்பைப் பெற்ற
**சின்னதம்பி சண்முகநாதன்**
(மின்பாவனையாளர் விசேட தரம்)
அவர்கள் 09.11.2014 அன்று ஓய்வு பெறுகிறார். இவர் பிள்ளைகளுடனும், உறவினர்களுடனும் சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்தும்.
இலங்கை மின்பாவனையாளர்
சேவை நிலையம்
வட்டுக்கோட்டை.
(மின் அத்தியட்சகர் சக ஊழியர்கள்)
Best Wishes


## வெளிவாரிப்பட்டப் படிப்புகளுக்கு பதிவுசெய்து கொள்வதற்கான ஓர் சந்தர்ப்பம்

**External Degree**
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின்

## BBA, B.Com BA
அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது
க்கான விண்ணப்பம் கோரப்படும்
க்கான முற்பதிவும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது

*விரிவுரைகள் தமிழ் மொழி மூலம் பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் வாரஇறுதி தினத்தில் ஒரு நாள் மட்டும் (சனி அல்லது ஞாயிறு) நடைபெறும்.
கற்கை நெறியின் காலம் 3 வருடங்கள்

- பதிவு செய்வதற்கான தகைமை :
க.பொ.த உயர் தரத்தில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி
கீழ்வரும் கற்கை நிலையங்களில் பாடநெறியைத் தொடரலாம்

KANDY | KURUNEGALA | COLOMBO
BERUWELA | THIHARIYA | AVISSAWELLA
MAWANELLA | HATTON | NUWARA ELIYA
BANDARAWELA | POLONNARUWA | PUTTALAM
BATTICALOA | KALMUNAI | VAVUNIYA
MANNAR | KILINOCHCHI | JAFFNA | TRINCO

குறிப்பு : ஒரு நிலையத்திற்கு போதிய அளவு மாணவர்கள் இல்லாதவிடத்து அண்மையில் உள்ள கற்கை நிலையத்துடன் இணைக்கப்படுவர்

விண்ணப்பப் படிவத்துக்கும் பதிவுகளுக்கும் தொடர்பு கொள்ளவும்
0777 71 71 29
0718 57 07 09

EXTERNAL DEGREE DIVISION

**GOLDEN COLLEGE** CITY CAMPUS
548 | PERADENIYA ROAD | KANDY | 081 2205544
14, 7th Lane, Vairavarkovil Rd, Vairabapuliyankulam
Vavuniya. Tel : 0777 222 527
(சி/17571)

CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)



Platinum 10.30am, 2.30pm, 6.30pm



Silver 10.15am, 2.15pm, 6.15pm



Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com



**Van விற்பனைக்கு**

Hu-xxxx இலக்கமுடைய
Honda Van
விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
0777 360554
(யாழ்ப்பாணம்)

## பொதுக் கூட்டம்

சங்கானை கரைச்சி, மயான சேமக்கால அபிவிருத்திச் சபை பொதுக் கூட்டம் இன்று ஞாயிறு மாலை 4 மணியளவில் சங்கானை ஸ்தான அ.மி.த.க.பாடசாலையில் சபைத் தலைவர் த.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.மேற்கு பிரதேச சபை, தவிசாளர் திருமதி நா.ஐங்கரனும், சிறப்பு விருந்தினர்களாக பிரதேச சபையின் செயலாளர் திருமதி சா.சாரதாதேவி, சங்கானை கிழக்கு, தெற்கு கிராம சேவையாளர்கள் எஸ்.சிவகுமார், கே.லலிதாம்பாள், வலி.மேற்கு பிரதேச சபை உப அலுவலகப் பொறுப்பதிகாரி து.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ஓ-29)

நாகபூஷணி திருமணசேவை

**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பங்களைச் சேர்ந்த

* 1987, 4இல் செவ்வாய், பாவம் 60, UK (PR)
* 1984, செவ்வாய்க் குற்றமற்ற பாவம் 15 Swiss (PR)
* 1983, செவ்வாய்க் குற்றமற்ற பாவம் 20, Canada (PR)
* 1976, செவ்வாய்க் குற்றமுள்ள, பாவம்40, Australia (PR)
* 1983, 4இல் செவ்வாய், பாவம் 40, விரிவுரையாளர்
* 1980, செவ்வாய்க் குற்றமற்ற, பாவம் 20, அரச உத்தியோகத்தர்
* 1983, செவ்வாய்க் குற்றமற்ற, பாவம் 35, சைவ போசன Doctor
* 1970, செவ்வாய்க் குற்றமற்ற, பாவம் 45, Doctor

மணமகன்களுக்கு மணமகள்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர். நீங்கள் விரும்பும் அரச உயர் தொழில், தனியார் துறை, உள்நாட்டு/வெளிநாட்டு மணமக்களை உடன் மிகப் பொருத்தமாகத் தெரிவு செய்யலாம்.

15/11, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
TP: 021 222 9306 / 077 138 7596 / 075 554 6000
Email: nakapoosany wedding@gmail.com (53862) (12.3)

சர்வதேச அங்கீகாரம் பெற்ற
விமானப் பயணச்சீட்டு முகவர் நிறுவனமான
IATA Accredited Agent

METRO
Travles & Tours (Pvt) Ltd.

எமது சேவைகள். . . . .

* மிகக் குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்.
* இந்தியா, மலேசியா, தாய்லாந்து, சீனா ஆகிய நாடுகளுக்கான விசா சேவைகள்.
* சகல நாடுகளுக்குமான பயணக் காப்புறுதிகள்
* உள்ளூர், வெளியூர் பிரயாணிகளுக்கான சுற்றுலா வசதிகள்
* குழு பிரயாண வசதிகள்
* வெளியூர் பிரயாணிகளுக்கு விசா புதுப்பித்தல்
* சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தி ஒழுங்கமைத்தல்.

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.

METRO TRAVELS & TOURS (Pvt) Ltd,
#272/1, Stanley Road, Jaffna, Sri lanka.
Tel: +940212224647, +94 212217199, +94 777881115
Email: Jesurah@metrotravels.lk (சி17256) (12.3.6)

# காவேரி கலா மன்றம்

## 10ஆவது ஆண்டு நிறைவும் 'சமூக காவலர்' 'சமூக ஒளி' விருதுகள் வழங்கும் நிகழ்வும்

தலைமை
**அருட் கலாநிதி T.S. யோசுவா**
நிறைவேற்று இயக்குநர்
காவேரி கலாமன்றம்

பிரதம விருந்தினர்
**திரு.R.T.விக்னராஜா**
மேல் நீதிமன்ற நீதிபதி (ஓய்வுநிலை)

சிறப்பு விருந்தினர்கள்
**திரு.கோ.நாகேஸ்வரன்**
பிரதேச செயலாளர், கரைச்சி

**திருமதி.மலர்விழி நாகேஸ்வரன்**
ஆசிரியர், யா/இந்து கல்லூரி

**திருமதி N.ஸ்ரீதேவி**
உதவி செயலாளர் ஆளுநரின் அலுவலகம்
வடமாகாணம்

**கலாநிதி N.A.விமலேந்திரன்**
அதிபர், மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை

**திருமதி அனோஜா விமலேந்திரன்**
ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி (ஓய்வுநிலை)

**திரு. பெருமாள் கணேசன்**
அதிபர், கிளி.பாரதி வித்தியாலயம்

கௌரவ விருந்தினர்கள்
**திரு.அருள்சந்திரன்**
மாவட்ட கலாசார உத்தியோகஸ்தர்
கிளிநொச்சி

**திரு. M.ரஜீபன்**
கரைச்சி கலாசார உத்தியோகஸ்தர்

**திருமதி K.நிருபா**
சங்கானை கலாசார உத்தியோகஸ்தர்

### 'சமூக ஒளி' விருது பெறுவோர்


**திரு.N.ஞானச்சந்திரன்**
(சிறுகைத்தொழில் மற்றும் வேலைவாய்ப்பு)


**திரு.S.சின்னையா**
(சிறுவர் பணி)


**திரு.வல்லிபுரம் தவராசா**
(அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கலை இலக்கிய சமூகப் பணி)


**திருமதி பிறேமினி யோகராசா**
(சிறுவர் பணி)

### 'சமூக காவலர்' விருது பெறுவோர்


**திரு. கதிரவேலு நல்லதம்பி**
(கலை, இலக்கியப் பணி)


**திரு. விசுவாசம் ஜெகநாதன்**
(கலை, இலக்கியப் பணி)


**திரு. செல்லத்துரை றொபேட் இயேசுபாலன்**
(சமய ம்ற்றும் சமூகப் பணி கலை, இலக்கியம்)


**செல்வி நாகலிங்கம் நிரஞ்சனா**
(பெண்கள் வலுவூட்டல் மற்றும் சமூகப் பணி)


**திருமதி S.சோமசேகரம்பிள்ளை**
(பெண்கள் வலுவூட்டல், சைவசமயம் மற்றும் சமூகப் பணி)


**வைத்திய கலாநிதி S.பரமசிவம்பிள்ளை**
(சுதேச வைத்தியம் மற்றும் சமூகப் பணி)

நம் சமூகத்தின் வாழ்வுக்காகவும், அதன் நலன்களுக்காகவும் தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்து, தன் நலம் நாடாது பணியாற்றி, சமூகத்திற்கு காவலர்களாய், ஒளியாய் விளங்குகின்ற எங்கள் சமூகத்தின் கண்மணிகளைக் கௌரவித்துப் பாராட்டுகின்றோம்.

'சமூக காவலர்', 'சமூக ஒளி' விருது வழங்கும் நிகழ்வு இன்று (2014. 11.09) ஞாயிற்றுக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பிற்பகல் 2.00 மணி அளவில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| திரு. K.மதனகோபால கிருஷ்ணன் | திரு. N.நடுநாயகமூர்த்தி | திரு. S.புத்திசிகாமணி |
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

## சந்தைப்படுத்தல் பிரதிநிதிகள் (Marketing Representatives)

யாழ்.நகரில் கட்டடப் பொருள்கள் மற்றும் அதனோடு இணைந்த பொருள்களின் சந்தைப்படுத்தலில் முன்னணியில் திகழும் நிறுவனம் ஒன்றுக்கு சந்தைப் படுத்தல் பிரதிநிதிகள்(Marketing Representatives) வேண்டப்படுகின்றனர். விண்ணப்பதாரர்கள், சந்தைப் படுத்தல் துறையில் கல்வித்தகைமைச் சான்றிதழைக் கொண்டவராகவும் அத்துறையில் அனுபவம் உள்ள வராகவும் மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராகவும் இருத்தல் அவசியமாகும்.

தகுதியான விண்ணப்பதாரிகள் தகைமைச் சான்றிதழ் களுடன் 20.11.2014இற்கு முன் கீழ்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல - 5024, C/O. உதயன்.
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி17580) (12.3.6)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி கார்த்திகேசு



சங்குவேலி வடக்கைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கார்த்திகேசு 05.11.2014 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்தி கேசுவின் மனைவியும், சறோஜினி தேவி (நியூசிலாந்து), துளசிதாசன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சக்தி ஆனந் தன் (ஆனந்தி) ஆகியோரின் தாயாரும், சிறீஸ்கந்தராசா (நியூசிலாந்து), தர்ம கலா (ஜேர்மனி), பத்மலோசனி ஆகி யோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2014) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்த ரோடை சங்கம்புலவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய். (53582) (7.6.3) தகவல்: குடும்பத்தினர்.

## வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் சந்திப்பு

நெல்லியடி, நவ.9

வடமராட்சி லயன்ஸ் கழகம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீதியில் அமைந் துள்ள வடமராட்சி லயன்ஸ் கழக செயலகத்தில் - செவிப்புலனற்றோர் சங்க அலுவலகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு வடமராட்சி லயன்ஸ் கழக உறுப்பினர்களுக் கான சந்திப்பு தலைவர் வே.சிவயோகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு வலயத் தலைவர் லயன் மருத்துவர் எஸ்.குணதாசன் வருகை தர வுள்ளனர். அத்துடன் மரநடுகை நிகழ்வும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக செயலாளர் க.கமலேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஓ-35)

## இப்படிச் சொல்கிறார்

யாழ்ப்பாணம், நவ.9

'ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்ட சந்தேக நபருக்குப் பிணை' பிணை என்ற தலைப்பில் கடந்த 6 ஆம் திகதி உதயனில் வெளியான செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நபர் சமுர்த்தி உத்தியோகத்தரோ, சமுர்த்தி அலுவலகத்தில் பணியாற்றுபவரோ அல்ல எனவும், அவர் முகாமைத்துவ உதவியாளர் மட்டுமே என் பதும் கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தி யோகத்தர் சங்கத்தின் தலைவர் க. தனுஷன் தெரிவித்துள்ளார்.

ஆயினும் பளை பொலிஸ் நிலையப் பதிவுக ளில் குறித்த நபர் சமுர்த்தி அலுவலகத்தில் பணியாற்றும் முகாமைத்து உதவியாளர் என்றே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## தொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை செவ்வாயன்று

யாழ்ப்பாணம்.நவ.9

இலங்கை வர்த்தக மன்றம் மற்றும் யாழ்ப் பாண வர்த்தக தொழில்துறை மன்றம் என் பன இணைந்து நடத்தும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான முயற்சி யாண்மை தொடர்பான பயிற்சிப் பட்டறை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30மணிக்கு யாழ். கிறீன் கிறாஸ் விடுதியில் நடைபெற வுள்ளது.

100 தொழில் முயற்சி யாளர்களை உள்ள டக்கி நடத்தப்படும் இந் தப் பயிற்சிப் பட்ட றையில் தொழில் முயற்சியும் வியா பார வாய்ப்புக்களை இனங் காணுதலும், வியாபாரத் திட்ட மிடலின் முக்கியத்து வமும் வியாபாரத் திட்டம் ஒன்றைத் தயாரித்தலும், சுற்றா டலில் நிலைத்து நிற் கும் தன்மையும் மற் றும் சிறிய நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளால் ஏற் படும் சுற்றாடல் மாச டைதலைக் குறைத் தலும், அடிப்படை நிதி முகாமைத்[illegible] அறிவு, மு[illegible] வுகள் [illegible] புகளில் கருத்துரை கள் வளவாளர்க ளால் வழங்கப்பட வுள்ளன. (த-14)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கமலர் தங்கராஜா



அச்சுவேலி மத்திய கல்லூரி வீதியைப் பிறப்பிட மாகவும், சூரிச், சுவிற்ஸர் லாந்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கமலர் தங்கராஜா 06.11.2014 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான கணபதிப்பிள்ளை -பொன்னு தம்பதியரின் சிரேஷ்ட மகளும், காலஞ் சென்றவர்களான சண்முகம் -பார்வதி தம்பதியரின் பாச மிகு மருமகளும், காலஞ் சென்ற தங்கராஜா (வாத்தி யார்- முன்னாள் தலைவர்- தனியார் போக்குவரத்துச் சங்கம், அச்சுவேலி) அவர் களின் அன்பு மனைவியும், சிவலிங்கம் (பின்லாந்து), சந்திராதேவி (இந்தியா), செல்வராணி (பிரான்ஸ்), வசந்தகுமாரி (கனடா), காலஞ்சென்ற மகேந்திரலிங்கம் (கனடா) ஆகியோரின் சகோதரியும், வேல்ராஜன் (சுவிஸ்), பிரபாகரன் (கனடா), தயாகரன் (சுவிஸ்), சதீஸ்கரன் (சுவிஸ்), கஜேந்திரன் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான பபிறஞ்சினி (ஜேர்மனி), சுதாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தெய்வேந்திரம் (ஜேர்மனி), அனிதா (சுவிஸ்), றோஜினி (கனடா), கிஷாந்தி (சுவிஸ்), பேபிதர்மிகா (சுவிஸ்) ஆகியோரின் மாமியும், அன்று முகுந்தா, விஸ்னுரயன் (ஸ்ரீபன்-ஜேர்மனி), றதினி (பிரான்ஸ்), விஜீதன், விராகன் (சுவிஸ்), திவ்வியன், பிரியன், இனியன் (கனடா), லாவிஷா, லக்ஷிக்கா, லவன் (சுவிஸ்), றஜீவன், மலரினி, லக்ஸ்மன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், யஸ்விதாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.11.2014) திங்கட்கிழமை HALLE 1, KREMATORIUM NORDHIEM, KAFERHOLZ STR, 101, 8057, ZURICH என்னும் இடத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :

| | |
|---|---|
| வேல்ராஜன் | 0041766343422 |
| தயாகரன் | 0041764001200 |
| சதீஸ்கரன் | 0041763821201 |
| கஜேந்திரன் | 0041779013000 |
| சிவலிங்கம் | 00358404743955 |

(சி/17579) (7.6.3)

தகவல்: பொ.சிவலிங்கம்
குடும்பத்தினர்
(பின்லாந்து)

## கண்ணீர் அஞ்சலி



பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையில் சாரதியாக கடமையாற்றும் மரியநாயகம் மங்களராசா அவர்களின் மாமன்

### தம்பன் சந்தியாப்பிள்ளை

அவர்கள் மரணமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிசங்கம், (சி/17578)(4.6.3)
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை.

## மரண அறிவித்தல்

### திருமதி சகுந்தலாதேவி சந்திரசேகரம்



யாழ்.தாவடியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சகுந்தலாதேவி சந்திர சேகரம் நேற்றுமுன்தினம் (07.11.2014) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான மார்க்கண்டு - அன்னபூரணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆனைப் பந்தியைச் சேர்ந்த பொன்னம்பலம் - செல்லம்மா தம்பதியரின் மருமகளும், Dr.சந்திரசேகரத்தின் அன்பு மனைவியும், நிமலன் (U.K), பூர்ணிமா (U.K), பிரசன்னா (Australia) ஆகியோரின் பாசமிகு தாயும், மீனா, பகீரதன், நிபாஷினி ஆகியோரின் அன்பு மாமியும், சுரபி, சமித்தா, சம்பூர்ணா, சஜீவ், தவீஷா, கீர்த்திக் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர் களான குமாரதாசன், ஜெயராணி மற்றும் சந்திராதேவி (U.K), ரவிச்சந்திரன் (U.K) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற வர் களான நடேசன், இராசரத்தினம் மற்றும் சரோஜினி, இந்திராணி, சூரியபகவதி, Dr.பேரானந்தன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.11.2014) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்..

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

59, தாவடி மானிப்பாய் வீதி,
தாவடி, கொக்குவில். (53891) (12.3)

தகவல்:
Dr.பொ.சந்திரசேகரம்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி




### அமரர் சண்முகவடிவேல் அம்பிகாவதி

திதி : 09.11.2014

ஆண்டுகள் இரண்டு ஆகியதோ
ஆதாரமே உம்மைப்பிரிந்து
பார்க்கும் இடமெல்லாம்
உம் விம்பம் தானே தெரிகிறது
நீர் வாழ்ந்த வீடின்று
கலகலப்பிழந்து வெறுமையில்
கனவினில் அடிக்கடி வரும் உன்முகம்
தினம் எம் நினைவில்
நின்று நிழல் ஆடுதம்மா
உற்ற உம் கணவரும்
பிள்ளைகளும் மருமக்களும்
பேரப்பிள்ளைகளும், பூட்டப்பிள்ளைகளும்
மற்றும் உறவுகளும்
கலங்கித் தவிக்கிறோம்.
உம் ஆத்மா சாந்தியடைய
என்றும் பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல் :
வெளிச்சவீட்டு ஒழுங்கை,
பருத்தித்துறை.

K.S.பாலகிருஷ்ணன்
(சட்டத்தரணி)

(51994)(7.3)

# வெளிநாட்டு நாணயங்களை கடத்த முயன்ற 4 பேர் கைது

ஒரு கோடியே 17 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய வெளி நாட்டு நாணயங்களை கடத்திச்செல்ல முற்பட்ட நால்வர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று சுங்கத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

4 ஆயிரத்து 900 அமெரிக்க டொலர்கள் மற்றும் ஒரு லட்சத்து 13 ஆயிரம் சவூதி ரியால்களுடன் டுபாய் செல்ல முற்பட்ட இருவர் நேற்றுமுன்தினம் இரவு விமான நிலைய அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டனர் என்று சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் லெஸ்லிகாமினி தெரிவித்துள்ளார்.

கொழும்பு - 12 மற்றும் கொலன்னாவைப் பகுதிகளைச் சேர்ந்த 47 மற்றும் 39 வயதுடைய இருவரே சுங்க அதிகாரிகளால் கைது செய் யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து இலங்கை ரூபா பெறுமதியில் சுமார் 46 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாவுக்கும் அதிக வெளி நாட்டு நாணயங்கள் பறிமுதல் செய் யப்பட்டுள்ளன.

இதேவேளை, 53 ஆயிரத்து 900 அமெரிக்க டொலர்களைக் கடத்திச் செல்ல முற்பட்ட யுவதி ஒருவர் உட்பட இருவர் நேற்றுமுன்தினம் மாலை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் கைதுசெய்யப்படுள்ளனர் என்று சுங்கத்திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் இருவரும் இந்தப் பணத்தை சிங்கப்பூர் கொண்டுசெல்ல முற்பட்டபோதே கைது செய்யப்பட்டுள் ளனர்.

தெமட்டகொடபகுதியைச்சேர்ந்த 34 வயது இளைஞர் மற்றும் வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 18 வயது யுவதி ஆகியோர் பெருந்தொகை அமெரிக்க டொலர்களை சிங்கப்பூருக்குச் கடத்திச்செல்ல முற்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட அமெரிக்க டொலர்களின் இலங்கைப் பெறுமதி 71 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகம் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் சுங்கப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தொடர்ச்சிகள்

### சர்வதேசத்தின்

கள் தோறும் புலனாய்வாளர்கள் செயற்படுகின்றனர். இலங்கை அரசினால் உருவாக்கப்பட்ட உள்ளூர் விசாரணைப் பொறிமுறையில், இராணுவத்துக்கு எதிராகச் சாட்சியம் வழங்குபவர்களையே புலனாய்வாளர்கள் அச்சுறுத்துகின்றனர்.

அவ்வாறு உள்ளூர் விசாரணைக்கு சாட்சியமளிப்பவர்களே அச்சுறுத்தப்படும் சூழ்நிலை காரணமாக, சர்வதேச விசாரணையில் சாட்சியமளிக்க மக்கள் முன்வரமாட்டார்கள்.

இலங்கை மீதான விடயத் தில் சர்வதேச நாடுகளின் அழுத்தங்கள் போதாது. அறிக்கைகளால் இலங்கை யின் நிலைமையில் எதுவித மாற்றமும் ஏற்படாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(த-5)

### ஐ.நா.

திலேயே இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் ஐ.நாவுடனான பேச்சுகளைப் பாதிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

ஐக்கிய நாடுகளின் இறைமையுள்ள தேசமாக 1955 முதல் காணப்படும் இலங்கை அரசின் நேர்மை குறித்து கேள்வி எழுப்பும் விதத்தில் தனிப்பட்ட ரீதியில் உங்களால் செய்திக் குறிப் பொன்று வெளியாகியுள்ளது கவலைக்குரியது. ஐக்கிய நாடுகளின் அமைப்புக்கு இலங்கை பல தராதரங்களில் பங்களிப்பு செய்துள்ளது குறித்து நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

வெளிவிவகார அமைச்சு 5 ஆம் திகதி வெளியிட்ட செய்திக் குறிப்பு எந்த அடிப்படையில் வெளியானது. அதில் குறிப்பிட்ட விடயங்கள் என்ன வென்பது குறித்து முழுமையாக அறிந்து கொள்ளாமல் உங்களுடைய செய்திக் குறிப்பு வெளியாகியுள்ளதும் துரதிர்ஷ்டவசமானது.

இலங்கை அரசும், அதன் திணைக்களங்களும், முகவர் அமைப்புகளும் எந்த வகையிலும் பாதிக்கப்பட்டவர்கள் விசாரணைக்குழுவுக்கு அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதைத் தடுக்க முயலவில்லை.

ஆதாரங்களைச் சமர்ப்பிப்பதை தடுப்பதற்கோ அல்லது அவர்களை அச்சுறுத்துவதற்கோ எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

குறிப்பிட்ட விசாரணைக் குழுவுக்கு தற்போதைக்குக் கிடைத்துள்ள ஆதாரங்கள், தகவல்களே இதற்குச் சான்றாகும்.

புனர்வாழ்வு அளிக்கப்படாத விடுதலைப்புலி என்ற அடிப்படையில் கைதுசெய்யப்பட்ட நபர் ஒருவர் குறித்து கிடைத்த ஆதாரங்களைத் தெரிவுசெய்யப்பட்ட தூதுவர்கள், மற்றும் பிரதிநிதிகளுக்கு இலங்கை அரசு தெரிவித்தது. பாதிக்கப் பட்டவர்களுக்கு ஐ.நா. நிதி உதவி வழங்குவதாகத் தெரிவித்து அவர்களிடமிருந்து வெற்றுக் கடதாசியில் கையெ ழுத்து வாங்கி பின்னர் அதனை போலியான ஆதாரங்களால் நிரப்பி ஐ.நா. விசாரணைக் குழுவுக்குச் சமர்ப்பிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கண்டு பிடிக்கப்பட்டமை குறித்து தெரியவந்துள்ளது.

ஐக்கியநாடுகள் விசாரணையை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குறித்து எச்சரிப்பதற் காகவே தூதுவர்களுக்கு இதுகுறித்து தெரிவிக்கப்பட்டது.

இதனுடன் தொடர்புபட்ட இன்னொரு கரிசனையும் இலங்கை அரசுக்குள்ளது. அது ஐக்கிய நாடுகள் விசாரணை குழுவுக்கு ஆதாரங்களை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு 30 ஆம் திகதி முடிவடைந்துள்ள போதி லும் - தாமதமாக வரும் ஆதாரங்கள் நிராகரிக்கப்படாது என இலங்கை ஊடக மொன்றுக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலக பேச்சாளர் தெரிவித்த விடயமாகும்.

இது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட காலஎல்லைக்கு முரணானதாகும். எனினும் உங்களது செய்திக் குறிப்பில் இந்த காலக்கெடு குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது ஆச்சரியமளிக்கின்றது. இவ்வாறான முரண்பாடான நிலைப்பாடுகள் இலங்கை குறித்து விசாரணை செய்யும் குழுவின் நேர்மை குறித்த கேள்வியையே எழுப்புகின்றன.

இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் நடைபெற்றவேளை திகதிகள், விசாரணை நடைபெறும் இடங்கள் உட்பட அனைத்து விடயங்களும் பொதுமக்களுக்கு பகிரங்கப் படுத்தப்பட்டன. தனிநபரோ அல்லது அமைப்போ, வெளிநாட்டவரோ அல்லது உள்நாட்டவரோ ஆணைக் குழுவை சந்திப்பதற்கான வாய்ப்பை வழங்கவே இந்த நடைமுறை பின்பற்றப் பட்டது.

வடக்குக் கிழக்கில் காணாமற் போனவர்கள் குறித்த ஆராயும் ஜனாதிபதி ஆணைக் குழுவும் இந்த அடிப்படையிலேயே செயற்படுகின்றது. இந்த அடிப் படையிலேயே ஐக்கிய நாடுகள் விசாரணைக்குழுவும் இதே வெளிப்படைத்தன்மையை பின்பற்ற வேண்டுமென இலங்கை அரசு எதிர்பார்க்கின்றது; பயிற்சி பெற்ற விசாரணையாளர்கள் குறித்த உங்கள் கருத்து வெளியாகியுள்ளது. சில தரப்புகள் குறிப்பிட்ட விசாரணையை தமக்கு சாதகமாக பயன்படுத்தப்படுவது குறித்து எச்சரிக்கையுடன் செயற்படுவோம் என்ற தொழில் சார் ரீதியான விளக்கத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் வெளியிட்டிருந் தால் அது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமைந்திருக்கும். எனினும் இதற்கு மாறாக விசாரணை நடைபெறும் விதம் குறித்து கேள்வி எழுப்புவதற்கு இறைமை யுள்ள தேசமொன்றுக்கு உள்ள உரிமை குறித்து சவால் விடுத்துள்ளீர்கள்.

இலங்கை அரசு ஐ.நா. விசாரணையை முற்றுமுழுதாக நிராகரித்துள்ளது என்பதன் அர்த்தம், அது தகவல்களை மறைக்க முயல்கின்றது என் பதல்ல என குறிப்பிட்டுள்ளார்.

(த)

### 29 ஐஸ்கிறீம்

முடியும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தயாரிக் கப்படும் ஐஸ்கிறீமில் மலத் தில் உள்ள கிருமித் தொற் றுக்கள் இருப்பதாகப் பரிசோத னையூடாகக் கண்டுபிடிக்கப் பட்டதன் அடிப்படையில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் குடாநாட்டில் உள்ள சகல ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்களும் பரிசோதனைக் குட்ப டுத்தப்பட்டன. அவற்றில் சுகாதாரமற்ற முறையில் இயங்கிய நிலையங்கள் உடனடியாக மூடப்பட்டன.

சுகாதார சேவைகள் பணிமனையால் இதற்கென விசேட குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு உற்பத்தி நிலையங்களைப் பார்வையிட்டதன் பின்னர் சுகாதாரமான முறையில் பொருத்தமாக உற்பத்திகளை மேற்கொள்ளும்ஐஸ்கிறீம்நிலையங்களுக்கு மட்டும் உடனடி அனுமதி வழங் கப்பட்டுள்ளன.

59 ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்கள் இதனால் பாதிக்கப் பட்டிருந்த நிலையில் உரிய அறிவித்தல்களுக்கு ஏற்ப சுகாதாரமான முறையில் உற்பத் திகளை மேற்கொள்ளுமாறும், அவற்றைப் பொருத்த முடையதாக மாற்றும் வரை தற்காலிகமாக நிறுத்து மாறும் சுகாதார சேவைகள் பணிமனை அறிவித்திருந்த நிலையில் உரிய நடை முறைகளைச் சீர்செய்த 29 உற்பத்தி நிலையங்களுக் குத் தற்போது அனுமதி வழங் கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட சங் கானை விதுசா கிறீம் கவுஸ், சாவகச்சேரி வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட சாவகச்சேரி அக்ஸான் ஐஸ் கிறீம், கொடிகா மம் கஜி கூல் பார், யாழ்ப் பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட நல்லூர் ராஜா கிறீம் கவுஸ், கோவில் வீதி நல்லூர் ராஜா கிறீம் கவுஸ் உற்பத்தி நிலையம், நல்லூர் பழமுதிர்ச் சோலை, நல்லூர் றியோ கிறீம் கவுஸ், நாச்சிமார் கோவில் ராஜா கிறீம், நல் லூர் றோயல் கிறீம் கவுஸ், நல்லூர் லிங்கம் கிறீம் கவுஸ், பிறவுண் வீதி லிங்கம் கிறீம் கவுஸ் உற்பத்தி நிலையம், கஸ்தூரியார் வீதி லிங்கம் கிறீம் கவுஸ், நல்லூர் சூர்யா, பரமேஸ்வராச் சந்தி சிவன் கிறீம் கவுஸ், யாழ்ப்பாணம் அமுல் கிறீம் கவுஸ், கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட கரவெட்டி ஸ்ரீ கிறிஷ்ணா, நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட நல்லூர் சைலோ ஐஸ்கிறீம், நல்லூர் யாழ்கோ பால் நிலையம், திருநெல்வேலி அற்லஸ் ஐஸ்கிறீம், கொக் குவில் பரணி கிறீம் கவுஸ் விற்பனை நிலையம், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பருத்தித்துறை நாகேஸ் கிறீம் கவுஸ், பருத்தித்துறை ராஜ் கிறீம்கவுஸ், பொலிகண்டி விஸ்ணு ஐஸ்கிறீம், பருத்தித் துறை நிதர்சன் கிறீம் கவுஸ், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட ஆனைக்கோட்டை விபூஸ் ஐஸ்கிறீம், மானிப் பாய் பரணி கிறீம் கவுஸ், உடுவில் வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட உடுவில் நியு சந்தோஸ் ஐஸ்கிறீம், கந்தரோடை ஜங் கரன் ஐஸ் கிறீம், கந்தரோடை நியு சந்திரா ஐஸ்கிறீம் ஆகிய உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏனைய அனுமதி வழங்கப்படாத விற் பனை நிலையங்கள் அனு மதிக்கப் பட்ட உற்பத்தி நிலை யங்களில் இருந்து கொள்வ னவு செய்து உரிய பற்றுச் சீட்டுக்களை விற்பனை நிலை யத்தில் வைத்துக்கொண்டு சுகாதாரமான முறையில் விற்பனை செய்யமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய விற்பனை நிலையங்களும் குறைபாடுகளை நிவர்த்தி செய்த பின்னர் இரு வாரங்களுக்குள் அனைத்து உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களுக் கும் அனுமதி வழங்கப்படவுள்ளது.

இனி சுகாதாரமற்ற ஐஸ்கிறீமைப் பருக நேரிடும் எனப் பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-14)

### குடிதண்ணீரை

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் அங்கு இடம்பெற்றது. அதில் சுகாதாரப் பணிமனை அதிகாரிகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் கலந்து கொண்டனர். அதன்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட இடங்களில் கை கழுவுதல் தொடர்பாக விழிப் புணர்வு ஏற்படுத்தப் படவுள்ளது. கொதித்து ஆறிய நீரைப் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதனால் அதனைத் தவறாது அனைவரும் செய்ய வேண்டும். அதனைக் கிராம மட்டத்திலிருந்து செய்ய வேண்டியுள்ளது. சிறிய கடைகள் தொடக்கம் பெரிய கடைகள் வரை உணவுப் பாதுகாப்புத் தொடர்பில் நடவடிக்கை எடுக் கப்படும்.

பாதுகாப்பான குடிதண்ணீரை உறுதி செய்யவேண்டும். அதற்காகக் கிணறுகள் தண்ணீர்த் தாங்கிகளுக்குக் குளோரின் இடுவது ஏற்கனவே செய்யப் படுகின்ற போதும் அதனால் போதிய பயன் கிடைக்காமையினால் அதனைக்கடுமையாக நடை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இது தவிர கிராம மட்டத்தில் பாது காப்பான தண்ணீரைக் குடிப் பதற்குக் கல்வி அறிவூட்டல் மேற்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-4)

### சீன நீர்மூழ்கி

கள் அதிகரித்துள்ளது குறித்து அமெரிக்காவும் இந்தியாவும் கவலை கொண்டுள்ளன. இருநாட்டுக் கடற்படைகளும் இதனை எச்சரிக்கையுடன் அவதானித்து வருகின்றன.

கொழும்புத் துறைமுகத்தில் சீன நீர்மூழ்கி தரித்து நிற்பதற்கு அனுமதி வழங்கியதற்கு அண்மைய வாரங்க ளில், இரண்டு முறை இந் தியா தனது ஆழ்ந்த அதி ருப்தியை இலங்கை அரசிடம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இருதரப்பு கடற்படைப் பயிற்சிகளை விரி வாக்குவது குறித்து இந்திய மற்றும் அமெரிக்க அதிகா ரிகள் விரிவாகக் கலந்துரை யாடியுள்ளனர். வொஷிங்ட னில், நடந்த பாதுகாப்புக் கொள்கைக் குழுக் கூட்டத்திலும், இது குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது எடுக்கப்பட்ட முடிவுகளின் தொடர்ச்சியாக, முதலில் மலபார் போர்ப் பயிற்சியில் அணுசக்தி நீர் மூழ்கிமற்றும் விமானந் தாங்கிக் கப்பல்களை இணைத் துக் கொள்ள முடிவெடுக்கப் பட்டுள்ளது. மேலும், இரு தரப்பும், கடற்படைப் போர்ப் பயிற்சியில், இராணுவம், விமானப் படைப் பிரிவுகளையும் இணைத்துக் கொள்வது குறித்தும் கவனம் செலுத்தியுள்ளன.

(த-5)

### குடாநாட்டில்

பாதிக்கப்படுபவர்கள் அந்தந்தப் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதிலிருந்து விடுபடுவதற்கு முக்கியமாக கொதித்து ஆறிய குடிதண்ணீரை எப்பொழு தும் பருகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. வயிற்றோட்டத்துக்குப் பிரதான காரணம் இதுவே. இதுமட்டுமன்றி நிலத்தில் விழுந்த பழங்களை உரிய முறையில் கழுவிப் பயன்படுத்தவேண்டும். உணவு வகைகளைக் கையாழும் போது சுகாதாரத்தைக் கடுமையாகப் பின்பற்றுங்கள். வீட்டிலும் சரி வெளியே உணவகங்களிலும் சரி இது கட்டாயம். உணவக நடத்துநர்களும் மிகச் சுகாதாரமாக உணவு களைக் கையாளவேண்டும் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர்.

(த-4)

### அமெரிக்காவின்

இது ஐ.நா. மீதான தாக் குதல் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கான அமெரிக்கத் தூதுவர் கீத் ஹாப்பர் கடந்த புதன் கிழமை டுவிட்டர் பதிவு ஒன்றில் எச்சரித்திருந்தார்.

இது குறித்து, டுவிட்டரில் தனது கருத்தைப் பதிவு செய் துள்ள நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், ஐ.நாவுக் கான அமெரிக்கத் தூதுவரின் கருத்து மிகவும் சரியானது என்று வரவேற்றுள்ளார்.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹூசைனும், இலங்கை அரசைக் கடுமையாகச் சாடி நேற்றுமுன்தினம் அறிக்கை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

(த-5)

### புனர்வாழ்வு

களின் தந்தையுான அவர் 2 வருடங்கள் புனர்வாழ்வு பெற்றிருந்தார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-4-101)

### நுவரெலியாவில்

களில் குடி யமர்வது உகந் ததல்ல என அறிக்கையி டப்பட்டுள்ளது.

எனவே, இந்த மக்களுக்கு மாற்று இடங்களை வழங்குவதற்கான காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று குமாரசிறி மேலும் தெரிவித்தார்.

### குறோஸ் வே நோத் கிண்ணம்

# யாழ்.இந்து-ஏஞ்சல் புளூ இறுதியில் பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 9
குறோஸ் வே நோத் வெற்றிக் கிண்ணத்திற்காக மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை நடத்திவரும் கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்று நடந்த பரபரப்பான அரையிறுதி ஆட்டங்களில்யாழ். இந்துக்கல்லூரி மற்றும் ஏஞ்சல் புளூ ஆகியன வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குள் நுழைந்தன.

முதல் அரையிறுதி ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ்கல்லூரிஅணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதலே பரபரப்பாக இருந்தது. முதல் பாதியில் பற்றிக்ஸ் 12 புள்ளிகளையும் யாழ். இந்து 8 புள்ளிகளையும் பெற்றன. இரண்டாம் பாதியிலும் பற்றிக்ஸின் ஆதிக்கம் தொடர்ந்தது. 10 புள்ளிகளைப் பெற்றது. 9 புள்ளிகளை டெவ்னி பெற்றுக்கொடுத்தார். யாழ். இந்துவால் 7 புள்ளிகளை மட்டுமே பெறமுடிந்தது.

மூன்றாம்பாதியில் சீறிப் பாய்ந்தது யாழ். இந்து. 18 புள்ளிகளை அள்ளியது. சுபாங்கன் பாய்ந்தாடி 10 புள்ளிகளைப் பெற்றார். பற்றிக்ஸ் 8 புள்ளிகளைப் பெற்றது.

நான்காம் பாதி இரு அணிகளுக்கும் உண்மையான பலப்பரீட்சையாக அமைந்தது. தலா 9 புள்ளிகளைப் பெற்றன. முடிவில் யாழ். இந்துக் கல்லூரி 43 :40 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாடத்திற்குள் நுழைந்தது.

மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் ஏஞ்சல் மரூன் அணியும் ஏஞ்சல் புளூ அணியும் மோதின. இரு அணிகளும் ஒரே பாடசாலையைச் சேர்ந்தவை என்றாலும் ஒன்றுக்கொன்று சளைக்காமல் ஆடின. முடிவில் ஏஞ்சல் புளூ 37:20 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டதிற்கு தகுதி பெற்றது.

எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியும் ஏஞ்சல் புளூ அணியும் மோதவுள்ளன.

**லீக் ஆட்டத்திலும் யாழ். இந்து வெற்றி**

முன்னதாக, இந்தத் தொடரின் லீக் ஆட்டம் ஒன்று நேற்றுக் காலையில் நடைபெற்றது. அதில் யாழ். இந்துக் கல்லூரி அணி 19 புள்ளிகள் வித்தியாசத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணியை வென்ற பின்னரே அரையிறுதிக்குள் நுழைந்தது.

முதல் பாதி ஆட்டத்தில் இந்துக் கல்லூரி 10 புள்ளிகளையும். வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் 6 புள்ளிகளையும் பெற்றன. இந்துக் கல்லூரியின் கீர்தனன் 6 புள்ளிகளைப் பெற்றார்.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் இந்துக் கல்லூரியின் கையே ஓங்கியிருந்தது. அது16 புள்ளி களையும் வவுனியா தமிழ் ம. ம. வி. 5புள்ளிகளையும் பெற்றன. யாழ். இந்துக்கல்லூரி இந்துவின் ஆதவன் 9 புள்ளிகளையும், கீதப்பிரியன் 5 புள்ளிகளையும் பெற்றனர். வவுனியா தமிழ் ம.ம. வியின் கபிலன் 6 புள்ளிகளைப்பெற்றார்.

மூன்றாம் பாதிஆட்டத்தில் வீறு கொண்டெழுந்த வவுனியா தமிழ் ம.ம.வி. அணி அதிரடியாக ஆடியது. 10 புள்ளிகளை அள்ளியது. அத்தனை புள்ளிகளையும் தனியொரு ஆளாக கபிலன் பெற்றார். இந்துக் கல்லூரி 6 புள்ளிகளை மட்டுமே பெற்றது.

நான்காம் பாதி ஆட்டம் மந்தமாக இருந்தது. வீரர்கள் சோர்ந்து காணப்பட்டனர். தொடர்ந்து விளையாடுவதற்கு வேண்டிய சத்தில்லாதவர்கள்போல் தோன்றினர். இந்துக் கல்லூரி 5 புள்ளிகளையும் வவுனியா தமிழ் ம.ம.வி. 9 புள்ளிகளையும் பெற்றன. ஆட்ட நேரமுடிவில் யாழ். இந்தக் கல்லூரி அணி 49:30 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

(உ-23)

# கலிஸ்ரனின் அபார கோலால் பாசையூர் அன்ரனிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், நவம்பர் 9
யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவ அணிகளுக்கிடையில் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனீஸ் ஒரு கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.



பாடும்மீன் விளையாட்டு மைதானத்தில் ஊரெழு றோயல்ஸ் அணியை எதிர்த் தாடியது.

விறுவிறுப்பிற்கு பஞ்சமே இல்லாமல் இடம்பெற்றது ஆட்டம். முதற்பாதி வரை இரு அணிகளும் எவ்வளவு முயன்றும் கோல் அடிக்க முடியவில்லை. இடைவேளையின் பின் இருபதாவது நிமிடத்தில் அன்ரனீஸ் வீரர் கலிஸ்ரன் அற்புதமாகப் பந்தை கோல் கம்பங்களுக்குள் தள்ளினார். காப்பாளர் பாய்ந்து தடுக்க முயன்றபோதும் அவரைத் தாண்டிப் புகுந்த பந்து கோலானது. அதுவே அடிக்கப்பட்ட ஒரே கோலாகவும் இருந்தது. அன்ரனீஸின் வெற்றிக்கும் வித்திட்டது.

லீக்கின் இரண்டாம் நாளான நாளையதினம் குருநகர் பாடும்மீன் விளையாட்டு மைதானத்தில் பாடும்மீன் அணிக்கும் ஊரெழு றோயல்ஸ் அணிக்கும் இடையிலான போட்டி இடம்பெறவுள்ளது. (உ-ரி)

# ஹாட்லி மாணவனுக்கு தட்டெறிதலில் தங்கம்

கரணவாய், நவ.8
தேசிய மட்டத்தில் இடம்பெற்ற சேர் ஜோன் றெபோட் இளையோருக்கான தடகளப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் பா. ஆனந்த் தட்டெறிதல் நிகழ்வில் முதலாமிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார். அத்துடன் இவர் 2017 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள இளையோர் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் குழுவிற்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

போட்டிகள் கடந்த 2ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை எம்பிலிப்பிட்டிய மகாவலி விளையாட்டு அரங்கில் இடம் பெற்றது. இதில் 14 வயதுக்குட்பட்டோருக்கான தட்டெறிதல் போட்டியில் பங்குபற்றினார் ஆனந்த். 37.33 மீற்றர் தூரத்துக்கு தட்டெறிந்து புதிய சாதனை ஒன்றை நிலை நாட்டி தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

இதேவேளை 15 வயதுக்குட்பட்டோருக்கான தட்டெறிதல் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் மற்றொரு மாணவனான மு. அபிராம் 36.56 மீற்றர் தூரம் எறிந்து சிறப்புச் சான்றிதழைப் பெற்றுள்ளார். இவர் கடந்த மாதம் இடம்பெற்ற அகில இலங்கைப் பாடசாலைகள் தடகளப் போட்டியில் தட்டெறிதல் நிகழ்வில் 38.72 மீற்றர் எறிந்து 4ஆம் இடத்தைப் பெற்றவர்.



இந்தப் போட்டியில் வடமாகாணத்திலிருந்து ஹாட்லியின் இரு மாணவர்களுமே பங்குபற்றியிருந்தனர். (உ)

# இன்றைய ஆட்டம்

யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில லீக் முறையில் நடத்திவரும் போட்டியில் இன்று நடைபெறும்ஆட்டங்களின்விவரம் வருமாறு:

பாசையூர் சென். அன்ரனிஸ் மைதானத்தில் இடம்பெறும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் மாலை 3.15 மணிக்கு ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில்மாலை 3.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி மோதும். மாலை 4.30 மணிக்கு மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(உ-23)

# அஞ்சலோட்ட காணிவெல் இன்று



யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கம் முதன் முறையாக யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்தும் அஞ்சல் ஓட்ட காணிவெல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இதில் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 14, 16, 18, 20 வயது பிரிவு வீர வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளனர். (உ-23)

# யாழ்.இந்துக் கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், நவ. 9
குறோஸ் வே நோத் வெற்றிக் கிண்ணத்திற்காக மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடந்த ஆட்டத்தில் யாழ். இந்துக்கல்லூரி அணி 19 புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.



மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியால அணியும் மோதின.

முதல் பாதி ஆட்டத்தில் இந்துக் கல்லூரி 10 புள்ளிகளையும். வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் 6 புள்ளிகளையும் பெற்றன. இந்துக் கல்லூரியின் கீர்தனன் 6 புள்ளிகளைப் பெற்றார்.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் இந்துக் கல்லூரியின் கையே ஓங்கியிருந்தது. அது 16 புள்ளிகளையும் வவுனியா தமிழ் ம.ம.வி 5புள்ளிகளையும் பெற்றன. யாழ். இந்துக் கல்லூரி இந்துவின் ஆதவன் 9 புள்ளிகளையும், கீதப்பிரியன் 5 புள்ளிகளையும் பெற்றனர். வவுனியா தமிழ் ம.ம. வியின் கபிலன் 6 புள்ளிகளைப் பெற்றார்.

மூன்றாம் பாதிஆட்டத்தில் வீறு கொண்டெழுந்த வவுனியா தமிழ் ம.ம.வி. அணி அதிரடியாக ஆடியது. 10 புள்ளிகளைங் அள்ளியது. அத்தனை புள்ளிகளையும் தனியொரு ஆளாக கபிலன் பெற்றார். இந்துக் கல்லூரி 6 புள்ளிகளை மட்டுமே பெற்றது.

நான்காம் பாதி ஆட்டம் மந்தமாக இருந்தது. வீரர்கள் சோர்ந்து காணப்பட்டனர். தொடர்ந்து விளையாடுவதற்கு வேண்டிய சத்தில்லாதவர்கள்போல் தோன்றினர். இந்துக் கல்லூரி 5 புள்ளிகளையும் வவுனியா தமிழ் ம.ம.வி. 9 புள்ளிகளை யும் பெற்றன. ஆட்ட நேரமுடி வில் யாழ். இந்தக் கல்லூரி அணி 49:30 என்ற பள்ளி அடிப்படை யில் வெற்றி பெற்றது. (உ-23)

# விக்ரோறியா வெற்றி

வலி வடக்கு, நவ, 08
யாழ் மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் 13 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியின் ஆட்டம் ஒன்றில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லுரி முதல் இனிங்ஸ் ஓட்டங்களின் எண்ணிக்கையில்வெற்றி பெற்றது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியா 32.5 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றது.

சியாமளன் ஆகக்கூடுதலாக 22 ஓட்டங்களைப் பெற்றார். உதிரிகளாக 32 ஓட்டங்கள் பெறப்பட்டன. அங்கவன் 12 பந்துப் பரிமாற்றங்களில் 36 ஓட்டங்களுக்கு 03 இலக்குகளையும் வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 23.4 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 71 ஓட்டங்களைமட்டுமே பெற்றது. சாரங்கன் அதிகூடுதலாக 10 ஓட்டங்களைப் பெற்றார். உதிரிகளாக 21 ஓட்டங்கள் கிடைத்தன. புவிதரன் 8 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு 04 இலக்குகளைவீழ்த்தினார். இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியாக் கல்லூரி 31.2 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. புவிதரன் 17 ஓட்டங்களை பெற உதிரிகளாக 34 ஓட்டங்கள் பெறப்பட்டன. ஹரிகரன் 2 பந்துப்பரி மாற்றங்கள் பந்துவீசி 3 இலக்குகளையும் சாருகன் 9 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 3 இலக்குகளையும் வீழ்த்தினர். தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 10 பந்துப் பரிமாற்றங்களுக்கு 5 இலக்குகளை இழந்து 35 ஓட்டங்களை பெற்றது. சியாமளன் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (உ-86)

# இறுதி ஆட்டம் இன்று

யாழ். இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

(உ-23)

# தென்னாபிரிக்காவுக்கு ஆஸ்திரேலியா பதிலடி




தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2ஆவது 20/20 கிரிக்கெட் போட்டியில் 7 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி கண்டது ஆஸ்திரேலியா. இதன்மூலம் முதல் போட்டியில் தென் ஆப்பிரிக்காவிடம் கண்ட தோல்விக்கு பதிலடி கொடுத்துள்ளது ஆஸ்திரேலியா.

மெல்போர்னில் நேற்று முன் தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணியில் டி கொக் டக் ஆட்டமிழந்தார். இதன்பிறகு ஆஸ்திரேலியாவின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் தென்னாபிரிக்கா திணறியது. இதனால் ரொசாவ் 12, ஹென்ரிக்ஸ் 18, பெஹார்டியன் 5, டேவிட் மில்லர் 11, மெக்லாரன் 1 என அடுத்தடுத்து வேகமாக வெளியேறினர்.

எனினும் மறுமுனையில் தாக்குப்பிடித்து ஆடிய அணித் தலைவர் டுமினி 51 பந்துகளில் 1 சிக்ஸர், 3 பவுண்டரிகளுடன் 49 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இறுதியில் தென்னாபிரிக்கா 20 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகள் இழப்புக்கு 101 ஓட்டங்கள் சேர்த்தது. ஆஸ்திரேலியத் தரப்பில் பக்னர் 4 பந்துப்பரிமாற்றங்களில் 25 ஓட்டங்கள் கொடுத்து 3 இலக்குகளை வீழ்த்தினார். கமரூன் பாய்ஸ் 4 பந்துப்பரிமாற்றங்களில் 15 ஓட்டங்கள் கொடுத்து 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பின்னர் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணிக்கு பென் டங்க்-அணித் தலைவர் ஆரோன் பிஞ்ச் 4.4 பந்துப்பரிமாற்றங்களில் 43 ஓட்டங்கள் சேர்த்து ஜோடி அதிரடி தொடக்கம் ஏற்படுத்திக் கொடுத்தது. 20 பந்துகளைச் சந்தித்த பென் டங்க் 23 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, ஆரோன் பிஞ்சுடன் இணைந்தார் வட்சன்.

அதிரடியாக ஆடிய இந்த ஜோடி ஆஸ்திரேலியா 92 ஓட்டங்களை எட்டியபோது பிரிந்தது. வட்சன் 23 பந்துகளில் 30 ஓட்டங்கள் சேர்த்து வெளியேற, பின்னர் வந்த மக்ஸ்வெல் டக் அவுட்டானார். இதையடுத்து கமரூன் வைட் களமிறங்க, 12.4 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகள் இழப்புக்கு 102 ஓட்டங்கள் எடுத்து வெற்றி கண்டது ஆஸ்திரேலியா. ஆரோன் பிஞ்ச் 30 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன் 44, வைட் 1 ஓட்டத்துடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆஸ்திரேலியச் சுழற்பந்து வீச்சாளர் கமரூன் பாய்ஸ் ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார். (த)

## டெண்டுல்கரை மிரட்டிய பாக். பந்து வீச்சாளர்கள்

கிரிக்கெட் போட்டிகளுக்கு அறிமுகமான போது பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களைப் பார்த்து தான் மிரண்டுபோனதாக சச்சின் தனது சுயசரிதையில் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

பாகிஸ்தானுக்கு எதிராக டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகமானபோது அப்போதைய தலைசிறந்த பந்துவீச்சாளர்களான வாசிம் அக்ரம், வக்கார் யூனிஸ் உள்ளிட்டோரின் பந்துவீச்சை எதிர்கொண்டது எனக்கு மிக மோசமான அனுபவ




மாக அமைந்தது. இம்ரான் கான், வாசிம் அக்ரம், வக்கார் யூனிஸ், ஆகிப் ஜாவேத் போன்ற வேகப்பந்து வீச்சாளர்களும், முஷ்டாக் அஹமது, அப்துல் காதர் போன்ற லெக் ஸ்பின்னர்களும் வீசிய பந்தை எதிர்கொண்டேன். எந்தவொரு அறிமுக வீரருக்குமே மேற்கண்ட வீரர்களின் பந்துவீச்சை எதிர்கொள்வது கடுமையான சோதனை தான்.

அப்போது எனக்குள் ஏற்பட்ட பயத்தால் என் திறமையின் மீது எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடும் திறமை நம்மிடம் இருக்கிறதா என்ற கேள்வி எனக்குள் எழுந்தது என குறிப்பிட்டுள்ளார். (த)

## மத்தியூஸ் சாதனை

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இந்த ஆண்டு அதிக ஓட்டங்கள் எடுத்த வீரராக இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் இருக்கிறார்.

இவர் இந்த ஆண்டு ஒருநாள் போட்டிகளில் விளையாடி 838 ஓட்டங்கள் குவித்துள்ளார். இவருக்கு அடுத்தபடியாக 800 ஓட்டங்களுக்கு மேல் குவித்தவர் வரிசையில் சங்கக்கார 802 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

2ஆவது ஒருநாள் போட்டியில் மத்தியூஸ் தனது 23 ஆவது அரைச்சதம் அடித்தார். ஆனால் 135 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள இவர் ஒரு சதம் கூட அடிக்கவில்லை. அந்த வரிசையில் பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக், நியூசிலாந்தின் ஆண்டிரூவ் ஜோன்ஸ் ஆகியோர் இருக்கின்றனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டில் இருந்து இந்தியாவுக்கு எதிரான போட்டியில் இலங்கை 12 முறை முதல் ஓவரில் இலக்கை இழந்துள்ளது. மற்ற எந்த அணியுடனும் முதல் ஓவரில் இலக்கைப் பறிகொடுத்தது இல்லை.

மற்ற அணிகளுடன் ஒப்பிடும் போது இந்திய அணி, 8 முறை இலங்கை இலக்காக வைத்த 275 ஓட்டங்களை வெற்றிகரமாக கடந்துள்ளது. (த)




## இந்திய சுற்றுப் பயணம் மிகச் சரியான முடிவுதான்


இந்தியாவின் அழைப்பை ஏற்று விளையாடுவது சரியான முடிவு தான் என்று இலங்கையின் முன்னாள் ஜாம்பவான் முரளிதரன் கூறியுள்ளார்.

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்த மேற்கிந்திய தீவுகள் அணி, தொடரை பாதியிலே நிறுத்தியது. இதனால் இந்திய அணி இலங்கையை ஒருநாள் தொடரில் விளையாடுமாறு அழைப்பு விடுத்தது. இந்த அழைப்பை ஏற்று இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்த இலங்கை அணி அங்கு 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.



உலகக்கிண்ண தொடருக்குத் தயாராகிக் கொண்டு இருக்கும் போது இந்த அவசர தொடரில் விளையாடுவது மற்றும் இந்தியாவின் அழைப்பை ஏற்பது சரியான முடிவு இல்லை என முன்னாள் அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்க கருத்துத் தெரிவித்தார். இந்நிலையில் இந்தியாவின் அழைப்பை ஏற்றது சரியான முடிவு தான் என முத்தையா முரளிதரன் கூறியுள்ளார். மேலும், இதுபற்றி அவர் கூறுகையில், இந்தியா, இலங்கை தொடர் என்பது ஒரு சிறந்த தொடர். கடந்த ஒரு வருடமாக ஆசிய கிண்ணம், 20/20 உலகக்கிண்ணம், இங்கிலாந்து டெஸ்ட் தொடர் ஆகியவற்றைக் கைப்பற்றிய இலங்கை அணி சிறந்த ஒரு நிலையில் இருக்கிறது. அதனால் இந்திய அணியுடன் மோதல் என்பது சரியான முடிவு தான். மேலும் இந்த தொடரில் காயத்தால் வெளியேறியுள்ள மலிங்கா அடுத்த ஆண்டு நடக்கவுள்ள உலகக்கிண்ணப் போட்டிகளில் அசத்தலாக களமிறங்குவார் எனத் தெரிவித்துள்ளார். (த)


நூல் வெளியீட்டு விழா




யாழ்ப்பாணம் திசைகாட்டி குழுமத்தின் ஆதரவுடன்

என் எழுத்தாயுதம்!

[ ஒரு பத்திரிகையாளனின் பட்டறிவுப் பகிர்வு ]

என். வித்தியாதரன்

மூத்த தமிழ் ஊடகவியலாளர்

காலம் : 09.11.2014 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : மாலை 4.30 மணி

இடம் : சரஸ்வதி மண்டபம், பம்பலப்பிட்டி

தலைமை : கே.வி.தவராசா (சிரேஷ்ட சட்டத்தரணி)

முன்னிலை : வி.எஸ்.நிரஞ்சன் (சட்டத்தரணி, ஸ்தாபகர், 'திசைகாட்டி' குழுமம்)

நிகழ்ச்சி நிரல்

தமிழ்த்தாய் வாழ்த்து

வரவேற்புரை : திரு. சி.சுபசீலன் (சிரேஷ்ட உறுப்பினர், இயக்குநர் சபை, 'திசைகாட்டி' குழுமம்)

தலைமையுரை

வாழ்த்துரைப்போர் : திரு. எஸ்.தவராஜா (எதிர்க்கட்சித் தலைவர், வடக்கு மாகாண சபை)
திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (தலைவர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி)
திரு. மனோ கணேசன் (தலைவர், ஜனநாயக மக்கள் முன்னணி)
கௌரவ ஏ.எச்.எம்.அஸ்வர் நா.உ.
கௌரவ அமைச்சர் ரவூப் ஹக்கீம் நா.உ. ( தலைவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்)
கௌரவ இரா.சம்பந்தன் நா.உ., ( தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
கௌரவ ரணில் விக்கிரமசிங்க நா.உ., ( எதிர்க்கட்சித் தலைவர்)

வெளியீட்டுரை : கம்பவாரிதி இ.ஜெயராஜ்

வெளியிட்டு வைப்பவர் : கௌரவ ஈ.சரவணபவன் நா.உ. ( நிர்வாக இயக்குநர் - 'உதயன்', 'சுடர் ஒளி')

பிரதிகள் பெறுவோர் : கௌரவ ஏ.ஜே.எம்.முஸம்மில் (கொழும்பு நகர பிதா)
திரு. குமார் நடேசன் (நிர்வாக இயக்குநர், 'வீரகேசரி')
திரு. எஸ்.பி.எஸ்.கேசவராஜா (நிர்வாக இயக்குநர் -'தினக்குரல்')
திரு. கருணை ஆனந்தன் (ஸ்தாபகத் தலைவர், நாவலர் நற்பணி மன்றம்)
திரு. செல்வ. திருச்செல்வன் (இயக்குநர், ரி.ஏ. கென்ஸ்ரக்ஸ்சன்ஸ்)

நயப்புரை : திரு.ஜி.இராஜகுலேந்திரா ( சிரேஷ்ட சட்டத்தரணி)

ஏற்புரை : நூலாசிரியர்

நிகழ்ச்சித் தொகுப்பு : தம்பு சிவா

நூல் வெளியீட்டுக் குழு

# தேர்தல் அறிவிப்புக்கு முன்பே கட்சித்தாவல் பேச்சுகள் தீவிரம்

## இருதரப்பு 'பல்டி'க்கு சாத்தியம்; மங்களவை தடுக்க சந்திரிகா களத்தில்

கொழும்பு, நவ.9

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்பு உத்தியோகபூர்வமாக வெளியாவதற்கு முன்னரே, கட்சித்தாவல்கள் குறித்த பேச்சுகள் தீவிரமடைந்துள்ளன. இதனால், அரசியல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது.

குறிப்பாக எதிரணியிலுள்ள முக்கிய புள்ளிகளை குறி வைத்து ஆளுங்கட்சியும், அரச தரப்பிலுள்ள அதிருப்தியாளர்களை இலக்கு வைத்து எதிரணியும் இரகசியப் பேச்சுகளை முடுக்கிவிட்டுள்ளன.

அமைச்சு பதவிகளையும், சலுகைகளையும் முன்னிலைப்படுத்தி அரச தரப்பு பேரம் பேசும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது என அறிய முடிகின்றது. இதன் ஓர் அங்கமாக, அரசு பக்கம் இருந்து ஐ.தே.க.பக்கம் தாவிய மங்கள சமரவீர எம்.பிக்கு ஆட்சி பீடம் வலைவிரித்துள்ளது. இது குறித்து மங்கள எம்.பியும் மௌனமாகவே இருக்கின்றார். அவர் இதுவரையில் மறுப்பு தெரிவிக்கவில்லை.

இதனால், சிங்கபூருக்குச் சென் றுள்ள அவரை, சமாளிக்கும் நடவடிக்கையில் ஐ.தே.க. உறுப்பினர்கள் சிலர் இறங்கியுள்ளனர் என்றும், இதற்காக சந்திரிகா அம்மையாரின் உதவியை நாடியுள்ளனர் என்றும் ஐ.தே.க. வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. அத்துடன், ஐ.தே.கவின் மாகாண சபை உறுப்பினர்கள் இருவரையும், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் சிலரையும் அரசு குறிவைத்துள்ளது என அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. மங்கள எம்.பியை மீண்டும் அரசு பக்கம் எடுக்கக்கூடாது என சு.கவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்தியுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையில், அரசுமீது அதிருப்தியில் இருக்கும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களை



ஐ.தே.க. சந்தித்து வருவதாகவும், சுயாதீனமாகச் செயற்படும் இரண்டு எம்.பிக்கள் தேர்தல் அறிவிப்புக்கு பின் னர் ஐ.தே.கவில் இணைவார்கள் என்றும் அறிய முடிகின்றது. எனினும், இவை பற்றி இன்னும் உத்தியோகபூர்வ தகவல்கள் வெளியாகவில்லை.

அத்துடன், அரச பங்காளிக் கட்சியாகத் திகழும் ஜாதிக ஹெல உறுமய அரசிலிருந்து வெளியேறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனை அக்கட்சி தற்போது நிராகரித்திருந்தாலும், கொள்கைத் திட்டத்துக்கு அரசு பச்சைக்கொடி காட்டாத பட்சத்தில் கட்சிதாவல் இடம்பெறுவது உறுதி என்ற தொனியில் கருத்து வெளியிட்டு வருகின்றது. 23ஆம் திகதிக்குள் அரசு பதில் வழங்காவிட்டால், பட்ஜட்டுக்கு எதிராக வாக்களிக்கவும் ஹெல உறுமய முடிவெடுத்துள்ளது. எனினும், அரச கூட்டணியில் ஹெல உறுமய நீடிக்கும் என்று அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா நேற்று தெரிவித்தார்.


கணினிப்பொறியியலாளர்(USA) கற்கைநெறிக்கு
400 டொலர் புலமைப்பரிசில்.

தொழில் வாய்ப்பு அதிகம் உள்ள MCSE பரீட்சைக் கட்டணங்களிற்கான 80 டொலர் பெறுமதி மிக்க வவுச்சர்கள் 5 இனை மைக்ரோசொப்ற் நிறுவனம் இலவசமாக வழங்குகின்றது. கற்கை நெறிக்கான செலவுகளை ICTA வழங்குகின்றது.
உடனடிப் பதிவிற்கு தங்களின் முழுப்பெயர், பிறந்த திகதி என்பவற்றை 772 395 895 ற்கு உடன் sms செய்யவும். மேலதிக விபரங்கள் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகில் உள்ள MCS நிறுவனத்தில்.

R. மயூரன் ஆசிரியரின்
ஜேர்மன் கல்லூரி

ஜேர்மன் தூதரகத்தால் October மாதம் நடத்தப்பட்ட Deutsch, A1 பரீட்சையில் இந்த ஆசிரியரிடம் கல்வி கற்று சித்தியடைந்த மாணவர்களில் சிலர்

Arudpirakasam Archchana - 78 (2nd Rank)
Thangarasa Aravinthan - 74
Sampamoorthi Kiriya - 71
Thanusiya Thanapalasingam - 66

இந்த ஆசிரியர் ஜேர்மன் தூதரகத்தில் கல்வி கற்று பின்பு ஜேர்மன் சென்று வந்தவர். இவரின் வகுப்புக்கள் சாவகச்சேரி, யாழ்ப்பாணம், நெல்லியடி ஆகிய இடங்களில் நடைபெறுகின்றன. (47329)(10.6.3)

தொடர்பு: Mr. R. Mayooran
077 6454 998

குறுகிய நேரத்திலும் குறைந்த செலவிலும்
நிர்மாண வேலைகளை செய்து கொள்ள...




Smart Kings (Pvt) Ltd.
ஸ்மார்ட் கிங்ஸ் (பிறைவேற்) லிமிட்
Hotline 077 375 4040
Head Office: 684A, Colombo Road, Kurana/Negombo
148, Station Road, Jaffna.(Railway Station அருகாமை)
Tel : 021 730 6099 Fax : 021 454 6699
Email : kuhan79@live.com

German Language Academy
(கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி)
ஜேர்மனி, சுவிஸ், டொச் மொழிகள் இலகுவான வழியில் ஜேர்மன் தூதரகத்தினால் நடத்தப்படும். A1 பரீட்சைக்கு ஏற்றவாறு ஜேர்மனியில் வசித்துவந்த ஆசிரியர் S.கோணேஸ்வரன் அவர்களால் கற்பித்துக் கொடுக்கப்படுகின்றது.
* ஒவ்வொரு பரீட்சையிலும் 90% மாணவர்கள் சித்தியடைவது குறிப்பிடத்தக்கது. (53833)(7.6.3)
புதிய பிரிவுகள் ஆரம்பம் : நாளை 10.11.2014 நேரம் : 10.30am
ஆரியகுளம் சந்தி S.கோணேஸ்வரன் 077 970 7322

பிரத்தியேக / குழு வகுப்புக்கள்
கணக்கீடு / வணிகக்கல்வி
A/L 2015, A/L 2016 & Day Batch,
AAT, Banking Classes (சி/17289)(10)
Mobile: 0755287808, 075 077 5660

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

தேவை
* பலாலி வீதி, திருநெல்வேலி, கந்தர்மடம் பகுதியிலும்
* கே.கே.எஸ் வீதி - கொக்குவில் பகுதியிலும்
* நல்லூரடியிலும்
4 தொடக்கம் 5 பரப்புக் காணி உடனடியாகத் தேவை.
(இடைத்தரகர் தேவையில்லை)
தொடர்புகளுக்கு : 077 354 8552 (53835)(7.6.3)

பிரத்தியேக வகுப்புகள்
உயர்தரம் - கணக்கீடு
வங்கி கற்கைகள் - CBF மற்றும் DBF
(53828)(12.3) தொடர்பு: 077 595 7483

இந்திய சாஸ்திரியார் வருகை
யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.
ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா, வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா?, எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.
காலை 9 மணி முதல்
மாலை 5.00 மணி வரை.
இல.97/8, கண்ணகி அம்மன் கோயில் ஒழுங்கை, கோப்பாய் வீதி, உரும்பிராய், யாழ்ப்பாணம்.
(உரும்பிராய் சந்திக்கு அருகில்) (50509)(4.3.6)
T.P: 072 681 6681, 072 681 6691


# மரண அறிவித்தல்

## திருமதி மகாலட்சுமி தில்லைநாயகம்

### (சாமியார்)



வேலணை மேற்கு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல 21, ஓட்டுமடம் வீதி, வண்ணார் பண்ணையை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி மகாலட்சுமி தில்லைநாயகம் 06.11.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்கான கந்தசாமி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தில்லைநாயகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேதநாயகம் மற்றும் தேவநாயகம் (கொலண்ட்), மேனகா (கனடா), தவநாயகம் (டென்மார்க்), மைவிழி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்வராணி (கொலண்ட்), சிவநாதன் (கனடா), வனஜா (டென்மார்க்), தவக்குமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற பரநிருபசிங்கம் மற்றும் சிவபாக்கியம், காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் விஜயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், றமணி காலஞ்சென்றவர்களான ராசரெத்தினம், ராசன் மற்றும் திருச்செல்வம், காலஞ்சென்ற ராசநாயகம் ஆகியோரின் மைத்துனியும், திவாகர், சகானா, சங்கீதா, கிசோர், றதீசன், அக்ஷையா, அனிர்ஷன், ராகுல், கபிஷா, யஸ்மிதா, கரிஷா, சந்தோஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2014) ஞாயிற்றுக்கிழமை இல 21 ஓட்டுமடம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வேலணை அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல் 21, ஓட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
T.P:- 021 222 1561


விரைவான வேலை மூலம்
நிறைவான இலாபம்
பெற வேண்டுமா?
ஜூஸ் பக்கெட் மெசின்




தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD

தேவை
காங்கேசன்துறை ரயில் நிலைய கட்டடப் பணிகளுக்கு வேலை செய்வதற்கு மேசன்மார், சட்டறிங் செய்யக்கூடிய தச்சுத் தொழிலாளிகள் தேவை. தொடர்புகளுக்கு : (சி/17300)(7.6.3)
071 454 0731, 077 375 1803


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.